Follow us:

வாரவெளியீடு

தமிழன்

THAMILAN

தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 124 சுபகிருது வருடம், ஐப்பசி மாதம் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (06.11.2022) ஹிஜ்ரி-1444, ரபிஉல் ஆகிர் - 11, 0115886187 - பக்கங்கள் 20+8+8+8

விலை ரூ.130

முன்னாள் ஜனாதிபதி மைத்ரிக்கு கொரோனா!

முன்னாள் ஜனாதிபதி மைத்திபால சிறிசேன கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளார்.

கொரோனா தொற்றுக்கான அறிகுறிகள் தென்பட்டதையடுத்து, முன்னாள் ஜனாதிபதி...

02 ஆம் பக்கம்

நக்கல் நமசிவாயம்

'வெடி'மணியம்



தமிழ் அரசியல்வாதிகளுக்கும் தமிழ்க்கட்சிகளுக்கும் முன்னுதாரணமாக தம்பி மனோ கணேசன் ஒரு விடயத்தை செய்துகாட்டியிருக்கிறார்.

தமிழர் முற்போக்கு கூட்டணியின் தலைமைக திறப்பு விழாவில் எதிரும் புதிருமாக இருந்த மலையக கட்சிகளை நட்புடன் அழைத்து "ஒற்றுமைக்கான" அடிக்கல்லையும் சேர்த்து நாட்டியிருக்கிறார்.

மனோ கணேசனின் ஒரு சில அரசியல் செயற்பாடுகளில் விமர்சனங்கள் இருந்தாலும்;

அவை எல்லாவற்றையும் புறந்தள்ளிவிட்டு இந்த செயலை மனதாரப் பாராட்டியே ஆகவேணும்.

வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ்க்கட்சிகள் ஒரு காலத்தில் மலையகத்தில் இருந்து செயற்பட்ட கட்சிகளுக்கு முன்னுதாரணமாக இருந்தன.

ஆனால், கால ஓட்டத்தில் அது தலைகீழாக மாறி இன்று அவர்கள் வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ்க்கட்சிகளுக்கும் அரசியல் தலைமைகளுக்கும் ரியூசன் வகுப்பெடுக்கும் அளவுக்கு அரசியல் முதிர்ச்சி அடைக்குருக்கிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு துண்டு துண்டாக உடைந்து இன்று சீரழிந்து நிற்பதற்குக் காரணமானவர்கள் தங்களை சுயபரிசோதனைக்கு உட்படுத்தவேண்டிய தருணம் இது.

குறிப்பாக தமிழர்களின் பாரம்பரியக் கட்சியான தமிழரசுக் கட்சிக்குள் எழுந்துள்ள உட்பூசல்களும் மாறி மாறி சேறுபூசும் செயற்பாடுகளும் சந்தி சிரிக்கின்றன.

மாவை சோனாதிராசா, சி.வி.கே.சிவஞானம், சம்பந்தர் போன்ற பழுத்த அரசியல்வாதிகளால் நிச்சயம் தமிழ்த் தேசிய அரசியலில் பயணிக்கும் அத்தனை கட்சிகளையும் இணைத்திருக்க முடியும்.

ஆகக்குறைந்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையாவது ஓர் உறுதியான அரசியல் சக்தியாக வளர்தெடுத்திருக்க முடியும்.

ஆனால், இதை அவர்கள் செய்யவும் இல்லை. ஆகக்குறைந்தது அதை சாத்தியமாக்குவதற்கு சிறு முயற்சிகளையாவது செய்திருக்கவேண்டும்.

இன்றுவரை அதை செய்யவும் இல்லை. செய்யப்போவதும் இல்லை.

இந்தப்பத்தியில் இந்த "ஒற்றுமை" பற்றி பல தரம் எழுதப்பட்டுள்ளது.

மலையக தமிழ்க்கட்சிகளையும் தமிழ்த் தேசிய அரசியலில் ஈடுபடும் கட்சிகளையும் ஒரு "கூட்டமைப்பாக" இணைத்து ஒரு மாநாட்டையாவது செய்திருக்கவேண்டும்.

02 ஆம் பக்கம்

முஸ்லிம் எம்.பிக்களின் புது அரசியல் கூட்டணி

சமூகத்தின் முக்கிய பிரச்சினைகளை முன்வைத்து அரசின் பட்ஜெட்டை ஆதரிக்கவும் தீர்மானம்

(நமது நிருபர்)

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் எம்.பிக்கள் பெரும்பான்மையானோர் புதிய அரசியல் கூட்டணியொன்றை அமைக்கும் முயற்சியில் வெற்றிகண்டுள்ளதாக மிக நம்பகமாக அறியமுடிகின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆகியவற்றில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களே இவ்வாறு புதிய அரசியல் கூட்டணியை அமைக்கவுள்ளனர். அடுத்த தேர்தல்களில் இந்த கூட்டணி ஜனாதிபதி ரணிலின் தலைமையில் போட்டியிடும் அரசியல் கூட்டணியில் இணைந்து களமிறங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கம்

பார்த்த ஞாபகம் இல்லையோ..?

கொழும்பில் நடைபெற்ற திருமண நிகழ்வொன்றில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் கலந்துகொண்டபோது எடுக்கப்பட்ட படம்.

வெளிநாட்டவர்களுக்கும் இலங்கையர்களுக்கும் இடையிலான திருமணப் பதிவுக்கான தடை நீக்கம்!

வெளிநாட்டவர்களுக்கும் இலங்கையர்களுக்கும் இடையிலான திருமணங்களைப் பதிவுசெய்வதில் உள்ள தடைகளை நீக்குமாறு பிரதமர் தினேஷ் குணவர்தன பதிவாளர் நாயகத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதுபோன்ற தடைகளுக்கு வழிவகுத்த சுற்றறிக்கையை உடனடியாக இரத்து செய்யவும் பிரதமர் அறிவுறுத்தியுள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பதிவாளர் நாயகம் தினைக்களத்தினால்...

02 ஆம் பக்கம்

காணி அபகரிப்புக்கு பிள்ளையான் துணை

சாணக்கியன் குற்றச்சாட்டு!

அபிவிருத்திக் குழுக் கூட்டம் என்ற பெயரில் காணிகளை அபகரிக்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு பிள்ளையான் துணைபோகின்றார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்...

02 ஆம் பக்கம்

உங்கள் பிள்ளையின் வெளிநாட்டுக் கல்விக்கான கடவுச்சீட்டு

வெளிநாட்டு நாணயத்தில் சேமித்திடுங்கள்

ETHERA ISURA Doodaru

- 2% மேலதிக வட்டி
- கல்வி மற்றும் மருத்துவ தேவைக்கான பணப் பரிமாற்றத்திற்குத் தரகு பணம் இல்லை
- சிறப்பு உடல்நலக் காப்புறுதி மற்றும் விபத்துக் காப்புறுதி
- கல்விச் சாதனைகளுக்குச் சிறப்புப் பணப் பரிசுகள்
  - லண்டன் அல்லது இலங்கை உயர்தர பரீட்சையில் சிறப்புச் சித்தி பெறும் ஒவ்வொரு பாடத்திற்கும் தலா ரூ. 10,000 பணப்பரிசு (அதிகபட்சம் 3 பாடங்கள் வரை)
  - லண்டன் அல்லது இலங்கை சாதாரணதர பரீட்சையில் சிறப்புச் சித்தி பெறும் ஒவ்வொரு பாடத்திற்கும் தலா ரூ. 5,000 பணப் பரிசு (அதிகபட்சம் 5 பாடங்கள் வரை)

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: +94 70 1750 294

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK Pride of the Nation

கோப் உள்ளிட்ட குழுக்கள் இந்த வாரம் கூடவுள்ளன

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப்), அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (கோபா) உள்ளிட்ட நாடாளுமன்றக் குழுக்கள் பல இவ்வாரம் கூடவுள்ளன.

அதற்கமைய, வரையறுக்கப்பட்ட நிலக்கரி தனியார் நிறுவனம் எதிர்வரும் 09 ஆம் திகதி அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப்) முன்னிலையில் அழைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 08ஆம் திகதி அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (கோபா) கூடவுள்ளதுடன், இதில் மரக்கறி விதைகளை உள்நாட்டில் உற்பத்திசெய்வது தொடர்பான முன்னேற்றம் குறித்த...

02 ஆம் பக்கம்

ஆசிரியர் சீருடையில் மாற்றமில்லை!

கல்வியமைச்சர் சுசில் அறிவிப்பு

எந்தவொரு காரணத்துக்காகவும் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களின் உடையில் மாற்றம் செய்யப்பட மாட்டாது என கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கம்

இம்ரான் கானை கொல்ல நானே முடிவெடுத்தேன்!

காரணங்களை விளக்கி துப்பாக்கிதாரி வாக்குமூலம்

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியவரின் ஒப்புதல் வாக்குமூல காணொளி வெளியாகியுள்ளது. கைதுசெய்யப்பட்ட பின்னர் அந்த நபரிடம் நடத்தப்பட்ட விசாரணையின்போது இந்த...

02 ஆம் பக்கம்

நீர்நிலிவு நோயின் தாக்கம் வட மாகாணத்தில் அதிகரிப்பு

விசேட வைத்திய நிபுணர் அரவிந்தன் எச்சரிக்கை

யாழ். போதனா வைத்தியசாலை நீர்நிலிவு சிகிச்சைப் பிரிவில் கடந்த வருடத்தோடு ஒப்பிடும்போது இந்த வருடம் சுமார் 3000க்கும் மேற்பட்ட நீர்நிலிவு நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுவதாக யாழ். போதனா வைத்தியசாலை நீர்நிலிவு அகஞ்சுரக்கும் தொகுதி விசேட வைத்திய நிபுணர் அரவிந்தன் தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் நீர்நிலிவு நோயின் தாக்கம் தொடர்பில்...

02 ஆம் பக்கம்

மு.கா. பேராளர் மாநாடு நாளை

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 30 ஆவது பேராளர் மாநாடு நாளை திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு புத்தளம், கே.ஏ. பாயிஸ் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இம்மாநாட்டிற்கு பிரதம அதிதியாக கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம்...

02 ஆம் பக்கம்

நிலையான மற்றும் மொபைல்

ஆகிய இரு பெரும் ஆற்றல்களின் இணைப்பினால்

தடையின்றி தொடரும் வணிக தீர்வுகள்

நிலையான மற்றும் மொபைல் ஆகிய இரு பெரும் ஆற்றல்களை ஒருங்கிணைத்து வழங்கும் இலங்கையின் ஒரே தொலைத் தொடர்பு நிறுவனம் நாமே. வணிக பைபர் (Business Fibre), ஒரே நோக்க-கட்டமைப்பு டேட்டா மையம் மற்றும் மல்டி-க்லவுட் (multi-cloud) என்பனவற்றை உள்ளடக்கி, உங்களின் வணிக ஆற்றலை அடுத்த கட்டம் நோக்கி நகர்த்திச் செல்லும் முதன்மையான தடையற்ற வணிகத் தீர்வுகள்.

0112 381 381 queries@enterprise.slt.lk www.sltmobitel.lk

SLTMOBITEL ENTERPRISE

கைவிடப்பட்ட வீடமைப்புத் திட்டங்களை மீள ஆரம்பிக்க திருமலையில் நடவடிக்கை

(கிண்ணியா நிருபர்)

கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் மூலம் தேசிய வீடமைப்பு அதிகாரசபை ஊடாக திருகோணமலை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு இடைநடுவில் கைவிடப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டங்களை மீள ஆரம்பிப்பது சம்பந்தமான கலந்துரையாடல் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தலைமையில் கொழும்பில் அண்மையில் இடம்பெற்றது.

இதன் முதற்கட்டமாக அல்-ஹித்மத்துல் உம்மா பவுண்டேசனின் உதவியுடன் இடைநிறுத்தப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டங்களை மீள ஆரம்பிப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

அதற்கமைய வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் ஒத்துழைப்புடன் தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் தலைவர் ரஜீவ சிறிவர்தனவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

இப்பேச்சுவார்த்தையின்போது நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரானின் முயற்சியைப் பாராட்டிய அவர், முயற்சிக்குப் பூரண ஆதரவு வழங்குவதாக தெரிவித்து, வீடமைப்புத் திட்டங்களை ஆரம்பிப்பதற்கான எழுத்துமூல அனுமதியினையும் வழங்கினார். இதன் முதற்கட்டமாக கிண்ணியா பிரதேசத்தில் கைவிடப்பட்டுள்ள துவரங்குளம் 1, துவரங்குளம் 2 ஆகிய இரண்டு வீடமைப்புத் திட்டங்களில் காணப்படும் 54 வீடுகளை கட்டிமுடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் அல்-ஹித்மத்துல் உம்மா பவுண்டேஷன் பணிப்பாளர் பாத்திஹ் ஹஸ்ஸாலி, தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் பொது முகாமையாளர், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் சதாத் கரீம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மேலும் திருகோணமலை மாவட்டத்தில் கைவிடப்பட்ட ஏனைய வீடமைப்புத் திட்டங்களும் படிப்படியாக முன்னெடுக்கப்படும்.

நெடுங்கேணியில் கைக்குண்டு மீட்பு

வவுனியா வடக்கு, நெடுங்கேணிப் பகுதியில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் நேற்று முன்தினம் (04) தெரிவித்தனர்.

வவுனியா வடக்கு, நெடுங்கேணி, ஒலுமடு பகுதியில் வீதியோரமாக உள்ள காட்டுப் பகுதிக்கு சென்ற நபர் ஒருவர் குறித்த வீதியோரத்தில் கைக்குண்டு ஒன்று இருப்பதை அவதானித்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற நெடுங்கேணி பொலிஸார், விசேட அதிரடிப் படையினரின் துணையுடன் குறித்த கைக்குண்டை மீட்டெடுத்ததுடன், அதனை செயலிழக்கச் செய்துள்ளனர். குறித்த கைக்குண்டானது யுத்த காலத்தில் பயன்படுத்தப்பட்ட ஜே.ஆர். வகை குண்டு என்பதும் குறிப்பிடத்தக்கது.

காணி அபகரிப்புக்கு...

நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் பகிரங்கமாக குற்றஞ்சுமத்தியுள்ளார்.

பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டங்களை நடத்தாமல், ...நேற்றைய தினம் வாகரை பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் மாத்திரமே நடத்தப்பட்டுள்ளதாகவும், அதனைத் தொடர்ந்து ....இன்றைய தினம் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடத்தப்படுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனை தான் ஒரு சதி நடவடிக்கையாகவே பார்ப்பதாகவும், குறிப்பாக, வாகரையை முற்றாக அரசாங்கத்திற்கு தாரை வார்ப்பதற்குரிய நடவடிக்கைகள் திரைமறைவில் முன்னெடுக்கப்படுவதாகவும் இரா.சாணக்கியன் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இந்த குற்றச்சாட்டுகளை பகிரங்கமாக முன்வைத்துள்ளார்.

குறிப்பாக, வாகரையில் இறால் வளர்ப்புத் திட்டம் மற்றும் காணிகளை வழங்கும் திட்டங்களில் பாரியளவில் மோசடிகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

அதேபோன்று சேதனப்பசளை என்ற பெயரில் ஊழல் மோசடிகள் இடம்பெறுவதாகவும், இதற்கும் பிள்ளையான் துணை போகின்றார் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் பகிரங்கமாக குற்றஞ்சுமத்தியுள்ளார்.

அத்துடன், அபிவிருத்திக்குழுக் கூட்டங்களுக்கான அறிவிப்புகள் தங்களுக்கு முறையாக விடுக்கப்படுவதில்லை எனவும் இரா.சாணக்கியன் இதன்போது விசனம் வெளியிட்டுள்ளார்.

தான் இந்த கூட்டங்களில் பங்கேற்கக்கூடாது என்ற எண்ணத்திலேயே தனக்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லை எனவும் அவர் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

எனினும், எந்தச் சந்தர்ப்பத்தில் மக்களுக்காகவும், மக்களின் உரிமைகளுக்காகவும் தான் குரல் கொடுக்க பின்னிற்கப்போவதில்லை எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டவர்களுக்கும்...

வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்திலேயே பிரதமர் இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

வெடிமணியம்

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

அதை சம்பந்தர் அண்ணர் அரசியலில் உயிர்ப்போடு இருக்கும்போது செய்திருக்கவேண்டும்.

ஏன் செய்யவில்லை? என்பது அவருக்குத்தான் வெளிச்சம்.

மாவை சேனாதிராசா நினைத்திருந்தால் தமிழரசுக் கட்சியின் தலைவர் என்ற அடிப்படியில் எத்தனையோ நல்ல விடயங்களை முன்னெடுத்திருக்கலாம்.

ஆனால், அவரும் இப்போது தமிழ்த் தேசிய அரசியலில் உறுதியாக செயற்படும் வலிமையற்றவராக இருக்கிறார்.

மாவை அண்ணரைப் பொறுத்தவரை வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் கதிரை அல்லது தனது மகனுக்கு ஒரு நாடாளுமன்ற கதிரை. இதைத்தாண்டி அவரால் இனிமேல் தமிழர் நலன் சார்ந்து சிந்திக்கும் அளவுக்கு மூளை வேலைசெய்யாது எண்டு சனம் புறுபுறுக்குது.

சம்பந்தர் அண்ணர் ஏற்கனவே ஆரோக்கியமான அரசியல் நகர்வுகளை யோசிக்கிற அளவுக்கு கூட மனவலிமையோ இயங்குதிறனோ அற்றவராக இருக்கிறார்.

சாணக்கியன் அண்மையில் ஒரு நேர்காணலில் சொன்னார்.

சம்பந்தர் ஐயா கோட்டாபயவை பார்த்து;
"தமிழர்களை நாயெண்டு நினைச்சியா?"

"உன்ர கொண்ணனிட்ட [மஹிந்த] சொல்லு அழிஞ்சுபோடுவாய் எண்டு"

இப்படியெல்லாம் சம்பந்தர் அண்ணர் நாடாளுமன்றத்தில் கத்தினாராம்.

நாடாளுமன்ற வளாகத்தில் சம்பந்தர் அண்ணர் அப்படி கோட்டாபயவை வெருட்டினதுக்கு சாட்சி சாணக்கியனும் அந்த இடத்தில நிண்ட கன்ரீன் பொடியனும்தான்.

கன்ரீன் பொடியனுக்கு தமிழும் தெரியாது, இங்கிலீசும் தெரியாது எண்டதால அந்தப் பொடியனைக் கேக்கேலாது.

சாணக்கியன் மட்டும்தான் ஒரே சாட்சி. ஆக நாங்கள் அதை நம்பித்தான் ஆகவேணும்.

"சம்பந்தர் ஐயா அரசியலில் இயங்குதிறன் அற்ற நிலையில் இருந்தாலும் அவர் தமிழர்களின் அரசியல் அடையாளம்" என்ற கருத்துப்பட சாணக்கியன் அந்த நேர்காணலில் தெரிவித்தார்.

"சம்பந்தர் அண்ணர் தமிழர்களின் அரசியல் அடையாளம்" என்ற சாணக்கியனின் கருத்து அவருடையது மட்டுமே.

அதை சனத்தின் கருத்தாக சாணக்கியன் நினைத்தால் அது அவரின் "அரசியல் சிறுபிள்ளைத்தனம்"

பலமுறை இந்த பத்தியில் எழுதியதுபோல;

சம்பந்தர் அண்ணர் நிச்சயம் தமிழர்களின் அரசியல் அடையாளமாக ஆவதற்கு அவர் எதுவுமே செய்யவில்லை.

ஆனால், "தமிழர்களின் அரசியல் அடையாளமாக" ஆவதற்கு சம்பந்தர் அண்ணர் நினைச்சால் அவர் செய்யவேண்டிய காரியங்கள் நிறைய இருக்கிறது.

தமிழர்களின் அரசியல் அடையாளமாக இருக்கும் "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு" கண்முன்னே சின்னாபின்னமாக உடைகின்ற போதும்;

தமிழர்களின் பாரம்பரியமான அரசியல் அடையாளமான தமிழரசுக் கட்சி குழம்பிய குட்டையாக மாறுகின்றபோதும்;

சம்பந்தர் அண்ணர் என்ன செய்துகொண்டிருக்கிறார் எண்டதை சனம் பார்த்துக்கொண்டிருக்கிறது.

ஆப்படியிருக்க, தம்பி சாணக்கியன் எந்த அடிப்படியில் சம்பந்தர் அண்ணரை "தமிழர்களின் அரசியல் அடையாளம்" எண்டு சொன்னார் எண்டு தெரியவில்லை. கெதியில அவரைக் காணும்போது விளக்கமாக கேப்பம்.

ஆக, மீண்டும் மனோ கணேசனின் தலைமையிலான "தமிழர் முற்போக்கு கூட்டணியின்" ஒற்றுமைக்கான முன்னெடுப்பை நல்ல உதாரணமாக காட்டவேண்டிய தேவ்வை வருகிறது.

மாவை சேனாதிராசா , சம்பந்தர் அண்ணர் போன்றவர்கள் நேரம் கிடைச்சால் மனோ கணேசனிடம் பேசவும்.

மலையக தமிழ்க் கட்சிகளும் வடக்கு கிழக்கில் உள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளும் இணைந்து ஒரு மிகப்பெரிய "மாநாட்டை" செய்து காட்டவேண்டும்.

இதை ஒருங்கிணைக்கும் "வல்லமை" தம்பி மனோ கணேசனுக்கு இருக்கிறது எண்டு நினைக்கிறம்.

ஏனெண்டால், அப்படி ஒரு அசாத்தியமான "ஒருங்கிணைப்பை" செய்யும் வல்லமை மூத்த தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் எவருக்கும் இருப்பதாய் தெரியவில்லை.

அப்படி யாருக்காவது இருந்தால் அதை சாத்தியமாக்கி காட்டுங்கள்.

ஒரு முழுப்பத்தி உங்களைப் பாராட்டி எழுதுகிறோம்.

முன்னாள் ஜனாதிபதி...

மைத்திரிபால சிறிசேன கொழும்பு ஐடிஎச் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சென்றுள்ளார்.

மு.கா. பேராளர்...

கலந்துகொள்ளவுள்ளார்.

அதற்கு முன்னதாக, 6ஆம் திகதி இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொழும்பில், கட்சியின் "தாருஸ்ஸலாம்" தலைமையகத்தில் முஸ்லிம் காங்கிரஸின் கட்டாய உயர்பீடக் கூட்டம் நடைபெறவுள்ளதாக அதன் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஆசிரியர்...

இந்த அறிவிப்பை நேற்று முன்தினம் அவர் வெளியிட்டுள்ளார்.

முன்னதாக ஆசிரியர்களின் உடையை மாற்றி பாடசாலைக்கு வருவதற்கு வசதியான ஆடையை அணிய இடமளிக்குமாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கோரிக்கை விடுத்தார்.

எனினும், சில ஆசிரியர்கள் இதற்கு இணங்கவில்லை. அத்துடன், ஆசிரியர்களுக்கு இலகு ஆடைகளை அனுமதிப்பது கலாசார சீர்கேட்டுக்கு வழிவகுக்கும் என்றும், இதனை ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது எனவும் மகாசங்கத்தினர் கடும் எதிர்ப்பு வெளியிட்டனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், ஆசிரியர்களுக்கான ஆடை சுதந்திரத்தால் கலாசாரம் சீர்கெடாது என வலியுறுத்திய இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், இந்த விடயத்தில் கல்வியமைச்சர் தீர்வொன்றை வழங்கவேண்டும் - என்றார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில் கல்வி அமைச்சர் இந்த அறிப்பை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கோப் உள்ளிட்ட...

விசேட கணக்காய்வு அறிக்கை தொடர்பில் விசாரணை செய்யப்படவுள்ளது. மேலும், மருத்துவக் கழிவுகளை அகற்றுவதை முகாமைத்துவம் செய்வது தொடர்பான விசாரணைகளுக்கு எதிர்வரும் 11ஆம் திகதி அரசாங்கக் கணக்குகள் குழு முன்னிலையில் சம்பந்தப்பட்ட தரப்பினர் அழைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள் சில அடுத்த வாரம் கூடவுள்ளன. அதற்கமைய எதிர்வரும் 08ஆம் திகதி நீதி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு, கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு என்பன கூடவுள்ளன.

மேலும், எதிர்வரும் 10ஆம் திகதி மகளிர், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவும், வெளிநாட்டலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவும் கூடவுள்ளன.

இதேவேளை, சிறுவர்களுக்கான நாடாளுமன்ற ஒன்றியம் மற்றும் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் குழு என்பனவும் எதிர்வரும் 08ஆம் திகதி கூடவுள்ளன.

நீரிழிவு...

கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நீரிழிவு நோயின் தாக்கம் தொடர்பில் மிக அண்மைய தரவுகளின்படி கொழும்பு மாவட்டத்தில் குறிப்பாக, மேல் மாகாணத்தில் 30 வீதமானவர்களுக்கு நீரிழிவு நோயின் தாக்கம் காணப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 15 சதவீதமானவர்களுக்கு நீரிழிவு நோயின் தாக்கம் காணப்படுகின்றது. நீரிழிவு நோய் தொடர்பிலான ஆய்வுகளை நாங்கள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றோம்.

குறிப்பாக, கடந்த இரண்டு மூன்று வருடங்களாக இந்த கொவிட் காலப்பகுதியில் இளைஞர், யுவதிகள் அதாவது 20 – 40 வயதுக்குட்பட்டவர்கள் மத்தியில் நீரிழிவு நோயின் தாக்கம் அதிகரித்துச் செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் நீரிழிவு சிகிச்சைப் பிரிவை எடுத்துக்கொண்டால் கடந்த வருடத்தோடு ஒப்பிடும்போது, இந்த வருடம் சுமார் 3000இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் புதிதாக பதிந்திருக்கின்றார்கள். அதாவது, நீரிழிவு நோயின் தாக்கமானது சிறிது சிறிதாக அதிகரித்துச் செல்வதை காணக்கூடியதாகவுள்ளது.

உலகளாவிய ரீதியில் அதிகரிப்பதுபோல் வளர்முக நாடுகளில் குறிப்பாக, இலங்கை போன்ற நாடுகளில் எமது வடபகுதியில் இந்த நீரிழிவு நோயின் தாக்கமானது அதிகரித்து காணப்படுகின்றது.

நவம்பர் மாதம் உலகளாவிய ரீதியில் நீரிழிவு விழிப்புணர்வு வாரமாக கொண்டாடப்படுகின்றது. இந்த உலக நீரிழிவு விழிப்புணர்வு வாரத்தில் யாழ். மாவட்டத்தில் பல செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

மிக முக்கியமாக பாடசாலை மாணவர்கள் மத்தியில் மற்றும் கல்லூரி மாணவர்கள் மத்தியில் நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியமானது. கடந்த இரண்டு, மூன்று வருடங்களாக நீரிழிவு தாக்கமானது வடபகுதியில் அதிகரித்துச் செல்வதனை காணக்கூடியதாகவுள்ளது.

வடமாகாணத்தில் இளைஞர், யுவதிகள் மத்தியில் நீரிழிவின் தாக்கமானது அதிகரித்து செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது. இவ்வாறு நீரிழிவு நோய் தாக்கம் அதிகரித்துச் செல்வதற்கு மிக முக்கியமான காரணமாக அமைவது எமது வாழ்க்கை நடைமுறையில் ஏற்பட்ட மாற்றங்களாகும்.

குறிப்பாக சொல்லப்போனால், தவறான உணவுப் பழக்க வழக்கங்கள், அப்பியாசமற்ற வாழ்க்கை முறை என்பன மிக முக்கியமான காரணங்களாகவுள்ளன,

இன்றைய காலகட்டத்தில் இந்த மேலைத்தேய உணவுகள் துரித உணவுகளில் நாட்டம் அதிகரித்து செல்வதனால் நீரிழிவின் தாக்கமானது அதிகரித்துச் செல்வதை நாங்கள் காணக்கூடியதாகவுள்ளது. அதேபோல உடல் அப்பியாசம் உடற்பயிற்சி செய்வது குறைவடைவது ஒரு மிக முக்கியமான காரணமாகும்.

அதேபோல் மன அழுத்தம், நித்திரை குறைவு போன்ற பல காரணங்களும் இதற்கு ஏதுவாக அமைகின்றன. ஆகவே, நீரிழிவு விழிப்புணர்வு மாதத்தில் மக்களுக்கு நீரிழிவு நோய் என்றால் என்ன என்பது தொடர்பான விழிப்புணர்வு அவசியமாகும்.

எனவே, வட பகுதியிலுள்ள மக்கள் இந்த நீரிழிவு நோய் தொடர்பில் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டியது அவசியம் என்றார்.

இம்ரான் கானை...

வீடியோ பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அதில், முன்னாள் பிரதமர் இம்ரான் கானை சுட்டுக் கொல்லவே முயன்றதாக ஒப்புக்கொண்டுள்ளார்.

பாகிஸ்தானில் விரைவில் பொதுத்தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தி, இம்ரான் கானின் PTI கட்சி நடத்தும் தொடர் பேரணி, வியாழனன்று குஜ்ரன்வாலா மாவட்டத்தின் வஜிராபாத் நகருக்குள் நுழைந்தபோது துப்பாக்கிச்சூடு இடம்பெற்றது.

இதில் ஒருவர் கொல்லப்பட்டார். இம்ரான் கான் உள்ளிட்ட 7 பேர் காயமடைந்தனர். இம்ரான் கானின் காலில் துப்பாக்கிச்சூட்டுக் காயம் ஏற்பட்டது.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர், "மக்களை தவறாக வழிநடத்தியதால்" முன்னாள் பிரதமரைக் கொல்ல முயன்றதாக ஒப்புக்கொண்டார்.

"என்னால் அதைத் தாங்க முடியவில்லை. இம்ரான் கானைக் கொல்ல முயன்றேன். நான் முயற்சித்தேன் கானைக் கொல்ல என்னால் இயன்றவரை முயற்சித்தேன், கானை மட்டும் கொல்ல முயற்சித்தேன், வேறு யாரையும் கொல்லவில்லை" என்று துப்பாக்கிச் சூடு நடத்தியவர் கூறினார்.

"அவர்களின் ஒலி அமைப்பில் உரத்த இசையை இசைப்பதன் மூலம் அவர்கள் [அசானின்] புனிதத்தை மீறுகிறார்கள் என்று நான் நினைத்தேன். என் மனசாட்சியால் அதைக் கையாள முடியவில்லை, நான் நடவடிக்கை எடுத்தேன்'' - என்றார்.

இது தன்னிச்சையான செயலா அல்லது திட்டமிடப்பட்ட செயலா என்று கேட்டபோது, துப்பாக்கிச் சூடு நடத்தியவர் முதலில் இது "தன்னிச்சையான முடிவு" என்று கூறினார். பின்னர் "இன்று காலை அதை செய்ய முடிவுசெய்தேன்" என்று கூறினார்.

இருப்பினும், மூன்றாவது முறை குறிப்பிடும் போது, லாகூரிலிருந்து புறப்பட்டதிலிருந்து கானை சுடத் திட்டமிட்டதாகக் கூறினார். "நான் அவரை விடமாட்டேன் என்று திட்டமிட்டேன்," என்று அவர் மேலும் கூறினார்.

அவரின் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்று கேட்டபோது, யாரும் இல்லையென மறுத்தார். துப்பாக்கிதாரி பொலிஸ் காவலில் வைக்கப்பட்டு மேலதிக தடயங்களுக்காக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இதேவேளை, சந்தேக நபரின் வாக்குமூலம் அடங்கிய வீடியோ கசிந்ததையடுத்து, சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தின் முழு ஊழியர்களையும் பணி இடைநீக்கம் செய்ய பஞ்சாப் முதல்வர் சவுத்ரி பெர்வைஸ் எலாஹி உத்தரவிட்டுள்ளார்.

இந்த வீடியோ கசிவு குறித்து விசாரணை நடத்தவும், பொறுப்பற்ற அதிகாரிகள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் மாகாண முதல்வர் பஞ்சாப் ஐஜிக்கு உத்தரவிட்டார்.

சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தின் முழு ஊழியர்களின் கையடக்கத் தொலைபேசிகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன, அந்த தொலைபேசிகளின் தடயவியல் தணிக்கை நடத்தப்படும் என்று முதல்வர் எலாஹி கூறினார்.

முஸ்லிம்...

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மிக முக்கிய முன்னாள் பிரமுகர்களும் இதற்கு ஆதரவை தெரிவித்துள்ளதாக அறியமுடிகின்றது. கண்டி, கொழும்பு மற்றும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த வர்த்தகப் பிரமுகர்கள் இந்த கூட்டணியில் முக்கியப் பொறுப்புகளை வகிக்க வுள்ளனர்.

இந்த அரசியல் கூட்டணியில் இணைந்து செயற்பட விருப்பை வெளியிட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதி ரணிலால் இம்மாதம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள வரவு-செலவுத் திட்டத்தை ஆதரிக்கவுள்ளனர். முஸ்லிம் சமூகத்தின் முக்கியமான பிரச்சினைகளை சுட்டிக்காட்டி அவற்றுக்கு தீர்வைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் இந்த ஆதரவு வழங்கப்படவுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் நடைபெற்ற சந்திப்பொன்றில் இந்த அரசியல் கூட்டணி செய்யப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பில் முன்னணி முஸ்லிம் தொழிலதிபர்கள் கலந்துகொண்டதாக அறியமுடிந்தது.

பெயர் மாற்றம்

பிரேமோர் பிரிவு , ஹூட்வில் தோட்டம், அக்கரபத்தனையைச் சேர்ந்த தேசிய அடையாள அட்டை இலக்கம் 796542284X கொண்ட பெரியசாமி நாகலெச்சுமி ஆகிய நான் 10.08.2018 முதல் புனித இஸ்லாம் மதத்தைத் தழுவி எனது பெயரை பெரியசாமி பாத்திமா ஆயிஷா என மாற்றிக் கொண்டுள்ளேன். தற்போது இல 23, பிரதான வீதி, ஒலுவில் – 01 ஐ வசிப்பிடமாகவும் கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பமிடுவேன் எனவும் இத்தால் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

பெரியசாமி பாத்திமா ஆயிஷா

பெயர் மாற்றம்

பிரேமோர் பிரிவு , ஹூட்வில் தோட்டம், அக்கரபத்தனையைச் சேர்ந்த சிவகுமார் திவிஸ்கர் ஆகிய எனது மகன் 10.08.2018 முதல் புனித இஸ்லாம் மதத்தைத் தழுவி புதிய பெயராக சிவகுமார் முகம்மது அஷ்ரக் என மாற்றிக்கொண்டுள்ளார். தற்போது இல 23, பிரதான வீதி, ஒலுவில் – 01ஐ வசிப்பிடமாகவும் கொண்டுள்ளார் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் அவரது புதிய பெயரையே பயன்படுத்துவார் எனவும் அவ்வாறே கையொப்பமிடுவார் எனவும் இத்தால் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

தாய் - பெரியசாமி பாத்திமா ஆயிஷா

பெயர் மாற்றம்

பிரேமோர் பிரிவு , ஹூட்வில் தோட்டம், அக்கரபத்தனையைச் சேர்ந்த சிவகுமார் தில்சானி ஆகிய எனது மகள் 10.08.2018 முதல் புனித இஸ்லாம் மதத்தைத் தழுவி புதிய பெயராக சிவகுமார் பாத்திமா அஸ்னா என மாற்றிக்கொண்டுள்ளார். தற்போது இல 23, பிரதான வீதி, ஒலுவில் – 01 ஐ வசிப்பிடமாகவும் கொண்டுள்ளார் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் அவரது புதிய பெயரையே பயன்படுத்துவார் எனவும் அவ்வாறே கையொப்பமிடுவார் எனவும் இத்தால் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

தாய் - பெரியசாமி பாத்திமா ஆயிஷா

பெயர் மாற்றம்

பிரேமோர் பிரிவு , ஹூட்வில் தோட்டம், அக்கரபத்தனையைச் சேர்ந்த தேசிய அடையாள அட்டை இலக்கம் 200057203367 கொண்ட சிவகுமார் உதேவாணி ஆகிய நான் 10.08.2018 முதல் புனித இஸ்லாம் மதத்தைத் தழுவி எனது பெயரை சிவகுமார் ஸாஹிறா என மாற்றிக் கொண்டுள்ளேன். தற்போது இல 23, பிரதான வீதி, ஒலுவில் – 01 ஐ வசிப்பிடமாகவும் கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பமிடுவேன் எனவும் இத்தால் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

சிவகுமார் ஸாஹிறா

திகதி 03.11.2022 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4928
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,114,200.00
ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 7 4 6 8 7 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 37,976,927.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3170
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,272,140.00
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 05 13 37 44
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,770,086.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1383
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,882,920.00
வெற்றி இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 1 2 7 1 0 0
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,293,906.40

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 958
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,364,280.00
வெற்றி இலக்கினம் B வெற்றி இலக்கங்கள் 09 17 23 80
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 131,627,068.40

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 237
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,618,900.00
இலக்கினம் சிம்மம் வெற்றி இலக்கங்கள் 05 39 56 57
விசேட இலக்கினம் சிம்மம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,530,616.60

கோடி 27 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1276
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,203,560.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 279,431,934.00
X 25 02 15 73 80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk

மம்தாவுடன் நெருக்கம் ஆளுநருடன் விரிசல்

கோவை சிலிண்டர் வெடிப்பு, வரலாறு காணாத கன மழை இவற்றுக்கிடையே தமிழக அரசியலில் சில காய்கள் நகர்த்தப்பட்டுள்ளன. மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி, தமிழக முதலமைச்சர் ஸ்டாலினை சந்தித்துள்ளார். இதேநேரத்தில் தமிழக ஆளுநருக்கு எதிரான பிரமாஸ்திரத்தை ஸ்டாலின் தொடுத்துள்ளார்.

மேற்கு வங்க முதலமைச்சராக திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் தலைவர் மம்தா பானர்ஜி உள்ளார். கடந்த சட்டசபைத் தேர்தலில் பா.ஜ.கவை வீழ்த்தி மேற்கு வங்காளத்தில் மம்தா பானர்ஜி ஆட்சியை தக்கவைத்துள்ளார். இதன்மூலம் மேற்கு வங்க முதல்வராக மம்தா பானர்ஜி பொறுப்பேற்று ஹட்ரிக் சாதனை படைத்துள்ளார். இவருக்கும், பா.ஜ.கவுக்கும் இடையே கடும் மோதல் போக்கு உள்ளது. அதற்கு சற்றும் சளைக்காமல் காங்கிரஸையும் அவர் கடுமையாக எதிர்க்கிறார். காங்கிரஸை எதிர்க்கும் அரசியல் தலைவர் ஒருவர் காங்கிரஸுடன் மிக நெருக்கமாக இருக்கும் ஸ்டாலினைச் சந்தித்தது அரசியல் அரங்கில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தேசிய ரீதியில் காங்கிரஸ் இல்லாத மூன்றாவது அணியை உருவாக்க மம்தா முயற்சி செய்கிறார். இதனால் காங்கிரஸ் அவர் மீது கடுப்பாக உள்ளது. 2024 நாடாளுமன்ற தேர்தலில் பாரதீய ஜனதாவை வீழ்த்தும் முனைப்பில் திராவிட முன்னேற்றக் கழகமும், மம்தாவின் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியும் உள்ளதால் இந்த சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்தததாக கருதப்பட்டது.

மம்தா பானர்ஜி இரண்டு நாள் சுற்றுப்பயணமாக சென்னை வருவதாகவும், சென்னையில் முதல்வர் ஸ்டாலினை சந்திப்பதாகவும் தகவல்கள் வெளியாகின.

ஸ்டாலினுடன் சந்திப்பு, மேற்கு வங்க மாநில ஆளுநராக தமிழகத்தைச் சேர்ந்த இல. கணேசன் உள்ள நிலையில், அவர் சகோதரரின் 80ஆவது பிறந்தநாள் விழாவில் பங்கேற்க இல. கணேசன் அழைப்பு விடுத்த நிலையில், மம்தா பானர்ஜி சென்னை புறப்பட்டு வந்தார்.

ஸ்டாலின் மம்தா சந்திப்பை இந்தியாவின் தேசியக் கட்சிகளும், மாநிலக் கட்சிகளும் உன்னிப்பாக அவதானித்தன. "சென்னை பயணத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்திக்கவுள்ளேன். ஸ்டாலின் எனது அரசியல் நண்பர். சென்னை செல்வதால் மரியாதை நிமித்தமாக சந்திக்கவுள்ளேன்" என்றார்.

மேலும் அரசியல் பற்றி விவாதிக்கப்படுமா? என கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர், "இரு அரசியல் தலைவர்கள் சந்திக்கும்போது அரசியல் பேசுவது வழக்கமானதுதான்" – என்றார்.

தேசிய அளவில் கவனம்

மம்தா பானர்ஜி இவ்வாறு கூறியதால் இந்தச் சந்திப்பு என்பது தேசிய அளவில் கவனம் பெற்றது. குறிப்பாக, காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் உன்னிப்பாக கவனித்ததாகக் கூறப்படுகிறது. ஏனென்றால், மம்தா பானர்ஜி காங்கிரஸை விரும்பாத நிலையில், தி.மு.க. காங்கிரஸ் உடன் கூட்டணி அமைத்துள்ளது. இதற்கிடையேதான் சென்னையில் முதல்வர் ஸ்டாலின் – மம்தா பானர்ஜி ஆகியோர் சந்தித்துப் பேசினர். இதில் தேசிய அரசியல் பற்றி விவாதிக்கலாம் என்பதால் பரபரப்பு தொற்றிக்கொண்டது.

சென்னை ஆழ்வார்பேட்டையிலுள்ள முகாம் அலுவலகத்தில் முதல்வர் ஸ்டாலினை, மம்தா பானர்ஜி சந்தித்துப் பேசினார். ஸ்டாலின், மம்தா பானர்ஜி ஆகியோர் சந்திப்புக்குப் பிறகு ஒருசேர பத்திரிகையாளர்களைச் சந்தித்தனர். அப்போது ஸ்டாலின் கூறுகையில், "மம்தா பானர்ஜி என்னை மேற்கு வங்கத்துக்கு அழைத்தார். இந்த அழைப்பை நான் ஏற்றுக்கொண்டேன். இது மரியாதை நிமித்தமான சந்திப்பு. அரசியல், தேர்தல் குறித்து பேசவில்லை" – என்றார்.

அதேபோல் மம்தா பானர்ஜி, "தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் என் சகோதரர் போன்றவர். சென்னை வந்துவிட்டு எப்படி முதல்வர் ஸ்டாலினை சந்திக்காமல் செல்ல முடியும். இது மரியாதை நிமித்தமான சந்திப்புதான். இரண்டு அரசியல் தலைவர்களும் அரசியலை தவிர்த்து வேறு விஷயங்கள் பற்றியும் பேசலாம். இந்தச் சந்திப்பில் நாங்கள் அரசியல் பற்றி எதுவும் பேசவில்லை" – என்றார்.

அரசியல் நாகரீகம் கருதி அரசியல் பேசவில்லை என இவ்விருவரும் சொன்னதை நம்புவதற்கு யாரும் தயாராக இல்லை. ஆளுநர் இல. கணேசனையும், பாரதீய ஜனதாவையும் மிகக் கடுமையாக எதிர்த்த மம்தா இப்போது அடக்கி வாசிக்கிறார். ஆளுநர் இல. கணேசனின் அழைப்பை ஏற்று தமிழகம் வந்துள்ளார் மம்தா. இந்தச் சந்திப்பில் உண்மைத்தன்மை அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் வெளிப்படும்.

பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சியில் இல்லாத மாநில முதலமைச்சர்களுக்கும், ஆளுநர்களுக்கும் இடையில் முட்டல், உரசல், மோதல் என்பன உச்சக்கட்டத்தில் உள்ளன. ஆளுநர் தனது கடமையை விடுத்து பாரதீய ஜனதாவின் அரசியலை முன்னெடுத்து வருகிறார்.

ஆளுநர் பதவி விலக வேண்டும் என்று தி.மு.க. தோழமைக் கட்சிகளின் தலைவர்கள் கண்டன அறிக்கை வெளியிட்டனர். திமுக, காங்கிரஸ், மதிமுக, மமக, கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட், விடுதலைச் சிறுத்தைகள், தவாக, கொமதேக, திக உள்ளிட்ட கட்சிகள் கூட்டாக சேர்ந்து இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளன.

தமிழ்நாடு ஆளுநராக ஆர்.என்.ரவி பொறுப்பேற்றது முதல் நாள்தோறும் ஏதாவது சர்ச்சைக்குரிய கருத்தைச் சொல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளார். அதற்குக் காரணம், தமிழகத்தில் தேவையற்ற வீண் சர்ச்சைகளை உருவாக்கி குழப்பம் ஏற்படுத்தும் நோக்கமோ அல்லது தன்னை நோக்கிய கவனிப்பு எப்போதும் இருக்கவேண்டும் என்ற நோக்கமோ எனத் தெரியவில்லை. எதுவாக இருந்தாலும் சனாதனம், ஆரியம், திராவிடம், பட்டியலின மக்கள், திருக்குறள் குறித்து அவர் கூறும் கருத்துகள் அபத்தமானவையாகவும் ஆபத்தானவையாகவும் இருக்கின்றதாக தமிழகத் தலைவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இன்னொரு பக்கம், ஆளுநரை திரும்பப் பெறக் கோரி திமுக சார்பாக ஜனாதிபதியிடம் முறையிடப்படவுள்ளது. திமுக சார்பாக இதற்காக கூட்டணி கட்சிகளிடம் கையெழுத்து வாங்கப்பட்டு வருகிறது. பாரதீய ஜனதாக் கட்சியின் செல்லப்பிள்ளையான ஆளுநர் ரவியை மாற்றுவதற்குரிய சூழல் இப்போதைக்கு இல்லை. ஆனால், இந்தக் கோரிக்கை அவர் மீதான நம்பிக்கையின்மையை வெளிப்படுத்தியுள்ளது.

ஆளுநரும், பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்களும் தமிழக அரசியல் மீது வன்மத்தை வெளிப்படுத்தினாலும், ஸ்டாலின் அரசு இலக்கை நோக்கிப் பயணிக்கிறது.

ரமணி

குத்தூசி

– நிர்வன் குராமாலுகம்

இலங்கையில் மதுபோதையுடன் பாலியலில் ஈடுபடும் இளையோரின் எண்ணிக்கை துரிதமாக அதிகரித்து வருவதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. குறிப்பாக, 18 முதல் 30 வயதானோர் இந்தப் பழக்கத்துக்கு ஆளாகியுள்ளனர்.

பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்பட்டுள்ள மன உளைச்சலால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் பாலியல், எயிட்ஸ் கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் ரசஞ்சலி ஹெட்டியாராச்சி இந்தத் தகவலை குறிப்பிட்டுள்ளார். இது மிகவும் ஆபத்தான நிலைமையாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இளைஞர், யுவதிகளை இலக்கு வைக்கும் 'பாலியல் வலை'

மதுபானம், ஐஸ் உள்ளிட்ட போதைப்பொருளை உபயோகித்து அதற்கு அடிமையாகும் இளைஞர், யுவதிகள் இவ்வாறு பாலியல் உறவில் ஈடுபடுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"இதற்கு முன்னர் இவ்வாறான பாலியல் உறவு காணப்பட்டபோதிலும் தற்போது சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. வெளிநாடுகளில் கெமிக்கல் என அறியப்படும் இவ்வகையான பாலியல் உறவு இலங்கையில் அதிகரித்துள்ளதன் காரணமாக பாலியல் தொடர்பான நோய்களும் அதிகரிக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

போதைக்கு அடிமையாகி ஆண்களுடன் ஆண்கள் உறவுகொள்ளும் வீதமும் அதிகரித்துள்ளது. ஆண்களுக்கிடையில் பாலியல் உறவின் நேரத்தை அதிகரிப்பதற்காக போதைப்பொருளை பயன்படுத்துகிறார்கள்.

இவர்களில் பெரும்பாலானோர் கொழும்பிலும் கம்பஹாவிலும் காணப்படுகிறார்கள்.

கொழும்பில் போதைப்பொருள் உட்கொண்ட பின்னர் உடலுறவுகொள்ளும் குழுக்கள் உள்ளன. அதனால் அவ்வாறு உறவுகொள்வோரின் எண்ணிக்கை துரிதமாக அதிகரித்துள்ளது. நாட்டில் தற்போது எயிட்ஸ் நோய் அதிகரிப்பதற்கு இவ்வகையான பாலியல் உறவும் காரணமாக அமைந்துள்ளது" – இவ்வாறு வைத்தியர் ஹெட்டியாராச்சி குறிப்பிடுகிறார்.

இலங்கையில் இவ்வகையான பாலியல் உறவு கொழும்பு, கம்பஹா உள்ளிட்ட பிரதான நகரங்களில் பரவலாக அறியப்பட்டாலும் கிராமப்புறங்களைச் சென்றடையவில்லை. எனினும், தற்போது நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளமையால் நிலைமை மோசமடையும் வாய்ப்பு மிக அதிகமாக காணப்படுகிறது.

"ஆடைத் தொழிற்சாலையில் தொழில்புரியும் எனது மாதாந்த வருமானம் 28 ஆயிரம் ரூபா மாத்திரமே. மேலதிக நேரம் பணிபுரிந்தால் ஆகக்கூடியதாக 35 ஆயிரம் ரூபா கிடைக்கும். ஆனால், பாலியலில் ஈடுபடும்போது நாளொன்றுக்கு 15 ஆயிரம் ரூபா சம்பாதிக்கிறேன். எனது குடும்பத்தை பட்டினியிலிருந்து காப்பாற்றுவதற்கு வேறு வழியில்லை" – இப்படிக் கூறுகிறார் கட்டுநாயக்கவில் பாலியல் தொழிலில் ஈடுபடும் 31 வயதான பெண்.

"பொருளாதார நெருக்கடி காரணமாக குடும்பத்தில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. வெறும் 28 ஆயிரம் ரூபாவில் குடும்பச் செலவை சமாளிக்க முடியாது. அதனால் நானும் எனது தோழியரும் இணைந்து இந்தத் தொழிலில் விரும்பியோ விரும்பாமலோ ஈடுபட்டு வருகிறோம்" என அவர் மேலும் கூறுகிறார்.

பாலியல் தொழிலில் புதிதாக ஈர்க்கப்பட்ட பெண்கள், தங்களுடைய நிறுவனங்களால் பணிநீக்கம் செய்யப்படலாம் என்ற அச்சத்தின் காரணமாகவே அதில் ஈடுபடுவதாக தெரிவித்துள்ளனர்.

"நான் கிராமப்புறத்தைச் சேர்ந்தவள். மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வீட்டுக்குச் செல்வேன். மாதாந்தம் பணமும் அனுப்புகிறேன். நிறைய பணம் இல்லாமல் நான் வீட்டுக்குச் செல்வதில்லை. எனக்கு இப்போது கிடைக்கும் சம்பளம் மாத வாடகைக்கும் சாப்பாட்டுக்கும் மாத்திரமே போதுமானதாக இருக்கிறது. பாலியல் தொழில் எனக்கு ஆரம்பத்தில் பிடிக்கவில்லை. ஆனால் பணம் தாராளமாகக் கிடைக்கிறது என்பதால் வேதனைகளையும் பொறுத்துக்கொள்கிறேன்" – இவ்வாறு கூறுகிறார், மற்றுமொரு பெண்.

பெண்கள் உரிமைக்காக செயற்பட்டுவரும் "ஸ்டேன்ட் அப் மூவ்மண்ட் ஸ்ரீலங்கா" நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அஷிலா தந்தெனிய இது குறித்து 'தமிழன்' வார இதழிடம் தெரிவிக்கையில்,

ஆடைத் தொழிற்றுறையில் பணியாற்றும் பெண்கள் பணத்துக்காக உடலுறவில் ஈடுபடுவதால் கர்ப்பமடைவதாகவும் பலர் கர்ப்பத்தைப் பாதுகாப்பற்ற முறையில் கலைப்பதாகவும் குறிப்பிட்டார்.

ஆடைத் தொழிற்சாலைகளில் பணியாற்றிய பெண்கள் பலர் தமது தொழிலை விடுத்து பாலியல் தொழிலில் மாத்திரம் ஈடுபடுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

உண்மையில், போதைப்பொருள் பாவனையுடன் பாலியலில் ஈடுபடுதல் மற்றும் பாலியல் தொழிலில் ஈடுபடுதல் ஆகியவற்றை இருவேறு விடயங்களாக கருதிவிட முடியாது. இவை தொடர்புபடுவதற்கு வெகுகாலம் எடுப்பதில்லை.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியானது அனைத்துத் தரப்பினரையும் வெகுவாக பாதித்துள்ளது. ஆயினும், அந்த மன உளைச்சலிலிருந்து மீள்வதற்கும் பணத்தை தேடிக்கொள்வதற்கும் பாலியல் தொழில்தான் தீர்வு என்ற முடிவுக்கு வந்துவிட முடியாது.

மேலும், இவ்வாறான நிலைமை நீடிக்குமானால் இலங்கை மிகப்பெரிய கலாசார சீரழிவுக்குட்பட்டு அதிலிருந்து மீள முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்படலாம். பட்டினி தொடர்பில் ஆராய்வதற்கும் தீர்வு வழங்குவதற்கும் பல்வேறு குழுக்கள் அரசாங்கத்தால் நியமிக்கப்படுவதைப்போல் பாலியலில் ஈடுபட்டு வாழ்க்கையின் போக்கையே மாற்றிக்கொள்ளும் இளைஞர், யுவதிகளை மாற்றியமைக்கவும் பரந்துபட்ட திட்டங்கள் அவசியமாகும்.

NOVEMBER RAIN!

COMMERCIAL CREDIT
FIXED DEPOSITS

(Rates at Maturity)
31%
FOR 4 MONTHS FIXED DEPOSITS
AER - 34.31%

(Monthly Rates)
27%
FOR 4 MONTHS FIXED DEPOSITS
AER - 30.60%

Period	Maturity(P.A)	A.E.R	Monthly(P.A)	A.E.R
3 Months	27.00%	29.86%	24.25%	27.14%
4 Months	31.00%	34.31%	27.00%	30.60%
5 Months	29.00%	31.49%	24.25%	27.14%
8 Months	25.00%	26.01%	23.00%	25.59%
12 Months	26.00%	26.00%	22.00%	24.36%

*Rates mentioned are valid till 30.11.2022 and subject to change as per the CBSL regulations

"Eligible deposit liabilities are insured with the Sri Lanka Deposit insurance scheme implemented by the Monetary Board for compensation up to a maximum of Rs. 1,100,000/- per depositor"

0112 000 000

COMMERCIAL CREDIT AND FINANCE PLC
HEAD OFFICE No . 106, Yatinuwara Veediya, Kandy. Tel : 081 2 000 000
CITY OFFICE No : 165, Kynsey Road, Colombo 08. Tel : 011 2 111 000
A Finance company licensed by the Monetary Board of the Central Bank of Sri Lanka under the Finance Business Act No. 42 of 2011
Company Registration No. : PB 269 PQ. | Date of Incorporation : 1982.10.04 ICRA Rating (SL) BBB Stable

COMMERCIAL CREDIT

வாரவெளியீடு
தமிழன்
THAMILAN WEEKLY
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/ thamilaneditor@gmail.com

ஞாயிற்றுக்கிழமை, நவம்பர் 06, 2022

மாணவர்களின் கற்றல் இடைநிறுத்தப்படக் கூடாது!

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியானது கல்வித்துறையை வெகுவாகப் பாதித்துள்ளது. பெற்றோருக்கு உரிய வருமானம் இல்லாததால் மாணவர்களும் பட்டினியுடன் காலம் கழிக்க வேண்டிய துரதிர்ஷ்டமான நிலைமையை வார்த்தைகளுக்குள் அடக்குவது கடினம்.

நாட்டில் பல்வேறு கிராமப்புற பாடசாலைகளில் காலைக் கூட்டத்தின்போது சிறுவர்கள் மயங்கி விழுவதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் அண்மையில் சுட்டிக்காட்டியிருந்தது.

ஒரு சில பாடசாலைகளில் மாணவர்கள் வெறும் சோறு மாத்திரம் கொண்டுவருகிறார்கள். மேலும், மாணவர்கள் பலர் ஏனையோருடைய உணவை திருடுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பசி வந்தால் பத்தும் பறந்துபோகும் என்பார்களே, இங்கு மாணவர்கள் பட்டினியைத் தீர்த்துக்கொள்வதற்கு என்னதான் செய்வார்கள்?

இவ்வாறானதொரு நிலையில், பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்க முடியாமல் மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகும் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. குறிப்பாக வட மாகாணத்தில் கொரோனா தொற்றுக்குப் பின்னர் மாணவர் இடைவிலகல் அதிகரித்துள்ளதால் அது குறித்து தீவிர கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

2020ஆம் ஆண்டில் கொரோனா தொற்றுப் பரவல் நாடு முழுவதும் தீவிரமடைந்திருந்தது. அப்போது முதல் 14 முதல் 16 வயதுக்கு இடைப்பட்ட மாணவர்களின் இடைவிலகல் வட மாகாணத்தில் அதிகரித்துள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

2020 ஆம் ஆண்டில் வட மாகாணத்தில் 485 மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகியுள்ளனர். 2021ஆம் ஆண்டு அந்த எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டது. அவ்வாண்டில் 380 மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகினர்.

இந்நிலையில், 2022ஆம் ஆண்டு இதுவரையான காலப்பகுதியில் 519 மாணவர்கள் பாடசாலைக் கல்வியை நிறுத்தியுள்ளனர்.

2020ஆம் ஆண்டு மடு கல்வி வலயத்திலேயே அதிகமான மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகியுள்ளனர். அங்கு 94 மாணவர்கள் இடைவிலகினர்.

மன்னார் கல்வி வலயத்தில் 72 பேர், கிளிநொச்சியில் 52 பேர், கிளிநொச்சி வடக்கில் 51 பேர், முல்லைத்தீவில் 42 பேர் என்ற அடிப்படையில் மாணவர்கள் இடைவிலகியுள்ளனர்.

பிள்ளைகள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்துவதற்கு மிக மோசமான வறுமையே பிரதான காரணமாகும். பொருளாதார நெருக்கடியின் விளைவாக பெற்றோர் தங்களது வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர். எனவே, மாணவர்கள் பலர் குடும்பத்தைக் கவனிப்பதற்காக தொழில் தேடிச் செல்வதாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் தெரிவித்துள்ளார். அவர்களில் பலர் வட மாகாணத்திலிருந்து கொழும்பு உள்ளிட்ட பிற நகரங்களுக்கு தொழில் தேடிச் சென்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மாணவிகளுக்கு இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ துணை தேடி பெற்றோர் திருமணம் செய்து வைப்பதாகவும், இதனால் வட மாகாணத்தில் இளவயதுத் திருமணங்கள் அதிகரித்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயமானது பாரதூரமானது. கல்வியில் தனக்கென தனியிடத்தைப் பிடித்து ஏனைய சமூகத்துக்கு உதாரணமாகத் திகழும் வட மாகாணத்தில் இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டிருப்பது கவலையளிக்கிறது.

நாட்டில் பணவீக்கம் அண்மைக்காலமாக தொடர்ச்சியாக அதிகரித்து வந்தது. பொருட்கள், சேவைகளின் விலைகளின் அதிகரிப்பு மற்றும் பணத்தை நினைத்த மாத்திரத்தில் அச்சடித்தமை ஆகியவற்றால் உணவுப் பணவீக்கமும் அதிகரித்தது.

இதனால் மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டனர். நாடு முழுவதும் சுமார் 63 இலட்சம் பேர் ஒருவேளை உணவைத் தவிர்ப்பதாகவும் பெரும்பாலும் ஆரோக்கியமான உணவை உட்கொள்வதில்லையென்றும் உலக உணவுத்திட்டம் அண்மையில் தெரிவித்திருந்தது.

இந்த நிலைமை உடனடியாக சீராக்கப்படாதவிடத்து மோசமான பின்விளைவுகள் ஏற்படக் கூடும் என ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்திருந்தது. இப்போது அந்த எச்சரிக்கைக்கான குறிகாட்டிகளாக நாடு முழுவதும் பல்வேறு சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

அதன் ஒரு பகுதியாக பாடசாலை மாணவர்களின் இடைவிலகலைக் குறிப்பிடலாம். நாட்டுக்கான ஆரோக்கியமான சமுதாயம் பாடசாலையிலிருந்தே உருவாக்கப்படுகிறது. வெறும் கல்வி என்ற வட்டத்தைத் தாண்டி சுயதிறன் மேம்பாடு, ஒழுக்கம், பண்பு, விட்டுக்கொடுத்தல், திட்டமிடல் போன்ற பண்புகளும் பாடசாலைகளிலேயே வளர்க்கப்படுகின்றன.

பாடசாலைகள் எனும் கலாசாலைகளிலிருந்து மாணவர்களின் விலகலானது சமுதாயத்துக்கு பாதிப்பாக அமைவதுடன், நாட்டை வழிநடத்தக்கூடிய சந்ததியினருக்கான இடைவெளியையும் ஏற்படுத்துகிறது.

ஆதலால், இந்த விடயத்தை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. அத்துடன் மாணவர்கள் விலகிச் செல்கிறார்கள் என்ற செய்தியை கவலையாகக் கொண்டு அதனைக் கடந்துசெல்ல முடியாது.

இடைவிலகும் மாணவர்கள் தொடர்பில் புள்ளிவிபரங்களை எடுத்து அதற்கான காரணங்கள் ஆராயப்பட வேண்டும். அதனூடாக இடைவிலகத் தயாராக இருக்கும் ஏனைய மாணவர்களின் நிலைமையையும் குடும்பங்களின் தரவுகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

அவற்றைக் கொண்டு உள்நாட்டு, சர்வதேச நிறுவனங்களின் உதவியுடன் அவ்வாறான மாணவர்களை தொடர்ந்தும் பாடசாலைகளில் தக்கவைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள், முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறான காத்திரமான திட்டங்கள் உடனடியாக அமுல்படுத்தப்படுவது அவசியம் என்பதை வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

கூட்டமைப்பிற்கு மீட்சியில்லை; மாற்றுத் தலைமையே தேவை

வி.தேவராஜ்
மூத்த ஊடகவியலாளர்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கட்சியாகப் பதிவு செய்ய வேண்டுமென கூட்டமைப்பில் இருந்து குரல் எழும்பியுள்ளது. குறிப்பாக இந்தக் குரல் தமிழரசுக் கட்சியில் இருந்து எழுந்துள்ளது. தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இதுவரை காலமும் பங்காளிக் கட்சிகளில் ஒன்றாக இருக்கும் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகளே இந்தக் கோரிக்கையை கடந்த காலங்களில் முன்வைத்தன. தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு வெளியில் தமிழ்த் தேசியத்தை நேசிக்கின்ற சக்திகளும் இந்தக் கோரிக்கையைத் தொடர்ச்சியாக முன்வைத்தன.

ஆனால், கூட்டமைப்பின் தலைமையும் தமிழரசுக் கட்சியும் கூட்டமைப்பை கட்சியாகப் பதிவதைத் தவிர்த்து வந்தனர். இறுதியில் இந்தக் கோரிக்கையை முன்வைத்த கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் பல வெளியேறின அல்லது வெளியேற்றப்பட்டன. அதைப்பற்றி எல்லாம் கணக்கில் எடுக்காத தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினூடாக தமிழரசுக் கட்சியின் அரசியலை முன்னெடுப்பதிலும் பலப்படுத்திக் கொள்வதிலும் தனது முழுக் கவனத்தையும் செலுத்தியது.

Big Brother பாணியில் தமிழரசுக் கட்சி

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர் விவகாரம் குறித்த எந்தவித நிகழ்ச்சி நிரலுமின்றி தமிழரசுக் கட்சியை வளர்த்தெடுக்கும் அரசியலையே பிரதானமாகக் கொண்டு செயற்பட்டது. தமிழரசுக் கட்சி பல சந்தர்ப்பங்களில் கூட்டமைப்பிற்குள் Big Brother பாணியில் ஆட்சி நடத்தியது. இதன்மூலம் தமிழரசுக் கட்சி பெரிதாக ஒன்றையும் பெற்றுக் கொள்ளவில்லை. இறுதியில் கூட்டமைப்பை சிதைப்பதாகவும் தமிழ் மக்கள் கூட்டமைப்பின் மீது வைத்திருந்த நம்பிக்கையைத் தகர்ப்பதுமாகவே அமைந்தது.

மொத்தத்தில் தமிழர்கள் குறித்தோ தமிழர் விவகாரத் தீர்வு குறித்தோ தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் எதிர்காலம் குறித்தோ தென்னிலங்கையின் தமிழர்களுக்கு எதிரான போக்கைத் தடுத்து நிறுத்தும் நிலையிலோ சிங்கள இராஜதந்திரத்துக்கு ஈடு கொடுக்கும் நிலையிலோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் இருக்கவில்லை.

தலையாட்டி பொம்மையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

இதனால் தமிழர் தரப்புக்கு தாயகத்திலும் சர்வதேச ரீதியிலும் தொடர்ந்தும் தோல்விகளே கிடைத்தன. மொத்தத்தில் இலங்கை அரசாங்கத்தினதும் சர்வதேசத்தினதும் தலையாட்டி பொம்மையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் அமைந்தன.

அதேவேளையில் 2009இல் போர் மௌனிக்கப்பட்டபின் வடக்கு-கிழக்கில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதியாக அங்கீகரித்து இலங்கை அரசாங்கத்துக்கும் சர்வதேசத்திற்கும் பிரகடனப்படுத்தினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை மதிக்காது செயற்படவே, கூட்டமைப்பின் தமிழ்த் தேசியத்தில் நம்பிக்கை இழந்து மக்களில் ஒரு பகுதியினர் கூட்டமைப்பிற்கு எதிராகச் செயற்பட்டனர். இதனால் கூட்டமைப்பின் ஆசனங்களில் வீழ்ச்சி ஏற்பட்டது.

2004 பொதுத் தேர்தலில் 20 ஆசனங்கள் மற்றும் 2 போனஸ் ஆசனங்களுடன் 22 நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றது.

2010 பொதுத் தேர்தலில் 13 ஆசனங்கள் மற்றும் ஒரு போனஸ் ஆசனத்துடன் 14 நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றது.

2013 பொதுத் தேர்தலில் 13 ஆசனங்கள் மற்றும் ஒரு போனஸ் ஆசனத்துடன் 14 நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றது.

2015 பொதுத் தேர்தலில் 14 ஆசனங்கள் மற்றும் 2 போனஸ் ஆசனங்களுடன் 16 நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றது.

2020 பொதுத் தேர்தலில் 9 ஆசனங்கள் மற்றும் ஒரு போனஸ் ஆசனத்துடன் 10 நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றது.

இனிவரும் காலங்களில் கூட்டமைப்பின் அரசியல் நிலைமை இன்னும் மோசமாகலாம். இது மாத்திரமல்ல, வடக்கு-கிழக்கில் கூட்டமைப்பு இழந்த ஆசனங்கள் தமிழ்த் தேசியத்திற்கு எதிரான சக்திகளின் கைகளில் வீழ்ந்துள்ளன.

வடக்கும் கிழக்கும் நிர்வாக ரீதியில் ஆட்சியாளர்களால் பிரிக்கப்பட்டபோதும், மக்கள் தமிழ்த் தேசிய உணர்வால் இறுகப் பிணைக்கப்பட்டிருந்தனர். ஆனால், தற்போது மக்கள் தமிழ்த் தேசிய உணர்வுக்கப்பால் வடக்கு-கிழக்கென இரு துருவங்களாகிவிட்டனர். கிழக்கு தமிழ் மக்கள் தனிவழி பற்றி ஆழமாக சிந்திக்கத் தொடங்கிவிட்டனர்.

வடக்கு - கிழக்கில் வாழும் மலையகத் தமிழ் மக்கள் போராட்டத்துடன் கைகோர்த்துப் பயணித்தவர்கள். ஆனால், 'தற்போது ஆற்றைக் கடக்கும்வரை அண்ணன் தம்பி - ஆற்றைக் கடந்தபின் நீ யாரோ நான் யாரோ' என்ற கதையாக நடத்தப்படுவதாகக் குமுறிக் கொண்டிருக்கின்றனர்.

இதுவரை கிழக்குக் கரையோர மாகாண சபை குறித்த கருத்தியலில் இருந்த முஸ்லிம் தரப்பு தற்போது கிழக்கு மாகாண சபை குறித்த கருத்தியலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது.

மொத்தத்தில் தமிழ்த் தேசியம் பரந்த வடக்கு - கிழக்கு கருத்தியலில் இருந்து சுருங்கி யாழ். பெருந்தேசியவாதமாக உருமாறிவிட்டது. 2009இல் போர் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழ் மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கப் புறப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் தமிழ் மக்கள் பெற்றதெல்லாம் இழப்புகளும் தோல்விகளும் தமிழ் மக்களிடையே முற்றிப்போன முரண்பாடுகளுமாகவே உள்ளன.

ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்குமாக உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2004 தேர்தலுடன் தேர்தல் திணைக்கள வெளியீடுகளில் Tamil National Alliance என்ற பெயர் அடுத்தடுத்த தேர்தல்களில் தமிழரசுக்கட்சி என்றே பிரசுரிக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழரசுக் கட்சி விழுங்கியுள்ளதையே தேர்தல் வெளியீடுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

தமிழ்த் தேசியத்தை படுகொலை ஆக்கிய வரலாறு

மொத்தத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கடந்த 13 வருடகால வரலாறு தமிழ்த் தேசியத்தை படுகொலையாக்கிய வரலாறாகவே உள்ளது.

தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினூடாக முன்னெடுத்த அரசியலால் தமிழரசுக் கட்சியும் வாழவில்லை, கூட்டமைப்பையும் வாழவிடவில்லை என்ற நிலையே உருவாகியுள்ளது.

இந்த ஒரு பின்னணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவது குறித்த கோரிக்கையை ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா முன்வைத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவதால் மாத்திரம் திசைமாறிக் கிடக்கின்ற தமிழர் அரசியலை நிமிர்த்திவிட முடியாது. இதற்கு தமிழரசுக் கட்சி பச்சைக்கொடி காட்டுமா என்பதும் கேள்விக்குறியே.

★ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு கட்சியாகப் பதிவுசெய்யப்பட வேண்டும்.

★ கூட்டமைப்புக்கென யாப்பு உருவாக்கப்பட வேண்டும்.

★ கூட்டமைப்புக்கென பொதுச் சின்னம் உருவாக்கப்பட வேண்டும்.

★ சம பிரதிநிதித்துவம் கொண்ட அதி உயர் சபை உருவாக்கப்பட வேண்டும்.

★ நிதி விடயங்களைக் கையாள்வதற்கென ஒரு நிதிக் குழு உருவாக்கப்பட வேண்டும். ஏனெனில், புலம்பெயர் தமிழர்கள் வாரி வழங்குகின்ற நிதிக்கு என்ன நடக்கின்றது, எவர் கைகளில் நிதி முடக்கப்படுகின்றது என்பன குறித்து ஆராயப்பட வேண்டும். கடந்த பல வருடங்களுக்கு முன் தமிழ் அரசியல்வாதி ஒருவரிடம் கனடாவில் வழங்கப்பட்ட நிதி எவ்வாறு செலவு செய்யப்பட்டது என்று கனடா வாழ் தமிழ் மகன் ஒருவர் கேள்வி எழுப்பியபோது, அந்த அரசியல்வாதி வழங்கிய பதில் இது. "பிரபாகரனிடம் கொடுத்த பணத்துக்கு கணக்கு கேட்டீர்களா? என்னிடம் வந்து கணக்குக் கேட்கின்றீர்கள்" என்று திருப்பி கேள்வி கேட்டுள்ளதாக கனடாவில் பரபரப்பாகப் பேசப்பட்டது.

★ கூட்டமைப்பிற்கென தேர்தல் நியமனக் குழு அமைத்தல்.

★ தமிழர் விவகாரத்துக்கென தீர்வுப் பொதியை முன்வைத்தல்.

★ இலங்கை தரப்பையும் சர்வதேசத்தையும் கையாளக் கூடிய குழுவை அமைத்தல்.

★ தமிழர் விவகாரத்துக்கென நிபுணத்துவ குழு (Think Tank) உருவாக்குதல்.

★ தாயகத்தையும் புலம்பெயர் தமிழர்களையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வருதல்.

- இதில் குறிப்பிடப்பட்டுள்ள சில விடயங்களை நிறைவேற்றிக் கொள்வதில் நடைமுறையில் சிக்கல்கள் இருந்த போதும் கூட்டமைப்பின் இலக்குகளில் ஒன்றாக நீண்டகால நோக்கில் உள்வாங்கப்பட வேண்டும்.

1977 இல் தமிழ்த் தலைமைகளுக்கு தமிழ் மக்கள் ஆணை வழங்கினர். இந்த ஆணையை தமிழ்த் தலைமைகள் தேர்தல் அறுவடையுடன் முடக்கிவிட்டனர்.இந்த மக்கள் ஆணையை தமிழ் இளைஞர்கள் கைகளில் எடுத்தனர். 2009 இல் அது மௌனிக்கப்பட்டது. 2009 க்குப் பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு தமிழ் மக்கள் ஆணை வழங்கினர். கூட்டமைப்பு தாம் பெற்ற ஆணையை மதிக்கத் தவறியதால் தலைமைத்துவத்தில் பெரிய வெற்றிடம் தோன்றியுள்ளது.

மக்களின் இன்னொரு ஆணை பெற தமிழ் மக்களுக்கான தலைமை மீள் உருவாக்கப்பட வேண்டும். மீள் உருவாக்கம் பெறும் தலைமை, ரயில் தண்டவாளம் போன்று நாடாளுமன்ற அரசியல், நாடாளுமன்ற அரசியலுக்கப்பால் என இரு தண்டவாளத்தில் பயணிக்க வேண்டும்.

Email : vathevaraj@gmail.com

குருநாகல் முஸ்லிம் வர்த்தக சங்கத்தினால் 15 இலட்சம் ரூபா பெறுமதியான மருந்து வகைகள் குருநாகல் வைத்தியசாலையின் புற்றுநோய்ப் பிரிவுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டன. வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய அதிகாரி சந்தன ஹெதன்கமுவ தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் புற்றுநோய் வைத்திய நிபுணர்களான லீலா சிறிவர்தன, ஜாலிய ஜயசேகர ஆகியோர், முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் முன்னாள் தலைவர் எம்.எஸ்.எம்.அஸான், உப செயலாளர் என்.எப்.சலீப், பொருளாளர் ஏ.எம்.இர்பான் ஆகியோருடன் வர்த்தகப் பிரமுகர்களான நவாஸ் ஹாஜியார், ராசிக் ஹாஜியார் உள்ளிட்ட மிகப் பிரபலமான வர்த்தகப் பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது குருநாகல் முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் தலைவர் எம்.வை.எம்.கியாஸ் தலைமையில் சென்ற குழுவினர் மருந்துப்பொருட்களை வைத்தியசாலையின் அதிகாரிகளிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தனர். இதன்போது வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களுக்கு உணவு வகைகளும் வழங்கிவைக்கப்பட்டன. (இக்பால் அலி)

★ திட்டமிட்டு சஜித்துக்கு தெரிவிக்கப்பட்ட எதிர்ப்பு

★ முற்போக்கு கூட்டணி நிகழ்வுக்கு முன்னர் அச்சுறுத்தப்பட்ட ஜீவன் தொண்டமான்

★ ஐக்கிய தேசியக் கட்சிக்கு புதிய பொதுச் செயலாளர் - கட்சியை மறுசீரமைக்கிறார் ரணில்

★ ரணில் - மஹிந்த இரகசிய சந்திப்பு; உள்ளக சர்ச்சைகளை தீர்க்கப் பேச்சு

கொழும்பு அரசியலின் நிலைமை இன்னமும் ஸ்திரமில்லை.

ஆளுங்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சிதறி சின்னாபின்னமாகி இருந்தாலும் பலமாக இருக்கவேண்டிய எதிர்க்கட்சியும் இப்போது ஒற்றுமையில்லாத நிலைமைக்கு சென்றுவிட்டது.

அரசாங்கத்தின் அடக்குமுறைச் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தியும் கொழும்பில் கடந்த வாரம் நடைபெற்ற எதிர்க்கட்சி ஆர்ப்பாட்டத்தின்போது இது பகிரங்கமாகவே தெரிந்தது.

இந்த எதிர்ப்பு நடவடிக்கைக்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, முன்னிலை சோஷலிசக் கட்சி, சுதந்திர மக்கள் சபை, 43ஆம் படையணி உட்பட 20இற்கும் மேற்பட்ட கட்சிகள் ஆதரவு தெரிவித்தன.

100 இற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்களும், வெகுஜன அமைப்புகளும் பேரணியிலும், கூட்டத்திலும் இணைந்தன. அனைத்து பல்கலைக்கழக மாணவர்

ஒன்றியமும் இந்த எதிர்ப்பு நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்தது.

எனினும், குறித்த போராட்டத்துக்கு ஆதரவு வழங்க அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி. மறுப்புத் தெரிவித்தது. அத்துடன், விமல் வீரவங்ச தலைமையிலான உத்தர லங்கா சபாகயவும் ஆதரவு வழங்கவில்லை.

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் நடத்திய இந்த எதிர்ப்பு ஊர்வலத்தில் கலந்துகொள்ளச் சென்ற எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு எதிர்ப்பு எழுந்தது. வழமைபோலவே அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்த சரத் பொன்சேகாவுக்கு எந்த எதிர்ப்பும் எழவில்லை. மருதானையிலிருந்து ஊர்வலமாக சென்ற பேரணியில் சென்ற மனோ கணேசன், ரவூப் ஹக்கீம் ஆகியோர் அங்கிருந்த நிலைமைகளைப் பார்த்து பேரணியிலிருந்து விலகிச் சென்றுவிட்டனர்.

சஜித் பிரேமதாசவுக்கு எதிர்ப்பைத் தெரிவித்ததன் பின்னணியில் சதி இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி கருதுகிறது. எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாசவுக்கு தர்மசங்கடம் ஏற்படுத்தும் வகையில் ஆர்ப்பாட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பேரணி ஏற்பாட்டாளரான இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலினிடம் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார் என்று அறியமுடிந்தது.

எதிர்க்கட்சிகளின் இந்தப் பேரணியைக் குழப்பும் வேலைகளை அரச ஆதரவு குழுக்கள் பின்னின்று செய்ததாக விமர்சனங்கள் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கடந்த வாரம் மலையகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்று அரசியல் வட்டாரங்களில் பெரிதாகப் பேசப்பட்டது.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைமையக திறப்பு விழாவில், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகள் பங்கேற்றதை பலரும் வரவேற்று, “மலையக அரசியலில் இது புதிய திருப்பம்...” என பாராட்டிவரும் நிலையில், முற்போக்கு கூட்டணிக்குள் அது தொடர்பில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் அரசியல் பீடத்துக்கு அறிவிக்காமல் - அனுமதி பெறாமல், இ.தொ.காவினருக்கு அழைப்பு விடுத்த தொழிலாளர் தேசிய சங்கத்தின் தன்னிச்சையான முடிவு, கூட்டணி ஒன்றுமைக்கு ஆரோக்கியமானதல்ல என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வீ. இராதாகிருஷ்ணன் சுட்டிக்காட்டியுள்ளார் எனத் தெரியவருகின்றது.

தலைமையக திறப்பு விழா ஏற்பாடுகள் குறித்து கூட்டணிக்குள் முன்கூட்டியே கலந்துரையாடப்பட்ட நிலையில், இ.தொ.காவினரை அழைப்பது குறித்து ஏன் அறிவிக்கப்படவில்லை எனவும் ராதாகிருஷ்ணன் கேள்வி எழுப்பியுள்ளார்.

“திறப்பு விழாவுக்கு காங்கிரஸை அழைப்பது பிரச்சினை அல்ல, ஆனால், பொது விடயங்களின்போது கூட்டணிக்குள் தன்னிச்சையான முடிவு ஏற்புடையது அல்ல. இது தொடர்பில் உரிய தரப்புகளிடம் விளக்கம் கோரப்படும்” - என ராதாகிருஷ்ணன் தனக்கு நெருக்கமானவர்களிடம் தெரிவித்துள்ளார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைமையக திறப்பு விழா ஹட்டனில் கடந்த ஞாயிறன்று நடைபெற்றது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் ஆகியோர் நிகழ்வில் பிரதம அதிதிகளாக பங்கேற்றிருந்தனர்.

(07ஆம் பக்கம் பார்க்க)

ஹிருணிக்காவிற்கு ஒரு கடிதம்

வணக்கமடி பிள்ளை ஹிருணிக்கா..

என்னடியாத்தை சுகமா இருக்கிறியே. பிள்ளைகுட்டியள் எல்லாம் சுகமோ... அதுகளையும் இடைக்கிடை கவனிக்க வேணுமடி பிள்ளை... பாவங்கள்தானே அதுகள்.... மனுஷன் என்னவாம். நீ உங்கை ஊர்வலம், ஆர்ப்பாட்டம் எண்டு திரிய அவன்பாவிதானே உந்தப் பெடி பெட்டையோடை கிடந்து மாரடிக்க வேணும்.... சரி..சரி.. என்னண்டாலும் பிள்ளை நான் ஒவ்வொருநாளும் கும்பிடுற நல்லூர்க்கந்தன் உன்னை வடிவாக் கவனிப்பான். உங்கை எங்கினேக்கையும் யாழ்ப்பாணப் பக்கம் ஊர்வலம் அது இது எண்டு வந்தாப்பிள்ளை உவர் நல்லூர் முருகனை ஒருக்கா வடிவாக் கும்பிட்டு உன்ரை ஆர்ப்பாட்டங்களைச் செய்தியெண்டால் சக்சஸ்தான்.

பிள்ளை வடிவாப் பாத்தியெண்டால் உங்கை உவங்கள் தமிழ்க் கட்சிக்காரர் எல்லாரும் விளக்கு வைக்க அடிபடுகிறதிலை இருந்து சும்மா உண்ணாவிரதம் இருக்கிறது வரை எல்லா விளையாட்டுகளையும் அங்கை நல்லூரை மையமா வைச்சுத்தானே செய்யினம். அப்பிடி ஒரு சென்றிமென்ற் இருக்கு. கனக்கப் போவானேன். முந்தி உவங்கள் இயக்கப் பெடியள் எங்கையும் சண்டைக்குப் போகேக்கை நல்லூர் முருகனுக்கு கற்பூரம் கொளுத்தி தேங்காய் உடைச்சுக் கும்பிடுப் போட்டுத்தான் போறவங்கள் எண்டு சனம் பறையிறது... ஆனால், ஒண்டு சொல்லுவன் பேந்து அங்கினேக்கை நிண்டு கும்பிடேக்கை முருகா... முருகா. எண்டு கும்பிடாம அவசரப்பட்டு ரணில் ஒழிக, ரணில் ஒழிக எண்டு கத்திப்போடாதை கண்டியோ... பேந்து கோயில் மணியகாரனுக்கு கடும் கோவம் வந்துபோடும். உன்னைப்பிள்ளை உள்ளுக்கு அடுக்காயினம் கண்டியோ.....

உன்னாணவடி.. மேனை .. ஒவ்வொருநாளும் என்னதான் செய்தியள் வந்தாலும் நீயடி பிள்ளை இருந்திட்டு ஒருக்கா செய்தியளில வந்தியெண்டாலே போதும் ஐஸே.. அண்டைக்குத்தான் செய்தி செய்தியா இருக்கும்... பாரதி கண்ட புதுமைப்பெண் ஆரெண்டு ஆரும் என்னட்டைக் கேட்டால் நான் டக்கெண்டு உன்னைத்தான் சொல்லுவன் கண்டியோ.. அந்தளவு துணிச்சல்காரியடியப்பா நீ.. உன்ரை கொப்பர் பாரத லக்ஷ்மனும் இப்படித்தான் துணிஞ்ச கட்டை... புலிக்கு பிறந்தது பூனையாகுமோ? கொப்பர் அவரின்ரை துணிச்சலை சில நேரங்களிலை தவறான இடத்தில தவறான வேலையளுக்குப் பாவிச்சாலும் நீர் சரியாத்தான் நடந்துக்கொள்ளுறீர் எண்டு என்ரை மனம் சொல்லுது.. ஆனால், உங்கை மற்ற ஆக்கள் என்ன நினைக்கினமோ தெரியேல்லை. சில மோட்டுச் சனம் இந்தப் பெட்டை தேவையில்லாமல் சந்திரமுகி மாதிரி தலையை விரிச்சுப்போட்டு கண்ணை உருட்டி.. உருட்டி கத்துதோ எண்டுதான் நினைக்குங்கள்..

கோட்டாபய பதவியை விட்டுத் துண்டைக் காணேல்லை துணியைக் காணேல்லை எண்டு அங்கை இஞ்சை எண்டு ஒளிச்சு ஒளிச்சு ஓடிப்போனதுக்கு உங்கை சிலர் பறையிற மாதிரி மக்கள் போராட்டமோ வெளிநாடுகளோ காரணமில்லை. நூற்றுக்கு நூறுவீதம் நீதான் காரணம்... எண்டு நான் அடிச்சுச் சொல்லுவன்... எந்தக் கோயிலிலையும் கற்பூரம் கொளுத்திச் சத்தியம் பண்ணுவன். அண்டைக்கு நீயடி பிள்ளை எல்லாரும் கோட்டாபயாவுக்குப் பயந்து பம்மிக்கொண்டு நிக்க அவற்றை மிரிஹான வீட்டுப்படலையுக்கை முதன்முதலா தைரியமா போய் இருந்து கத்திக் குளறி, ஆரம்பிச்சு வைச்ச போராட்டம்தான் பேந்து மக்கள் போராட்டமா மாறி, கடைசியா அவரை பதவியிலிருந்தும் நாட்டிலை இருந்தும் விரட்டினது கண்டியோ.... ஆரென்ன சொன்னாலும் கோட்டாவைத் துரத்தினதுக்கு உனக்கும் கிறடிற் தரத்தான் வேணும்...

கோட்டாவை போன கிழமை ஒருத்தர் சந்திச்சுப் பேசிக்கொண்டிருக்கேக்க... ஹிருணிக்கா முதலில என்ரை படலையுக்கை வந்து குந்தேக்கையே அவவைப் பொலிசைப்போட்டு துரத்தி இருந்தா சனத்துக்கு இந்தளவு தைரியம் வந்திருக்காது.. நானும் போயிருக்கவேண்டி வந்திருக்காது.. எண்டு அவரிட்டை சொல்லிக் கவலைப்பட்டாராம் கோட்டா.. அதெண்டா உண்மைதான்.. ரணில் வீட்டுக்கு முன்னாலயும் தைரியமாப் போன ஆள்தானேடி பிள்ளை நீ ... ஆனா கோட்டா மாதிரி ரணில் இல்லை எண்டது உனக்கு வடிவா விளங்க வேணும் பிள்ளை. ரணில் சிரிச்சுச் சிரிச்சுக் கேமைக் கேப்பார் கண்டியோ... அதால பிள்ளை நீ வலு கவனமா இருக்க வேணுமடி... என்னண்டாலும் மிரிஹானையில ஆரம்பிச்சு ஜனாதிபதி செயலகம் வரைக்கும் நீ வந்த வேகம் இருக்கே சொல்லி வேலை இல்லையடி.. அப்ப அந்த காலப்பகுதிக்குள்ள நடத்திய போராட்டங்களை உவங்கள் தடுத்து நிறுத்தினவங்கள் தானே.. அப்பிடி இருந்தும் பேந்து ஒண்டையும் செய்யமுடியாமப் போட்டுது தானே..பேந்து இப்ப நிண்டு பினாத்துறாங்கள்..

கனசனத்துக்கு உன்னை இப்பதான் துணிஞ்ச ஆளாத் தெரிஞ்சாலும் எனக்கு முந்தியே உன்னைப்பற்றி நல்ல வடிவாத் தெரியுமடி. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரா நவநீதம்பிள்ளை அம்மா இருக்கேக்க நீயடி பிள்ளை ஜெனீவாவுக்கே போய் கொப்பற்றை சாவுக்கு நீதி கேட்டனியெல்லே. அவ நவநீதம்பிள்ளையையும் தமிழ் ஆள் எண்டு போட்டு உவங்கள் விமல் வீரவங்ச ஆக்கள் புலி எண்டவங்கள் எல்லே. எந்தச் சனம் கோட்டாபயவை கொண்டுவந்துதோ பேந்து அதே சனம் அந்தாளைக் கைவிட்டதுபோல உன்ரை கொப்பர் எந்த கட்சிக்காக கஷ்டப்பட்டாரோ கடைசியிலை அதே கட்சி அவரைக் கைவிட்டது எல்லே.. அதாலதானே நீ ஜெனீவா வரைக்கும் ஓடவேண்டி வந்தது எண்டது உங்கை கனபேருக்குத் தெரியாது...

ஜெனீவாக்குப் போய் வேலை இல்லை எண்டது தமிழ் ஆக்களின்ரை விசயத்திலை நடந்தமாதிரி.. உன்ரை விசயத்திலயும் நடந்ததுதானே. தமிழ்ச் சனத்துக்கு நீதி கிடைக்காத மாதிரி உனக்கும் கடைசி வரைக்கும் ஜெனீவாவிலை இருந்து நீதி கிடைக்கேல்லைத்தானே. ஆனால் நீ ரோசக்காரி உதை வடிவா விளங்கினபடியால் தமிழ் அரசியல்வாதியள் வரியம் வரியம் உந்த ஜெனீவாத் திருவிழாவுக்கு காவடி எடுத்துக்கொண்டு திரியிற மாதிரித் திரியேல்லை.. எண்டாலும் நீதி கேட்ட உன்ரை போராட்டத்துக்கு ஒருவிதத்தில வெற்றி கிடைச்சிட்டுது எண்டு நான் அடிச்சு சொல்லுவன் கண்டியோ.

அது இருக்கட்டுமடியாத்தை... நான் சில விஷயங்களைக் கேள்விப்பட்டனான்.. அது உண்மையா எண்டு உன்னட்ட கேக்காம வேற ஆரிட்டை கேக்குறது? அடுத்த ப்ரெசிடெண்ட் எலெக்சனில நீ போட்டியிடப் போறியாம். அதுக்குத்தான் ஊர்வலம் ஆர்ப்பாட்டம் எண்டு அங்கயும் இஞ்சையும் திரியிறியாம் எண்டு சனம் பறையுதுகள். அதுக்கு உன்ரை கட்சிக்குள்ள கடும் எரிச்சல் இருக்கு எண்டும் கேள்விப்பட்டன்.. உன்னோடை திரியிற பெண்டுகளுக்கே உது பிடிக்கேல்லையாம். அவை அங்கயும் இஞ்சையும் எண்டு உதைப்பற்றிக் குசு குசுக்கினமாம். ஆனா ஒண்டு பிள்ளை, அவ சந்திரிகா கம்பஹாவில எலெக்சன் கேட்டு வெண்டு கடைசியா ஜனாதிபதியாகி வந்ததுபோல உனக்கும் வர ஏலாது எண்டில்லை ... துணிஞ்சு போராடுற உந்த துணிவு உன்னட்டை இருக்கிறபடியால அது சிலவேளை சாத்தியமாகிப்போடும் எண்டுதான் பலருக்கும் உன்னில பொறாமை வந்திட்டுதுபோல... குரைக்கிற நாயளுக்கெல்லாம் கல்லெறிஞ்சுகொண்டு இருந்தா இலக்கை நோக்கி போக ஏலாது எண்டதால நீ உன்ரை பயணத்தை தொடர வேணும் எண்டதுதான் இந்தப் பேரம்பலத்தின்ரை ஆசையடி பிள்ளை..

உன்னாண ஒரு விஷயம் சொல்லுறதுக்கு என்னடி, பிள்ளை நீ பிரசிடெண்ட் எலக்சனில நிண்டா ஆர் சப்போர்ட் பண்ணாமல் விட்டாலும் உந்த பொலிஸ் டிப்பார்ட்மெண்ட் ஆக்கள் கட்டாயம் சப்போர்ட் பண்ணுவினம் கண்டியோ. அநுராதபுரத்தில ஞானக்கா சோதிடக்காரியின்றை வீட்டை நீ போனதுமுதல் போனகிழமை கொழும்பில நடந்த ஆர்ப்பாட்டம்வரை பொலிஸ் ஆக்களின்ரை சிநேகித்ததை நல்லாச் சம்பாதிச்சுப்போட்டாய் .. இக்கணம் நீ எலெக்சன் கேக்க அவங்கள் தங்கட ஜீப்புகளிலை லவுட்ஸ்பீக்கர் கட்டி உனக்கு ஆதரவா ரோட்டு ரோட்டாத் திரிஞ்சாலும் திரிவாங்கள் ..

சரியடி பிள்ளை உங்கை வீட்டம்மா சத்தம் போட வெளிக்கிட்டிட்டா.. நான் இன்னொரு நாளைக்கு ஆறுதலா பிள்ளைக்கு கடுதாசி ஒண்டு எழுதுறன்.. ஒருவிசயம் சொல்லுறன் எண்டு குறை நினைக்காதை. இடைக்கிடை வீட்டையும் கவனிச்சுக்கொண்டு கொஞ்சம் அமைதியா வேலையை நடத்திக்கொண்டு போனியெண்டால் எல்லாப் பக்கத்தாலயும் வலு திறம் .. என்னடி பிள்ளை நான் சொல்லுறது விளங்குதுதானே ..

நன்றி
வணக்கம்
இப்படிக்கு பேரம்பலம்

பிற்குறிப்பு – எடியே ஒண்டைச் சொல்ல மறந்துபோனன்.. உவர் கோட்டாபய வார இறுதி நாட்களில பௌத்தாலோக்க மாவத்தை வீட்டிலை இருந்து மிரிஹான வீட்டுக்கு இரகசியமாப் போய் தங்குறதா கேள்விப்பட்டன்.. உன்னாண அந்தாள் இப்ப எல்லாம் வெறுத்துப்போய் நிக்குது.. சந்தடிசாக்கில நான் உந்த விசயத்தைச் சொல்லிப்போட்டன் எண்டு போட்டு பேந்து உங்கினைக்க மிரிஹான பக்கம் போய் ஏதும் கத்திக் குளறிக்கொண்டு நாண்டு கொண்டு நிக்காத என்ன நான் சொல்லுறது...?

LIC
The Hands that Protect
Life Insurance Corporation (Lanka) Ltd.

LIC இலங்கை காப்புறுதி நிறுவனம்
உங்களுக்காகவே தரும் விசேட கொடுப்பனவுகள்

காலாவதியான ஆயுள் காப்புறுதிகளை
புதுப்பித்துக்கொள்வதற்கான சந்தர்ப்பம்

தாமதக் கட்டணத்தில் 50 வீத கழிவைப் பெற்று உங்களது
ஆயுள் காப்புறுதிகளை மீண்டும் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.
நீங்கள் எதிர்பார்க்கும் பயன்களையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

தாமதிக்காமல் உங்களுடைய காப்புறுதி முகவரை அல்லது
அருகில் உள்ள கிளையுடன் தொடர்புகொள்ளுங்கள்.

L.I.C - இலங்கை காப்புறுதி நிறுவனம்
தொலைபேசி: 011255 22 77 / **தொலைநகல்:** 0112590495
www.liclanka.com

நேர்காணல் - நா.தினுஷா

தொழிற்சங்கக் கூட்டணியானால் இ.தொ.காவுடன் இணைவோம்

இராதா எம்.பி. நம்பிக்கை

சீதை அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற உற்சவத்தில் கலந்துகொள்வதற்காகவே முற்போக்கு கூட்டணியின் தலைமையக திறப்புவிழாவின் இடைநடுவில் செல்ல நேர்ந்தது.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைமையகத் திறப்பு விழாவுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஜீவன் தொண்டமானை அழைத்தமை தொடர்பில் எங்களுக்கு முன்னறிவித்தல்கள் எவையும் கிடைத்திருக்கவில்லை. ஒருவேளை இது இ.தொ.காவுடனான தொழிற்சங்கக் கூட்டாக இருந்தால் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவர்களில் ஒருவருமான வி. இராதாகிருஷ்ணன் தமிழன் வார இதழுக்கு தெரிவித்தார்.

அவருடனான உரையாடலின் முழு விபரம் வருமாறு,

Q தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைமை அலுவலகம் டிக்கோயா பிரதேசத்தில் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. இந்த தலைமை அலுவலகம் உங்கள் அனைக்கு பெரும் பலம் என்று கருதுகிறீர்களா?

தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆரம்பிக்கப்பட்டு ஏழு வருடங்களாகின்றன. ஏழு வருடங்களின் பின்னர் எங்களுக்கென தனியான தலைமையகமொன்றை உருவாக்கி கொண்டமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இதனூடாக அந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்களை சந்தித்து கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பமும் எங்களுக்குக் கிடைத்திருந்தது. எதிர்காலத்திலும் அந்த பிரதேசங்களில் தொடர் மக்கள் சந்திப்பை மேற்கொள்ள எதிர்பார்க்கிறோம்.

அந்தப் பிரதேசத்திலுள்ள மக்களின் வரவேற்பு எவ்வாறு இருந்தது?

ஜீவனை அழைத்தது சிலரின் தன்னிச்சையான தீர்மானம்

அண்ணளவாக இரண்டாயிரம் பேர் வரையில் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் ஆர்வத்துடன் இருந்ததையும் அவதானிக்க கூடியதாக இருந்தது.

Q இந்நிகழ்வில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஜீவன் தொண்டமான் கலந்துகொண்டிருந்தமையானது சர்ச்சையாக மாறியிருந்தது. அவருக்கு அழைப்பு விடுத்தது யார்?

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஜீவன் தொண்டமான், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைமை அலுவலகத் திறப்பு விழாவில் கலந்துகொண்டதில் எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. தமிழ் முற்போக்குக் கூட்டணியின் செயலாளர் தன்னிச்சையாக எடுத்த முடிவே எங்களை அந்த இடத்தில் கதிகலங்க வைத்தது.

அதன் காரணமாகவே எங்களுடைய ஆதங்கத்தை பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டி ஏற்பட்டது. அதற்குக் காரணம் எங்களுடன் எந்தவித கலந்துரையாடலையும் முன்னெடுக்காமல், ஜீவனும் இந்த நிகழ்வில் கலந்துகொள்வார் என்று நிமிஷ நேரம் இடம்பெற்ற தினத்தன்று காலையிலேயே எங்களுக்கு அறிவிக்கப்பட்டது. அதற்குத்தான் எங்களுடைய அதிருப்தியை வெளியிட்டிருந்தோம்.

அதேபோன்று, ஜீவன் தொண்டமான் இந்நிகழ்வில் கலந்துகொண்டதற்காக நாங்கள் எங்களுடைய அதிருப்தியை வெளிப்படுத்தவில்லை. தமிழ் முற்போக்கு கூட்டணியின் செயலாளரு பொறுப்பற்ற செயற்பாட்டின் காரணமாகவே அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தோம்.

தமிழ் முற்போக்கு கூட்டணியில் இருக்கும் மூன்று பிரதான கட்சிகளால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வில், ஜீவன் கலந்துகொள்வார் என்று மூன்று கட்சிகளில் பிரதான கட்சிகளுக்கு அறிவிக்கவில்லை. இதுதொடர்பில் அதற்கு முன்னர் கலந்துரையாடப்படவுமில்லை. கூட்டணியின் பங்காளர்கள் என்ற அடிப்படையில் எங்களுக்கு முன்னதாகவே அறிவித்திருக்க வேண்டும். அவராகவே தனியாக முடிவெடுத்து அவராகவே இந்த விடயங்களை செய்தமை எங்களுக்கு மனவருத்தத்தை ஏற்படுத்தியிருந்தது.

Q அவ்வாறெனில், இ.தொ.காவின் தலைவர் இந்நிகழ்வில் கலந்துகொண்டமை தொடர்பான உங்களின் கண்ணோட்டம் என்ன? மலையக மக்களிடையே ஒற்றுமையை நிலைநாட்டுமொரு விடயமாக அமையுமல்லவா?

நிச்சயமாக. நான் இதனை ஆரோக்கியமான செயற்பாடாகவே கருதுகிறேன். இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் கிட்டத்தட்ட 22 வருடங்களாக சேவையாற்றியிருக்கிறேன். ஆகவே, தொழிலாளர் காங்கரஸுக்கும் எனக்கும் புரிந்துணர்வு இருந்தது.

அங்கு 22 வருடங்கள் சேவையாற்றிவிட்டு 2015ஆம் ஆண்டு அங்கிருந்து விலகி வந்திருந்தேன். கட்சி உறுப்பினர்களுக்கும் எனக்கும் ஏற்பட்ட சிறிய மனஸ்தாபத்தின் காரணமாகவே அங்கிருந்து விலகினேன். ஆனால், அதற்குப் பின்னரும் எனக்கும் அமரர் ஆறுமுகம் தொண்டமானுக்கும் இடையிலான உறவு நீடித்தது.

அதன் காரணமாகவே நான் இராஜாங்க அமைச்சராக இருந்தபோது கூட கல்வி அமைச்சினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மாகாணசபைகளினூடாக செய்ய வேண்டும் என்பதற்காக அப்போது ஊவா மாகாண கல்வி அமைச்சராக இருந்த செந்தில் தொண்டமான் மற்றும் மத்திய மாகாண கல்வி அமைச்சர் ரமேஷ் போன்றோரை அழைத்து கலந்துரையாடுவதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தேன்.

அந்தக் கலந்துரையாடல்களுக்கான ஏற்பாடுகளை ஏற்றுக்கொண்டு அவர்களுடைய கலந்துரையாடலுக்கான ஆறுமுகம் தொண்டமான் ஒப்புக்கொண்டிருந்தபோதும் கூட, சில கட்சிகளின் லாலைப்பால் அவர்களால் அதில் பங்குபற்ற முடியாமல் போனது. அதன் தொடர்ச்சியாக அந்த அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியாமல் போயிருந்தது.

அதேபோல், எனக்கு வளாநிதி பட்டம் கிடைத்தபோது இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கும் நாங்கள் அழைப்பு விடுத்திருந்தோம். அந்த அழைப்பை ஏற்று காங்கிரஸின் சார்பில் முத்து சிவலிங்கம் அந்த பட்டமளிப்பு நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார். தொழிலாளர் காங்கிரஸ் அந்த நிகழ்வில் கலந்துகொண்டதாற் ஏனைய கூட்டணிக் கட்சிகள் அந்த விழாவில் பங்குகொள்ளாமல் தவிர்த்து இருந்ததையும் நினைலூட்ட விரும்புகிறேன்.

Q கூட்டணியின் தலைமையக திறப்புவிழாவின்போது திடீரென எழுந்து வந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றதே? அது உண்மையா?

சீதை அம்மன் ஆலயத்தில் உற்சவமொன்று இருந்தது. அதில் பங்கேற்பதற்காகவே நிகழ்வின் ஆரம்பத்திலேயே எனது உரையையும் முடித்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டேன். இதனை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோருக்குக் முதலிலேயே அறிவித்துவிட்டே அங்கிருந்து வெளியேறியிருந்தேன்.

தொழிலாளர் காங்கிரஸுடன் கூட்டு அமைப்பதென்றால் கலந்துரையாடி வியுகமொன்றுக்கு வரவேண்டும்.

Q ஆனால், ஜீவன் தொண்மான் இந்த நிகழ்வில் கலந்துகொண்டதாலேயே நீங்கள் இடைநடுவில் வெளியேறிவிட்டீர்கள் என்று கூறப்பட்டிருந்ததே?

அது பார்வையாளர்களின் கண்ணோட்டமாக இருக்கலாம். அதற்காக நான் புறப்பட்டதும் எனது கட்சியின் செயலாளரோ அல்லது வேறு யாரும் என்னுடன் வரவில்லை. சீதை அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொள்வதற்காகவே அங்கிருந்து புறப்பட்டேன்.

ஜீவன் தொண்டமான் இந்நிகழ்வில் பங்கேற்றமை தொடர்பான செய்திகளை சகல ஊடகங்களும் வெளியிட்டிருந்தன. எனவே, பார்வையாளர்களின் கண்ணோட்டம் அப்படி இருந்தாலும் எனது உண்மையான நோக்கம் அதுவல்ல.

Q இந்நிகழ்வில் இந்திய உயர்ஸ்தானிகரும் கலந்துகொண்டிருந்தார். அவ்வாறானில் மலையகத் தலைவர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்த இந்தியா முயற்சிக்கிறதா?

மலையகக் கட்சிகள் எல்லாம் ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என்பதே இந்தியாவின் தொடர்ச்சியான வேண்டுகோளாக இருந்துவருகிறது. இந்திய வம்சாவளி மக்களின் ஒற்றுமையை பலப்படுத்த வேண்டும் என்பதை இந்தியா எப்போதும் விரும்புகிறது. அதனை நாங்கள் மதிக்கிறோம்.

அதன் காரணமாக முற்போக்குக் கூட்டணியின் தலைமையக திறப்பு விழாவில் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே கலந்துகொண்டமையானது மகிழ்ச்சி தரக் கூடிய விடயமாகவே அமைந்திருந்தது.

Q அவ்வாறானில் கட்சி என்ற அடிப்படையில் உங்களின் அடுத்தகட்ட செயற்பாடுகள் எவ்வாறு இருக்கும்?

தொழிற்சங்கங்களின் இணைவு தொடர்பில் கடந்த மாதம் விடேட கலந்துரையாடலொன்றும் இடம்பெற்றிருந்தது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மாத்திரமல்ல, ஏனைய தொழிற்சங்கங்கள் அனைத்தும் இணைந்து தொழிற்சங்கங்களுக்குள் ஏற்படும் பிரச்சினைகளை தீர்ப்பது குறித்தும் கலந்துரையாடியிருந்தோம்.

இரண்டாவது கலந்துரையாடலொன்றுக்கு செல்வதற்கான சாத்தியக்கூறுகள் அங்கு இடம்பெற்றிருக்கவில்லை. தொழிற்சங்கங்களுக்குள்ளேயே ஒருசில முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன.

அதுபோன்று, இந்தக் கூட்டணியை எவ்வாறு முன்னெடுக்கப் போகிறோம் என்பதை எங்களுக்கு முன்கூட்டியே அறிவிக்க வேண்டும். இது தேர்தலுக்கான கூட்டணியா, அல்லது தொழிற்சங்கத்துக்கான கூட்டணியா, அவ்வாறு இல்லாவிட்டால் இற்நிகழ்வில் கலந்துகொள்வதற்கு மாத்திரம் ஜீவன் வருகை தந்திருந்தாரா, இந்த உறவு தொடர்ந்து நீடிக்குமா என்பது தொடர்பில் எங்களுடன் எதுவும் கலந்துரையாடப்படவில்லை. அதற்கான ஏற்பாடுகள் கூட இதுவரையில் இடம்பெறவில்லை.

Q தேர்தலின்போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸுடன் இணைந்து செயற்பட வேண்டி ஏற்பட்டால் உங்களின் நிலைப்பாடு எவ்வாறு இருக்கும்?

மலையக மக்கள் முன்னணி எப்போதும் தனது தனித்துவத்தை பாதுகாக்கும். அதேவேளை, முற்போக்குக் கூட்டணியின் செயற்பாடுகளுக்கு மலையக மக்கள் முன்னணி தடையாகவும் இருக்காது. இந்த விடயத்தில் நாங்கள் உறுதியாகவே இருக்கிறோம்.

அதேபோன்று சகலருடன் இணைந்து செயற்பட வேண்டும் என்பதே எங்களின் விருப்பம். அவ்வாறு செயற்படுவதென்றால் அதற்கு ஒரு வியூகத்தை வகுக்க வேண்டும். தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படுகிறது. முற்போக்கு கூட்டணி ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்பட்டு வருகிறது. எனவே, இரு தரப்பும் கூட்டு சேர்ந்தால் எவ்வாறு தேர்தலில் போட்டியிடுவது, மக்கள் எவ்வாறு வாக்களிப்பார்கள், மக்களை ஒழுங்குபடுத்தி எவ்வாறு அவர்களை அணுகுவது போன்ற விடயங்கள் கலந்துரையாடி முடிவு காண வேண்டிய செயற்பாடுகளாகும்.

இந்த மாதிரியான விடயங்களில் உடனடியான தீர்மானமொன்றுக்கு வர முடியாது. இருதரப்புமே ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படும் தரப்பாக இருந்தால் நாம் உடனடியாக ஒரு தீர்மானத்துக்கு வரக்கூடியதாக இருக்கும். ஐக்கிய தேசியக் கட்சியுடன் அவர்கள் இருப்பதால் முற்போக்குக் கூட்டணியை சார்ந்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கைகோர்ப்பதா அல்லது அவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைவார்களா போன்ற விடங்கள் நீண்ட கலந்துரையாடலின் பின்னர் எடுக்கவேண்டிய தீர்மானங்களாகும்.

Q இந்த விடயம் தொடர்பில் கூட்டணியிலுள்ள வேறு யாராவது உங்களின் நிலைப்பாட்டில் இருக்கிறார்களா?

அதிருப்தி கூட்டணியிலிருக்கும் எல்லா கட்சிகளிலும் இருக்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரத்தின் அனியிலும் அதிருப்தியை வெளிப்படுத்துபவர்கள் இருக்கிறார்கள். இலங்கை தொழிலாளர் காங்கிரஸிலும் கூட அதிருப்தியாளர்கள் இருக்கிறார்கள். முரண்பாடான அரசியல் தீர்மானங்களை எதிர்பார்த்திருக்கும் இவ்வாறான தொரு சந்தர்ப்பங்களில், இதுபோன்ற செயற்பாடுகள் திடீரென நடக்கும்போது சிக்கலுக்குரியதாக அமைந்துவிடும்.

தற்போதைய நிலைமையில் ஒவ்வொரு தீர்மானமும் கட்டங்கட்டமாக மக்கள் மத்தியில் கொண்டுசென்று அடுத்தகட்டங்களை நோக்கி சென்றிருக்க வேண்டும். அனைவருடனும் கலந்துரையாடி தீர்மானம் எடுத்திருந்தால் சகலரும் இதனை ஏற்றுக்கொண்டிருப்பார்கள். இவ்வாறான சடுதியான தீர்மானங்களை எடுக்கும்போது ஒரு சில முரண்பாடுகள் இருக்கவே செய்யும்.

Q இலங்கை தொழிலாளர் காங்கிரஸுடன் இணைந்து செயற்பட்டால் உங்களுடைய வாக்கு வங்கிக்கு பாதிப்பு ஏற்படும் என்னுகிறீர்களா?

அப்படியொரு காலமும் நான் எண்ணவில்லை. அந்தந்த கட்சிக்குரிய வாக்குகள், சம்பந்தப்பட்ட கட்சிகளுக்கே கிடைக்கும். கூட்டணியாக இருந்துகொண்டு பங்காளிக் கட்சிகளுடன் இணைந்து போட்டியிட்டிருந்தோம். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கூட்டணியில் இணைந்தால் அவர்களுடனும் சேர்ந்து செயற்படும் சந்தப்பம் எங்களுக்கு ஏற்படலாம். மக்களே அதனை தீர்மானிப்பார்கள்.

நான்கு கட்சிகள் ஒன்று சேர்ந்து போட்டியிடும்போது ஒரு சின்னத்திலேயே போட்டியிட நேரும். வெவ்வேறு சின்னங்களில் போட்டியிட முடியாது. ஒரே சின்னத்தில் போட்டியிடும்போது யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை மக்களே தீர்மானிப்பார்கள்.

இங்கே ஜீவன் வருகை தந்தமை தொடர்பில் கலந்துரையாடல் நடத்தப்படாமல் தீர்மானம் எடுக்கப்பட்டது.

எதிர்காலத்தில் அவர்களிடையே அவ்வாறானவொரு கூட்டு அமைக்கப்படுமாக இருந்தால் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்று அது எனதுப்பட்டியில் அமையும் என்பது குறித்து கலந்துரையாடி வியுகமொன்றுக்கு வர வேண்டும்.

உடன்பாட்டுக்கமையவே செயற்பட வேண்டும். இதனை வெவ்வேறு வகையில் பார்க்கவாம். ஒருவேளை இது தொழிற்சங்கக் கூட்டாக இருந்தால் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

இன்று மலையக மக்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. கலந்துரையாடி முடிவுக்கு வரக்கூடியதாக இருக்கும். அது காவத்தின் கட்டாயம்.

அதுவே தேர்தல் கூட்டு என்றால் தீர்மானங்களை உறுதியாக எடுக்க வேண்டி ஏற்படும்.

Q தேர்தலை நடத்தக்கோரி உயர் நீதிமன்றம் செல்லப்போவதாக எதிர்க்கட்சிகள் அறிவித்துள்ளன. இந்த விடயத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணி என்ன நிலைப்பாட்டில் இருக்கிறது?

ஜனாநாயகம் பாதுகாக்கப்பட வேண்டுமெனில் உரிய நேரத்தில் தேர்தலொன்று நடத்தப்படவேண்டும். அதற்கான வாய்ப்புகளை ஜனாதிபதியே ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் மக்கள் இன்று தேர்தலை எதிர்பார்க்கிறார்கள்.

தற்போதுள்ள பல பிரச்சினைகளுக்கான தீர்வாக தேர்தல் அமையும். வெளிநாடுகளினது உதவியை பெற்றுக்கொள்ளவும், நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக்கொள்ளவும் அனுசரணையை பெற்றுக்கொள்ளவும் கட்டாயம் ஜனநாயக ரீதியான மிகிரமான அரசாங்கமொன்று உருவாக வேண்டும். தேர்தலுக்கு செல்வதே தற்போதைய ஒரே தீர்வாக அமையும்.

தற்போதுள்ள அரசாங்கத்தின் மீது மக்களிடம் நம்பிக்கை இல்லை என்பது உண்மை. மக்களின் நம்பிக்கையை வலுப்படுத்த வேண்டுமெனில் தேர்தலே தீர்வாக அமையும்.

“அநீதிக்கான நாட்டில் நீதிக்கான குரல்”

அநீதிகள் நடக்கும்போது அதை தட்டிக் கேட்கும் ஆற்றல் அரசியல்வாதிகளுக்கு மட்டுமல்ல, ஆளுமைகொண்ட துணிச்சல் மிக்க ஊடகவியலாளர்கள், சமூக ஆர்வலர்கள், சட்டத்தரணிகள் அனைவருக்கும் உண்டு.

ஆனால், இலங்கையைப் பொறுத்தவரை ஈழவிடுதலைப் போராட்டம் அகிம்சையில் ஆரம்பித்து ஆயுதப் போராட்டமாக விஸ்தரிக்கப்பட்டபோது கடந்த 1979இல் நாடாளுமன்றத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் தமிழ் இனத்திற்கு எதிராக அநீதிகள் மிகப்பெரிய அளவில் அதிகரித்தன என்பதை எவராலும் மறுதலிக்க முடியாது. அவ்வாறு அநீதிக்காக குரல் கொடுத்த 46 ஊடகவியலாளர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், மதப் பெரியார்கள் என பல்லாயிரக்கணக்கானவர்கள் கொலை செய்த நாடும் நமது நாடுதான்.

திடீர் கைதுகள், வெள்ளைவேன் கடத்தல், சுற்றிவளைப்பு, படுகொலைகள், ஒப்புதல் வாக்குமூலம், சித்திரவதைகள், சிறையில் அடைத்தல் என பல கொடுமைகள் அரங்கேறிக் கொண்டுள்ள காலகட்டத்தில் பல சட்டத்தரணிகள் மத்தியில் சில சட்டத்தரணிகளே துணிச்சலாக நீதிக்கான குரலாக அச்சமின்றி செயற்பட்டனர்.

அதில் ஒரேயொரு பெண் சட்டத்தரணியாக யாழ்ப்பாணத்தில் பிறந்து இலங்கையின் தலைநகர் கொழும்பில் வாழ்ந்த கௌரிசங்கரி தவராசாவின் சட்டத்துறை சேவை ஒப்பற்றதாக விளங்கியிருந்தது. ஓர் இருப்புப்பெண்ணாக நீதித்துறையில் பணியாற்றினார்.

அவர் உயிரோடு இருக்கும்போது அயராது நீதிக்காக உழைத்த பணிகள் உயிரோடு இருந்த காலத்தில் வெளிக்கொணர்வதற்கான சந்தர்ப்பங்கள் இருக்கவில்லை அல்லது அவ்வாறு தன்னை புகழாரம் சூட்ட அவர் விரும்பவில்லை. இன்னும் சொல்வதானால் அவர் மேற்கொண்ட வழக்குகளை பலர் அறிந்திருக்கவில்லை.

கடந்த 2021, செப்டெம்பர் 23இல் நாட்டில் ஏற்பட்ட கொரோனா தொற்றுக்கு இலக்காகி அவர் மரணித்த பின்னர்தான் அவர் ஆற்றிய சேவைகளை பலர் அறியக்கூடியதாக வெளிச்சத்திற்கு வந்தது.

அவரின் கணவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவின் முயற்சியினால் ஓராண்டு நிறைவாக வெளியிடப்பட்ட “கௌரி நீதிக்கான குரல்” என்ற 394 பக்க நூல் ஒன்றின் மூலமாக தனது மனைவி நீதிக்காக ஆற்றிய வழக்குகள், சேவைகள், மனித உரிமைச் செயற்பாடுகள் பற்றிய விடயங்களை ஆழமாக பதிவுசெய்துள்ளார்.

இந்த நூல் வெளியீடும் நினைவு வணக்கங்களும் இதுவரை இரண்டு இடங்களில் நடத்தியதை அவதானிக்க முடிந்தது. ஒன்று, கூந்த மாதம் ஒக்டோபர் 01இல் கொழும்பிலும் ஒக்டோபர் 29இல் யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றன. இரண்டு இடங்களிலும் 1000இற்கும் மேற்பட்டவர்கள், அரசியல் கட்சிகள் வேறுபாடுகளின்றி தமிழ், சிங்கள, முஸ்லிம் பிரமுகர்கள் என பல புத்திஜீவிகள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டத்தரணிகள், முன்னாள் போராளிகள், ஊடகவியலாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என பலரும் இலங்கையில் பல பாகங்களிலுமிருந்து வந்திருந்தமை அவர் ஆற்றிய துணிச்சல் மிகு சட்ட நியாதிக்கத்துக்கு சாட்சியாக இருந்தது.

அந்த நிகழ்வுகளில் எல்லாம் அவரின் சேவைகளை பற்றி உரையாற்றிய அனைவரின் கருத்துகளும் அவரின் தொழில்சார் சட்டத்துறையை விட மனிதாபிமான அவரின் சேவைகளை பிரதிபலித்தமையை காணமுடிந்தது.

“கௌரி நீதிக்கான குரல்” எனும் 394 பக்க மிகப் பெறுமதியான அரிய ஆவண நூல் ஒன்றை பல இலட்சம் ரூபா செலவிட்டு அவரின் கணவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா திறம்பட செய்துள்ளதை காணமுடிந்தது.

அந்த நூலில் இலங்கையில் கடந்த 1979இல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பான முழு விபரமும் அதன் வரலாறும் அதனால் பாதிக்கப்பட்டு தன்னால் வாதாடி விடுதலை பெற்றுக்கொடுத்த 40 வழக்குகள் சம்பந்தமான முழு விபரங்களும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

உயிருடன் பாராட்டைப் பெறவேண்டிய அன்னை திரேசாவாக, இரும்புப்பெண்மணியாக, குரலற்றவரின் குரலாக, மனிதம் நிறைந்த மகத்துவ தாயாக சட்டத்துறையில் முத்திரை பதிலுள்ளார் என்பதை நிரூபணமாக நிரூபித்தது.

இலங்கையின் மிகச்சிறந்த பெண் சட்ட ஆளுமைகளில் ஒருவராக சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசாவின் முதலாம் ஆண்டு நினைவில், ‘1981ஆம் ஆண்டுமுதல் 2022ஆம் ஆண்டுவரையிலான முக்கிய 40 வழக்குகள்’ என்ற தலைப்பில் சேர்க்கப்பட்ட விடயங்கள் அரசியல் ரீதியிலும் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன.

உயிர்நீத்த ஒருவரின் நினைவுமலருக்கு அப்பால் அரசியல்வாதிகளும் சட்டத்தரணிகளும் ஊடகவியலாளர்களும் தமது நூலகத்தில் வைத்திருக்க வேண்டிய முக்கிய மான நூல்களில் இந்நூலையும் சேர்க்க வேண்டும். அதில் எழுதப்பட்ட சட்டம் சார்ந்த விடயங்களை எல்லோரும் அறியவேண்டும்.

அம்மையாரின் இழப்பு இலங்கை சட்டப்பரப்பில் வெகுவாக தற்போது உணரப்படுகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

இலங்கையின் இன்னொரு சட்ட ஆளுமை யான அம்மையாரின் கணவராள தவராசா தனது ஏற்புரையில் “எனக்கு இளமையில் வறுமை மரவில்லை. ஆனால், முதுமையில் தனிமை வந்துள்ளது” எனக் கூறியமை மிகவும் ஆழமானதும் அழுகை தரும் கூற்றாகவும் அவரின் பதிவு காணப்பட்டது.

இலங்கையின் நீதிமன்றங்களிலும் சரி உரிய எதிர்ப்பு சட்ட நடவடிக்கைக்காகவும் தேசத்தின் விடுதலைக்காகவும் உழைத்தவர்கள் வரிசையில் கௌரிசங்கரியின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.

மூத்த சட்டத்தரணி கௌரி தவராசா நாட்டில் ஏற்பட்ட கொவிட்-19 நோயினால் கடந்த 2021 மறைந்துவிட்டார். அவருடைய இறுதி நிகழ்வில் கலந்துகொள்ள முடியாத நிலைமை அனைவருக்கும் ஏற்பட்டது. இவர் பெண்குலத்தின் தலைவியாகவும், சட்டத்துறையிலேயே மிக உயர்ந்த ஆளுமை யுள்ளவராகவும் திகழ்ந்தார்.

நீதிமன்றங்களில் வாதாடி பின்னர் அவர் கொடுத்த வழக்குகளை பதிவுசெய்து அதை தாக்கல் செய்வதிலும் வாதாடுவதிலும் சிறந்தவராக விளங்கினார்.

அவர் தன்னுடைய உழைப்பிற்காக இந்த தொழிலை செய்யவில்லை. தான் ஏற்றுக்கொண்ட வழக்குகளை பல துறைகளிலும் பல வெற்றிகளை பெறவேண்டும், நீதி நிலைக்கவேண்டும் என்ற அடிப்படையிலேயே குற்றவியல் வழக்கறிஞராக செயற்பட்டு வந்தார்.

நாட்டின் முக்கிய மான வழக்குகளிலும், சர்வதேச அளவில் பேசப்படும் வழக்குகளிலும் கௌரிசங்கரி தவராசா முன்னிலையாகியிருந்தவர் என்பதுடன், மனித உரிமைகள் செயற்பாட்டாளராகவும் இவர் அறியப்படுகின்றார்.

வழக்கறிஞர் கௌரிசங்கரி தவராசா பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் முதலாவது வழக்காக குட்டிமணி என அழைக்கப்படும் செல்வராசா யோகச்சந்திரன், ஜெகன் என அழைக்கப்படும் ஜெகநாதன், கறுப்பன் என அழைக்கப்படும் ஞானவேல், ரெலோ இயக்கத் தலைவர் தங்கத்துரை, யோகச்சந்திரன் ஆகியோருக்கு எதிராக 1981, மார்ச் 25இல் நீர்வேலி மக்கள் வங்கிக் கொள்ளை மற்றும் இரட்டைக் கொலையுடன் தொடர்புடையவர்கள் என குற்றப்பத்திரங்களை அப்போது சட்ட மா அதிபராக இருந்த சிவாபசுபதியால் கொழும்பு மேல்நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில் சிரேஷ்ட சட்டத்தரணிகளாக முருகேசு சிவசிதம்பரம், சட்டத்தரணி நவரெட்னம் மற்றும் சட்டத்தரணி உருத்திரமூர்த்தி ஸ்ரீல்கந்தகுமார் ஆகியோருடன் கனிஷ்ட சட்டத்தரணியாக கே.வி.தவராசாவும் ஆஜராகி இருந்தார்.

1983, மார்ச் 01இல் குட்டிமணிக்கும், ஜெகனுக்கும் மரணதண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டது. இதன்போது நீதிபதி, ‘‘உங்கள் இறுதி ஆசை என்ன’’ என்று கேட்டார். குட்டிமணி கண்ணீர் மல்க இவ்வாறு கூறினார்

“நான் எந்தக் குற்றமும் புரிந்த குற்றவாளியல்ல. நான் ஒரு குற்றமற்ற மனிதர். என்னை பொலிஸாரும், இராணுவத்தினரும் கைதுசெய்து சித்திரவதையின் மூலம் நிர்ப்பந்திக்கப்பட்டு ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் பெற்றார்கள். அதனால் குற்றவாளியாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு தமிழீழத்தை உருவாக்குவதற்கான புதியதோர் உத்வேகத்தையும், வளமான உரத்தையும், ஊக்கத்தையும், உந்துதலையும் வழங்கும். இதுதான் ஒரேயொரு வழக்காக இருக்காது. என்னை தமிழீழ மண்ணில் தூக்கில் இடவேண்டும். அதற்கு முன்னர் கண்பார்வையற்ற ஒருவருக்கு எனது இரண்டு கண்களையும் தானம் செய்ய அனுமதிக்கவேண்டும். மலரப்போகும் தமிழீழத்தை எனது கண்கள் பார்க்க வேண்டும் இதுவே எனது கடைசி ஆசை.” -இவ்வாறு கண்ணீர் நிலத்தில் விழும்படி கூறியிருந்தார்.

அடுத்து ஜெகனிடம், ‘‘இறுதி ஆசை என்ன’’ என நீதிபதி கேட்டார். “பொய்யான சாட்சியங்களால் எம்மை குற்றவாளியாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனால் தமிழீழம் மலர்வதை எவராலும் தடுக்கமுடியாது. என்னை தூக்கிலிடப்பட்ட பின்னர் எனது உடலத்தை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்திற்கு ஒப்படையுங்கள். இதுவே எனது கடைசி ஆசை.” - இவ்வாறு ஜெகன் கூறினார்.

ஆனால், வெலிக்கடை சிறை உடைத்து இனப்படுகொலை கொழும்பு சிறையில் அரங்கேறிய வேளை, காவலில் வைக்கப்பட்டிருந்த இவர்கள், 1983ஆம் ஆண்டில் வெலிக்கடை சிறைச்சாலைப் படுகொலைகள் இடம்பெற்றபோது சிங்கள கைதிகளினால் மற்றொரு ரெலோ தலைவர் நடராஜா தங்கத்துரையுடனும், மேலும் 51 தமிழ்க் கைதிகளுடனும் சேர்த்துப் படுகொலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

“கௌரி நீதிக்கான குரல்” புத்தகத்தில் குட்டிமணி, ஜெகன் வழக்கு தொடக்கம் மொத்தம் 40 வழக்குகளில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா, அவரின் பாரியார் மறைந்த கௌரிசங்கரி தவராசா இருவரும் வாதாடிய வழக்குகள் முழுமையாக பதியப்பட்டுள்ளன.

இந்த புத்தகத்தில் 286ஆவது பக்கத்தில் தாம் வாதாடி வெற்றிபெற்ற 24ஆவது வழக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான எனக்கு (பா.அரியநேத்திரன்) எதிராகவும் மற்றும் சக நாடாளுமன்ற உறுப்பினர்களான செ.கஜேந்திரன், சிவாஜிலிங்கம், கே.ஜெயானந்தமூர்த்தி ஆகிய நால்வரும் கடந்த 2006 தொடக்கம் 2008 வரையும் ஜரோப்பிய நாடுகளில் குறிப்பாக, அவுஸ்திரேலியா, ஜேர்மனி ஆகிய நாடுகளில் புலம்பெயர் தமிழர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட பொங்குதமிழ் நிகழ்வுகளில் ஆற்றிய உரைக்கு எதிராக வழக்கு கொழும்பு உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

அதில் இலங்கை அரசியலமைப்பின் 157அ(1) இலங்கையின் ஆட்புலத்துக்குள்ள இடத்தில் தனி அரசொன்று தாபிக்கப்படுவதற்கு ஆளொருவரும் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆதரவு அளித்தல், ஆக்கமளித்தல், ஊக்கமளித்தல், நிதியுதவியளித்தல், பிரிந்துரைத்தல் ஆகாது.

எனினும், அவுஸ்திரேலியா, ஜோமலி, சுவிஸ்சர்லாந்து போன்ற நாடுகளில் 2006 தொடக்கம் 2008 வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், செ.கஜேந்திரன், மு.சிவாஜிலிங்கம், சே.ஜெயானந்தமூர்த்தி ஆகிய நால்வரும் அரசியலமைப்பை மீறி உரையாற்றியுள்ளனர். அவர்கள் தொடர்பாக கொழும்பு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல்செய்த வழக்கும் அந்த வழக்கில் சட்டத்தரணி கௌரிசங்கரி தவராச விடுதலை பெற்றுக்கொடுத்த வியபமும் முழுமையாக ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவினால் விபரமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இவைகளை விட 198 தொடக்கம் 2022 வரையும் மறைந்த சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசா, அவரின் கணவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா ஆகிய இருவராலும் கையாளப்பட்ட 40 வழக்குகளும் அதன் சட்டவாக்கங்களும் விபரமாக படங்களுடன் ஆதாரபூர்வமாக பதியப்பட்டுள்ளமை தனிச்சிறப்பாகவும் ஆவணமாகவும் மாணவர்கள், சட்டத்துறைசார் மாணவர்கள், அரசியல் ஆய்வாளர்கள், ஊடகவியலாளர்கள், அரசியல் தலைவர்கள் எல்லாம் படிக்கவேண்டிய ஒரு வரலாற்று ஆவணமாக இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

பல பிரமுகர்கள், கல்வியாளர்கள், அரசியல் தலைவர்கள், மத பெரியோர்கள் என பலர் மரணிக்கும்போது நினைவுமலர்கள் வெளியிடப்படுவதை காணலாம். ஆனால், அந்த புத்தகங்கள் எல்லாம் மறைந்தவரின் சேவைகளை மட்டும் குறிப்பிடுபவைகளாகவே உள்ளன.

ஆனால், மறைந்த சட்டவல்லுனர் கௌரிசங்கரி தவராசா தொழிலாக சட்டத்தை கையாண்டதை விட சேவையாக செய்துள்ளார். அந்த சேவையில் எவ்வாறு தமது சட்ட நுணுக்கங்களை கையாண்டு சாதனை படைத்துள்ளார் என்பதை “கௌரி நீதிக்கான குரல்” என்ற நூலின் மூலமாக அவர் மரணித்தாலும் அவர் மக்களுடன் வாழ்கிறார் என்ற சரித்திரத்தை அவரின் கணவர் ஜனாதிபதி சட்டத்தரணியும் கொழும்பு கிளை இலங்கை தமிழரசுக் கட்சி தலைவருமான கே.வி.தவராசா வெளிக்கொண்டு வந்துள்ளார் என்பது இந்த நூலின் வாயிலாகவும் அவரின் ஓராண்டு நிகழ்வுகள் மூலமாகவும் ஆவணப் படுத்தியுள்ளார்.

✍பா.அரியநேத்திரன்.

“காலமும் சூழலும் கருத்துகளை மாற்றலாம் ஆனால், வரலாற்றை மாற்ற முடியாது.”

(சண்டே சாம்பார் தொடர்ச்சி)

இந்நிலையில், இ.தொ.காவின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், உப தலைவர் பரத் அருள்சாமி உள்ளிட்டோரும் திறப்பு விழாவில் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. திறப்பு விழா முடியும்வரை ராதாகிருஷ்ணன் மேடையில் இருக்கவில்லை. ஆலய நிகழ்வு எனக் கூறி அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

அதேவேளை, தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஒரு தரப்பும், ஜீவனின் வருகை குறித்து அதிருப்தியில் உள்ளது.

ஜீவன் தொண்டமான் இந்த நிகழ்வில் கலந்துகொண்டமை குறித்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்குள்ளும் அதிருப்தி ஏற்பட்டுள்ளபோதிலும் பொதுநாகரிகம் கருதி இந்த நிகழ்வில் கலந்துகொண்டதாக கட்சியின் முக்கியஸ்தர்களிடம் தெரிவித்துள்ளார். மலையக தலைவர்கள் அனைவரும் ஒரே மேடையில் தோன்றியமைக்கு இந்தியாவே காரணமென அரசியல் வட்டாரங்களில் பேசப்படுவதும் இங்கு கவனத்திற்கொள்ளப்பட வேண்டும். இதற்கிடையில் இந்த நிகழ்வு நடந்த தினமன்று அங்கு முக்கிய சம்பவம் ஒன்றும் நடந்துள்ளது. இ.தொ.கா. பொதுச் செயலர் ஜீவன் தொண்டமான் நிகழ்வுக்கு வரும்போது மேடைக்கு அருகில் அவரை தடுத்து தாக்குவதற்கு சிலர் முயன்றுள்ளனர். ஆனாலும் அதனை சமாளித்த ஜீவன், அழைப்பின்பேரில் இந்தத் திறப்பு நிகழ்வுக்கு வந்ததாகவும் சண்டித்தனம் காட்ட முயற்சிக்கவேண்டாமெனவும் கேட்டதாக தெரிகிறது. இந்தச் சம்பவம் தொடர்பில் ஜீவன் நிகழ்வில் கலந்துகொண்ட முக்கியஸ்தர்களிடம் எதுவும் கூறவில்லை. அந்த பிலி நேரத்தில் அவர்களிடம் இதனைக் கூறுவது சரியில்லையென நினைத்து மனதுக்குள் வைத்துக்கொண்டு நிகழ்வை முடித்து வெளியேறினாராம் ஜீவன்.

எவ்வாறாயினும், ஜீவனின் வருகை வேலுகுமார், உதயகுமார் எம்.பிக்களுக்கும் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாக தெரிகிறது. எனினும், அதிருப்தியாளர்கள் அனைவருடனும் தொலைபேசியிலும் நேரடியாகவும் பேசிய தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் அவர்களை ஆசுவாசப்படுத்தியிருப்பதாக அறியமுடிந்தது.

இதற்கிடையில் ஜனாதிபதி ரணில் கடும் அரசியல் நெருக்கடியை எதிர்நோக்கும் சூழ்நிலை உருவாகி வருகிறது.

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து ராஜித சேனாரத்ன சகிதம் பல எம்.பிக்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டாலும் வருவதாக சொன்ன பல எம்.பிக்கள் பின்னடித்து வருகின்றனர். அதேசமயம், அமைச்சர் பொறுப்புகளை வழங்காவிட்டால் பட்ஜெட்டை நிறைவேற்றவிடப் போவதில்லையென்று ஆளுங்கட்சியின் மூத்த எம்.பிக்கள் பலர் ரணிலுக்கு தகவல் அனுப்பியுள்ளதாகத் தெரிகிறது. நாடாளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்டத்தை எப்படியாவது பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்ற முயற்சிக்கிறார் ரணில். ஆனால், நாடாளுமன்றத்தின் அதிகாரம் தன்னிடம் இருப்பதாகக் காட்ட முயல்கிறார் பெலி. கடந்த வாரம் அமெரிக்காவிலிருந்து தொலைபேசியூடாக தொடர்புகொண்ட அவர், கொழும்பிலுள்ள அரசியல் பிரமுகர்களுடன் நீண்ட இரகசிய பேச்சுகளை நடத்தியுள்ளார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்காமல் இழுத்தடிப்புகளை ரணில் செய்தால் நாடாளுமன்றத்தில் அவருக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும்வகையில் செயற்படுவதென்றும் இங்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது.

பெரில் ராஜபக்ஷ இவ்வாறு ஆலோசனைகளை நடத்திவருகின்ற அதேசமயம், ஐக்கிய தேசியக் கட்சியை பலப்படுத்த ரணிலும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இளம் எம்.பிக்களை ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உள்வாங்கி அடுத்த தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகிறார் ரணில். அதற்காக ஐக்கிய தேசியக் கட்சியை முற்றுமுழுதாக மறுசீரமைக்கத் தீர்மானித்துள்ள ரணில், முதற்கட்டமாக கட்சியின் செயலாளராக ரவி கருணாநாயக்கவை நியமிக்க முடிவு செய்துள்ளார். அதேபோல் கட்சியின் இளைஞரணி பொறுப்பையும் புதிய ஒருவருக்கு வழங்க முடிவு செய்துள்ளார் ரணில்.

இதேவேளை, கடந்த வியாழனன்று கொழும்பில் ஜனாதிபதி ரணிலுக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு இடையில் சந்திப்பொன்று நடந்தது. மஹிந்த ராஜபக்ஷ தனது இரண்டாவது மகன் யோஷித்தவின் இல்லத்தில் இருந்தபோதே ஜனாதிபதியை சந்திக்கும் அழைப்பு வந்தது. இப்போதெல்லாம் மஹிந்த யோஷித்தவின் இல்லத்தில் மாலை வேளைகளை செலவிடுகிறார். யோஷித்த பெண் குழந்தையொன்றுக்கு கடந்த வாரம் தந்தையாகினார். மகன்களான நாமல், ரோஹித்த ஆகியோருக்கு மூத்த குழந்தைகள் ஆண்கள் என்பதால் குடும்பத்தில் பிறந்த மூத்த முதல் பெண்குழந்தை யோஷித்தவினுடையது என்பதால் அந்த மகிழ்ச்சியில் அங்கு நேரத்தை செலவிடுகிறார் மஹிந்த.

அந்த இடைவெளிக்குள் ரணிலை சந்திக்கும் அழைப்பு வந்தநேரம் உடனடியாக புறப்பட்ட மஹிந்த, ரணிலுடன் நீண்டநேரம் பேச்சுகளை நடத்தினார்.

அமைச்சரவை நியமனங்கள் குறித்தே இந்தச் சந்திப்பில் பேசப்பட்டது. எகிப்துக்கு இன்று புறப்படவுள்ள ரணில், நாடு திரும்பிய பின்னர் அரசியல் இழுபறி நிலைமைகளைத் தணிக்கும் வகையில் சில தீர்மானங்களை அறிவிப்பாரெனத் தெரிகிறது.

-சிவா இராமசாமி

rh i

வட மாகாணத்தை சீரழிக்கும் போதைப்பொருள் வர்த்தகம்

அக்கினியான்

யாழ்ப்பாணம் என்றவுடன் வெளிநாட்டவரும் வெளி மாவட்டத்தவரும் நினைக்கும் ஒரு விடயம், அது ஒரு தனித்துவமான வாழ்க்கை முறைகளையும் சம்பிரதாயங்களையும் மரபுகளையும் கொண்ட பிரதேசம். கந்தபுராண கலாசாரத்துக்குப் பெயர்பெற்ற கிராமங்கள் உழைப்பை நம்பி வாழும் உயர்ந்த குடிகளையும் கோயில்களையும் கொண்ட குடாநாடு. ஆறுமுகநாவலரும் அருள் ஞானப்பிரகாசரும் வாழ்ந்து காட்டிய மண். வடலிகளும் வாழைகளும் கடலும் களனிகளும் அழகை அள்ளிவீசும் குடா கொண்ட பிரதேசம். இந்தப் பிரதேசத்தில்தான் தற்போது போதைப்பொருள் பாவனையும் ஹெரோயின் விற்பனையும் கஞ்சா கடத்தலும் மலிந்துபோன பிரதேசமாக வடக்கு பிரதேசம் மாறிவிட்டது.

ஒருகாலத்தில் யாழ்ப்பாணம் என்றால் அது அனுஷ்டானங்களாலும் மரபுவழி சமூகத்தவரும் சடங்குகளும் சம்பிரதாயங்களும் மலிந்த பிரதேசமாகவும் காணப்பட்டது, கணிக்கப்பட்டது. இன்றோ வடக்கு அந்த பெறுமானத்தையும் பெருமையையும் இழந்து, அல்லகோலப்படுகிற அவலத்தைக் காணுகிறோம். வடக்கில் விதம் விதமான போதைப்பொருள் பாவனையானது முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளதாகவும் இதனால் வயது வித்தியாசமின்றி சமூக வேறுபாடின்றி பெருந்தொகையானோர் இதற்கு அடிமையாகியிருக்கும் அவலநிலையொன்று வடக்கை ஆகிரமித்துக்கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு மக்களின் வாழ்வியல் பண்பாடுகள் சில தொன்மங்களையும் மரபுவழி செயற்பாடுகளையும் கொண்டதாகவே நீண்டகாலம் இருந்துவந்திருக்கிறது. இதை அழிப்பதற்கு அல்லது இல்லாமல் செய்வதற்கு போர்த்துக்கீசர் காலம் தொடக்கம் பிரித்தானியர் ஆட்சி இடம்பெற்ற காலம்வரை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் யாழ்ப்பாணத்தில் தோன்றிய ஆறுமுகநாவலர் போன்ற சமயப் பெரியார்கள் புத்திஜீவிகள் ஆகியோரின் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளால் அதனை எவராலும் அழித்தொழிக்க முடியாதுபோனது.

இத்தகைய பாரம்பரியமும் பண்பாடும் நிறைந்த வடபுலத்தில் அண்மைக்காலமாக திடீரென போதைப்பொருள் பாவனை அதிகரித்துவருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதை சமயப் பெரியார்கள், பாடசாலை அதிபர்கள், பொலிஸ் அதிகாரிகள், அரசியல்வாதிகள், ஆசிரியர்கள் மற்றும் பிரமுகர்கள் தெரிவித்து வருகிறார்கள். இந்தப் பாவனையானது மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள், வேலையற்றவர்கள், யுத்தத்தால் பாதிக்கப்பட்டோர் என பல தரப்பினர் இந்த கெடுதிக்குள் ஆளாக்கப்பட்டு வருகிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த துர்நடத்தையின் காரணமாக வடக்கு மண்ணில், கிராமங்களில் மரணங்கள் இடம்பெறுகின்றன. படுகொலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கொள்ளைச் சம்பவங்கள் தலைவிரித்தாடுகின்றன, கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் கொடுமைகள் என ஏராளமான கொடுமைகள் மலிந்த இடமாக குடாநாடு மாறியிருக்கிறது. இந்த ஓட்டம் எங்கு கொண்டுபோய்விடப்போகிறது என்பது பற்றி குடாநாட்டைச் சேர்ந்த எல்லோரும் கவலைப்படுகிறார்கள். குறித்த சுகாதாரப் பகுதி தகவலின் அடிப்படையில் கடந்த கால் வருடப் பகுதியில் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி சுமார் 13 பேருக்கு மேல் பரிதாபமாக உயிரிழந்துள்ளதாக தெரியவருகின்றது. இந்த இழப்புகள் அனைத்தும் பாவனையின்பாற்பட்ட தாக்கங்களினால் ஏற்பட்டதென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் குடாநாட்டுக்கு விஜயம் செய்திருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதுபற்றி தனது கவலையை அக்கறையுடன் தெரிவித்திருந்தார். வடக்கில் யாருமே எதிர்பார்க்காத முறையில் போதைப்பொருட்களின் பாவனைகள் அதிகரித்துக்கொண்டிருக்கின்றன. இதைத் தடுப்பதற்கு முடியாமல் உள்ளது. பாதுகாப்புப் படையால் மட்டும் இந்த நடத்தைகளை தடுத்துவிட முடியாது. சகலரும் ஒன்றிணைந்தால் மட்டுமே தடுக்க முடியும். போதைப்பொருள் குற்றச்சாட்டின்பேரில் கைதுசெய்யப்படுவோரை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதை நிறுத்திக்கொண்டு அவர்களுக்கென புனர்வாழ்வு நிலையங்களை அமைத்து மறுவாழ்வு அளிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். இதற்கு ஏற்றவகையில் சட்ட ஏற்பாடுகளை நீதவான் நீதிமன்றுக்கு வழங்கவேண்டும் என்ற கருத்தை தெரிவித்திருந்தார்.

யுத்தத்துக்குப் பின் வடமாகாணத்தின் அரசியல் பொருளாதாரத்தையும் ஏனைய வளர்ச்சிகளையும் இல்லாது ஆக்குவதற்கு திட்டமிட்ட முறையில் மேற் கொள்ளப்படும் சதிகளின் இன்னொரு பக்கவிளைவாகவே இந்தப் பாவனையை அதிகரிக்கப்பண்ணி இளைஞர், யுவதிகளை இக்கெடுதிக்கு ஆளாக்கி போதைப்பொருள் உலகமாக வட புலத்தை மாற்றும் ஒரு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இந்தப் பாவனைப்பொருட்கள் கடத்தப்படகின்றன. பாவிக்க ஊக்கம் அளிக்கப்படுகின்றன. குறிப்பாக, பாடசலை மாணவர்களை நோக்கிய திட்டங்கள் மிக முறையாகவே கொண்டு செல்லப்படுகின்றன. இதை திட்டமிட்ட முறையில் செய்கின்றவர்கள் யார். இவர்கள் அடைய விரும்பும் இலக்குகள் என்ன என்பது புரியாத விடயமல்ல.

யாழ். குடாநாடு ஒரு காலத்தில் தலைசிறந்த கல்விகூடங்களைக் கொண்ட பிரதேசமாக இருந்துள்ளது. இங்கு பிரித்தானியர்களாலும் ஏனைய வெளிநாட்டவர்களாலும் உள்ளூர் பிரமுகர்களாலும் உருவாக்கப்பட்ட பாடசாலைகளிலிருந்து தலைசிறந்த மாணவர்கள் உருவாக்கப்பட்டார்கள், கல்விமான்கள் உருவாகினார்கள். அரச உத்தியோகத்தர்கள் என்றும் மருத்துவம், பொறியியல், கணக்கியல் வட்டத்துறை சார்ந்தவர்கள் என்று உருவாக்கியதில் பாடசாலைகள் பிரதான பங்களிப்பு செய்துள்ளன. அமெரிக்க மிஷன் மெதடிஸ்த மிஷன் போன்ற கிறிஸ்தவ துறையினர் யாழப்பாணத்தில் தலைசிறந்த பாடசாலைகளை உருவாக்கித் தந்தார்கள். இதன் காரணமாக சிறந்த கல்விமான்கள், துறைசார் வல்லுனர்கள், அதிகாரிகள், அரச துறையினர் உருவாகினார்கள். இந்த வளர்ச்சிகண்டு பிரமித்துப்போனவர்கள் அதிகம். இவற்றிலிருந்தே அரசியல் பொருளாதாரம் மற்றும் துறைகளை தீர்மானிக்கும் சக்திகளாக யாழ்ப்பாணம் விளங்கிய நிலையிலேயே உரிமைப்போர் ஒன்றுக்கான அடித்தளத்தை யாழ்ப்பாண மண் இட்டிருந்தது. இதை எதிர்காலத்தில் இல்லாதொழித்து வரண்ட பாலைவனமாக்கும் முயற்சியின் வெளிப்பாடே இன்றைய குறித்த போதைப்பொருள் பாவனைகளை கொண்டுவந்ததும், ஊக்குவிப்பதுமான நடவடிக்கைகளாகும்.

குடாநாட்டில் போதைப்பொருள் பாவனையை கொண்டுவருவதற்கும் அதிகரிப்பதற்கும் கடத்துபவர்களை ஊக்குவிப்பதற்கும் காரணகர்த்தாக்களாக இருப்பவர்கள் படையினராகும் என்ற பாரிய குற்றச்சாட்டை நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் சுமத்தியிருக்கிறார்.

அவரின் கருத்துப்படி, இவற்றுக்கெல்லாம் படையினர் ஆதரவளித்து வருகிறார்கள். கடல் மார்க்கமாக போதைப்பொருட்கள் கொண்டுவரப்படுகின்றன. ஆகாய மார்க்கமாக கடத்தப்படுகின்றன. அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டில் மாத்திரம் கோடிக்கணக்கான பெறுமதியுடைய கஞ்சா கடத்தப்பட்டு பிடிபட்டுள்ளன.

அதேபோன்றே ஹெரோயின் என்ற போதைப்பொருள் பல்வேறு கிராமங்களில் வியாபாரப்படுத்தப்படுகின்றதென சுட்டிக்காட்டியிருந்தார் ஸ்ரீதரன். இது எந்தளவுக்கு உண்மை என்பது நாளாந்தம் வரும் செய்திகளினூடாக தெரிந்துகொள்கிறோம்.

70 ஆயிரத்துக்கு மேற்பட்ட படையினர் வடக்கில், கிழக்கில் குவிக்கப்பட்டிருக்கிறார்கள். வேறு மாகாணத்தில் இல்லாத அளவுக்கு இந்த நிலை காணப்பட்டதும் படையினர் போதைப்பொருள் கடத்தலை தடுப்பதற்கு போதுமான நடவடிக்கைகளை எடுப்பதில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார். இந்தக் குற்றச்சாட்டில் உண்மை இருக்கிறதோ இல்லையோ யாழ். குடாநாட்டை இந்த அகோரத்திலிருந்து காப்பாற்றுவதற்கு படையினரால் போதுமான பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்ற செய்தியை அண்மையில் வடமாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், எதிர்காலத்தில் இந்த நாட்டின் ஒவ்வொரு துறையையும் பொறுப்பேற்று வழிநடத்தவேண்டிய இளைய தலைமுறையினர் தற்போது இப்பாவனை அதிகரிப்பினால் சிறைக்குள் கிடந்து அழிந்து போகிறார்கள். வட மாகாணத்தில் 60 பொலிஸ் நிலையங்கள் இயங்குகின்றன. 700 தமிழ்ப் பொலிஸார் கடமையில் ஈடுபட்டு வருகிறார்கள். அதுவுமன்றி 700 தமிழ் தெரிந்த சிங்களப் பொலிஸார் கடமையாற்றி வருகிறார்கள். இவ்வாறு பாதுகாப்பு நிலைகள் பலம் பெற்றிருக்கின்றபோதும் சிறிதுகாலத்துக்குள் 16 பெண்பிள்ளைகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். பல வாள்வெட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன என்று தனது கவலையைத் தெரிவித்திருந்தார்.

யாழ். குடாநாட்டில் இடம்பெற்று வருகின்ற சம்பவங்களைப் பார்க்கிறபோது வயது வேறுபாடின்றி பெண்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ஆளாக்கப்பட்டு வருகிறார்கள். வாள்வெட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆவா குழுவினர், அரசடிக் குழுவினர் என

பல்வேறு குழுக்கள் உருவாகி சமூக சீர்கேடான பல விடயங்கள் இடம்பெற்று வருகின்றன. இதன் காரணமாக ஒருசில வாரங்களுக்குள் 508 குற்றவாளிகள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றுக்கு கொண்டுசெல்லப்பட்டிருக்கிறார்கள் என பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் இவ்விவகாரம் தொடாபில் ஆராய்வதற்காக யாழ். குடாநாட்டுக்கு விஜயம் செய்திருந்த நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ ஓர் ஆறுதல் வார்த்தையை தெரிவித்திருந்தார். இது விடயம் தொடாபில் அரசு போதிய நடவடிக்கையை எடுக்கத் தயாராக இருக்கிறது. பொதுமக்கள் உரிய ஆதரவை தரவேண்டுமெனக் கோரியிருந்தார்.

இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, பிரதம செயலாளர், அரசாங்க அதிபர், படை அதிகாரிகள், கல்விபுலம் சார்ந்தவர்கள், சுகாதார அதிகாரிகள், வைத்தியர்கள் ஆகியோர் கலந்துகொண்டு நிலைமைகளை துல்லியமாக கலந்தாலோசித்துள்ளனர்.

இதன்போது வடமாகாணத்தின் போதைப்பொருள் பாவனை தொடர்பாகவும் அதனைத் தடுக்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது. இது தொடபில் கருத்தை முன்வைத்திருந்த நீதி அமைச்சர் போதைப்பொருள் பாவனையைத் தடுப்பதற்கு முப்படையினரால் மாத்திரம் முடியாது சமூகத்திலுள்ள அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

கிழக்கில் மூவினத்தவர்களும் வாழ்கின்ற காரணத்தினாலும் பாதுகாப்புத் தரப்பினரின் நடவடிக்கைகள் தீவிரமாக கண்காணிக்கப்படுவதாலும் அதிகமான பாதிப்பு ஏற்படாதபோதும் தமிழ், முஸ்லிம் பாடசாலை மாணவர்களை நோக்கிய திட்டமிட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பது பொதுவாக கூறபபடும் செய்திகள். அதேநேரம் இந்த சமூக கெடுதிகள் தெற்கையும் விட்டு வைக்கவில்லை என்பதற்கு தெற்கில் பிரபல பாடசாலைகள், கல்விக்கூடங்கள் ஆகியவற்றிலும் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளதாகவே பல்வேறு தகவல்கள தெரிவிக்கின்றன.

அண்மையில் மேல் மாகாண பாடசாலைகள் தொடபில் கருத்து தெரிவித்திருந்த நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து போதைப்பொருள் விற்பனைகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்தக் கெடுதிகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமாயின், சட்டங்களை கடுமையாக அமுல்படுத்தவேண்டும் எனவும் போதைப்பொருள் பாவனையை தடுக்க பெற்றோர், ஆசிரியர், வலயக்கல்வி அதிகாரிகள், பொலிஸார் இணைந்து விழிப்புணர்வுக் குழுக்களை அவசரமாக அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஆலோசனை நல்கியிருந்தார்.

அமைச்சரின் இவ்வாலோசனை காலத்துக்குரிய தேவையாக இருந்தாலும் பூனைக்கு யார் மணி கட்டுவது என்பதுதான் முக்கியமான கேள்வி. நீதி அமைச்சர் கூறியதுபோல் இந்தப் பாவனையை தடுப்பதாக இருந்தால் வெறும் முப்படையினரால் மட்டும் தடுத்துவிடக்கூடிய விடயமாக இது இருந்துவிடவில்லை.

சகல தரப்பினரும் மாணவர்கள் மற்றும் சமூகத்தின் நன்மை கருதி கரிசனை காட்ட வேண்டுமென்பது அவசியமான விடயமாகும்.

போதைப்பொருள் கடத்தல் தொடர்பிலும் பாவனை தொடர்பிலும் அதிகம் பாதிக்கப்படும் பயன்படுத்தப்படும் மாவட்டங்களாக அல்லது பிரதேசங்களாக அடையாளமிட்டுக் காட்டப்படும் யாழ். குடாநாடு, மன்னார், திருகோணமலை, முல்லைத்தீவு, மட்டக்களப்பு என்பன பிரதான கேந்திர மையங்களாக குறிப்பிடப்படுகின்றன. குறிப்பாக, பொருள் கடத்தல் அதிகமாக மேற்கொள்ளப்படும் மாவட்டங்களாக யாழ். குடாநாடு அதாவது, கடல் அண்டிய பகுதிகளான மன்னார், திருகோணமலை பிரதான கேந்திர தளங்களாக பயன்படுத்தப்படுவதாக கடற்படை அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்தப் போரில் வெற்றிபெற வேண்டுமாயின் தனி ஆயுத பலத்தால் யுத்த தளபாடங்களால் முடியாது என்பது புரியப்பட வேண்டிய விடயம். ஆயுதங்கள் நிகழ் காலத்தை மாத்திரம் அழிப்பவையாகக் காணப்படும். ஆனால், போதைப்பொருள் என்பது நூற்றாண்டையே அழித்துவிடும். அதுமட்டுன்றி போர் அழிவுகளிலிருந்து மீண்டெழுவதற்கும் எழுந்தமைக்கும் பல உதாரணங்கள் உலகில் உள்ளன. ஆனால், இதுபோன்ற அழிவுகள் காலத்தையே அழித்துவிடும் என்பதை ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

எம்.எஸ்.அமீர் ஹுசைன்

உல்லாசத்துறையைக் காட்டி மக்கள் போராட்டங்களை நசுக்கும் முயற்சி

நாடு தொடர்ச்சியாக பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வருவதால் அதன் எதிரொலியாக மக்களும் கடுமையான பொருளாதார பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இன்றைய வாழ்க்கைச் செலவை ஈடு செய்யும் வகையில் வருமானமில்லாமல் திண்டாடுவதோடு, கிராமிய மட்டங்களில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்கள் அதிகமாக பட்டினியாகவே காலம் கடத்தும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. அன்மைக்கால நெருக்கடியால் கூலித் தொழிலாளர்களே இவ்வாறான மிக மோசமான பாதிப்பை எதிர்நோக்கி வருகின்றனர். அதிலும் தோட்டத் தொழிலாளர்களின் நிலைமை மேலும் மோசமாக இருக்கின்றது.

தினசரி அவர்களது உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்கப்படாமை, இன்னும் நாள் சம்பளமாக 1000 ரூபாவுக்கு குறைந்த வருமானம், அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு காரணமாக தமது அன்றாட தேவைகளை ஈடுசெய்ய அந்த வருமானம் எந்தவகையிலும் போதுமானதாக இல்லை. தொடர்ந்து தோட்டங்களில் தொழில் இல்லாத நிலையில் அன்றாடம் உணவுக்காக திண்டாடும் நிலை தொடர்கின்றது. மறுபுறமாக உரத் தட்டுப்பாடு காரணமாக தோட்டங்களில் தினசரி பறிக்க வேண்டிய கொழுந்து அளவை விட குறைவாக கொழுந்து எடுத்தால் கிடைப்பது 600 ரூபாவுக்கும் குறைவான ஊதியமாகும். அவ்வாறான ஒரு நிலையில், அன்றாட ஜீவியத்தை சமாளிப்பதே பெரும் திண்டாட்டமாக மாறி வருகின்றது.

அடிமட்ட நிலையில் உள்ள மக்களின் நிலை இவ்வாறிருக்க நடுத்தர வகுப்பு மக்களுக்கும் இதே பிரச்சினைதான் இருக்கின்றது. அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவை ஈடு செய்ய போதுமான வருமானம் இல்லாததால் மக்கள் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர். இவ்வாறான ஒரு நிலையில், கடந்த 2022 நவம்பர் 02 ஆம் திகதி கொழும்பில் அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ஊர்வலம் நடைபெற்றது. தற்போதைய ஆட்சியில் நடக்கும் அடாவடித்தனங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலேயே எதிரணியில் உள்ள அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் உட்பட பல தரப்பினர் ஒன்றாக இணைந்து இந்த எதிர்ப்பு ஊர்வலத்தை ஏற்பாடு செய்திருந்தனர். ஆனாலும், இந்த அரசாங்க எதிர்ப்பு மக்கள் ஊர்வலம் தொடர்பாக ஆட்சியாளர்கள் தெரிவித்து வரும் கருத்துகள் வெறும் ஒருபக்க நியாயங்களை அடிப்படையாகக் கொண்டவையாகவே உள்ளன.

இந்த எதிர்ப்பு ஊர்வலத்தைக் கட்டுப்படுத்த பொலிஸ் கட்டளைகள் சட்டம் மற்றும் அரசாங்கத்திற்கு இருக்கும் எல்லா வழிகளையும் பயன்படுத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டாலும், திட்டமிட்டபடி எதிர்ப்பு வெளிப்படுத்தப்பட்டதை அவதானிக்க முடிந்தது. ஆனாலும், நாடு இருக்கின்ற சூழ்நிலையில் இவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கைகளால் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற கைகொடுக்கும் குறிகாட்டிகளில் மேலும் வீழ்ச்சி ஏற்படலாம் என்பது ஆட்சியாளர்களது கருத்தாகும். குறிப்பாக இவ்வாறான போராட்டங்களை கண்டு உல்லாசப் பிரயாணிகளது வருகை வீழ்ச்சியடையும் - அதனால் நாட்டிற்கு கிடைக்கின்ற வருமானம் இல்லாமல் போகலாம் என்பதே கருத்தாக முன்வைக்கப்படுகின்றது.

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் தேசிய வருமானத்தை அதிகரிக்கச் செய்யவும் இயலுமான இன்னும் எத்தனையோ வழிகள் இருக்கையில் ஆட்சியாளர்கள் கருதிக்கொண்டிருப்பது உல்லாசப் பிரயாணத்துறையை மாத்திரமாக இருப்பது பெரும் வியப்பாக இருக்கின்றது. பொருளாதார அபிவிருத்திக்கு ஒத்தழைப்பை வழங்கி உள்நாட்டிற்கு போதுமான வருமானத்தை ஈட்டித் தரக்கூடிய, அரசாங்கம் போதுமான கவனம் செலுத்தாத பல துறைகள் உள்ளன. நாட்டிற்குள் அமெரிக்க டொலர் பற்றாக்குறையாக இருப்பதால் அந்த டொலரை கொண்டு வரக்கூடிய துறையாக ஏற்றுமதித்துறை, உள்நாட்டு உற்பத்தித்துறைகள், வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்கள், சர்வதேச வர்த்தக வாணிபம், ஊழல் இல்லாத ஆட்சி என்று இன்னும் பல அம்சங்கள் உள்ளன.

இவற்றைவிட முக்கியமானதாக அமைவது இலங்கை பற்றிய சர்வதேச அவதானமும் நல்லபிப்பிராயமும் ஆகும். பொதுவாக கம்யூனிச மற்றும் கிழக்காசிய நாடுகள் மனித உரிமைகள் பாதுகாப்பு தொடர்பாக அவ்வளவாக கவனிக்காவிட்டாலும், ஐரோப்பிய மேற்குலக நாடுகள் பார்ப்பது ஒரு நாட்டில் கடைப்பிடிக்கப்படுகின்ற மனித உரிமைகள் பாதுகாப்பு, சர்வதேச சட்டங்களுக்கான மதிப்பும் கௌரவமும், ஆட்சியாளர்களின் வெளிப்படைத்தன்மை, நேர்மை, ஜனநாயக மரபுகளை கடைபிடிப்பதில் காணப்படுகின்ற ஆர்வம் போன்றவற்றையாகும். ஆனாலும், கடந்த காலங்களில் இத்தகைய நிலைமைகளில் காணப்பட்ட அரசாங்கத்தின் கொள்கைகளிலான பின்னடைவுகள், தூரநோக்கு இல்லாத அரச கொள்கை, சிங்கள பௌத்த தீவிரவாதம் காரணமாக முஸ்லிம்கள் மீதான அடக்குமுறைகள், தமிழர்கள் மீதான அடக்குமுறைகள் காரணமாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையான ஜெனிவாவின் நெருக்குதல்கள், உள்நாட்டில் காணப்பட்ட ஊழல்கள் போன்ற விடயங்கள் இலங்கையின் சர்வதேச உதவிகள் மற்றும் உள்நாட்டிற்கு டொலர் வருவதில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்திய விடயங்களாகும்.

இத்தகைய விடயங்களை சரியாக புரிந்து அவற்றை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்காமல் மக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களையும் துன்பங்களையும் ஆட்சியாளர்களுக்குப் புரியவைத்து அவற்றை தடுப்பதற்கு அழுத்தங்களை கொடுக்கும் வகையில் எதிர்ப்பு ஊர்வலங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் முன்னெடுக்கும்போது அவற்றை அவசரகால தடைச் சட்டத்தை பயன்படுத்தியும் பயங்கரவாத நடவடிக்கை என்று கட்டுப்படுத்தவும் அதனால் உல்லாசப் பிரயாணத்துறை பாதிக்கப்படும் என்று காரணம் காட்டி அரசியலமைப்பால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை நசுக்க முற்படுவதை கேலிக்கூத்தான விடயங்களாகவே பார்க்க வேண்டி இருக்கின்றது.

எவ்வாறாயினும், கடந்த ஏப்ரல் மாதம் கடுமையான முறையில் முன்னெடுக்கப்பட்ட முன்னைய ஆட்சிக்கு எதிரான மக்கள் எதிர்ப்பால் ஒரு பிரதமர், நிதி அமைச்சர், ஜனாதிபதி ஆகியோர் பதவிகளை விட்டு வெளியேறவும் அதனால் மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தின் செல்வாக்கும் ஆட்சியில் பெற்றிருந்த பங்கும் சரிவடைய அடிப்படை காரணமாக அமைந்ததும் ஆட்சியாளர்கள் யதார்த்தமாக கண்ட விடயங்களாகும். அந்த மக்கள் போராட்டத்தின் பின்னர் அப்போதைய ஆட்சியாளர்களாக இருந்து 69 இலட்சம் வாக்குகளைப் பெற்று அரசாங்கம் அமைக்க காரணமாக இருந்த பொதுஜன பெரமுன என்ற அரசியல் கட்சியும் மூன்றாக உடைய காரணமாக அமைந்தது. இத்தகைய எதிரொலி காரணமாக தற்போது பதவியில் இருக்கின்ற அரசாங்கத்திற்கும் ஆபத்து ஏற்பட்டு பொறுப்பற்ற விதமாக ஆட்சி அதிகாரங்களை அனுபவித்து வருகின்ற ஆட்சியாளர்களுக்கும் ஆபத்து ஏற்படலாம் என்ற அச்சநிலை காணப்படுவதே இவ்வாறு மனித உரிமைகளாக இருந்தாலும் சரி, ஜனநாயக உரிமைகளாக இருந்தாலும் சரி, எதையும் பார்க்காமல் சட்டங்களை பயன்படுத்தி கட்டுப்படுத்த முற்படுவதன் நோக்கமாகும்.

எவ்வாறாயினும், கடந்த ஏப்ரல் மாதத்திற்கு முற்பட்ட நிலையில் இருந்து தொடரும் பொருளாதார நெருக்கடியை பின்னணியாகக் கொண்ட பலவிதமான பக்க விளைவுகள் எந்தவிதமான மாற்றங்களும் இன்றி தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலைமைகளில் மாற்றம் ஏற்பட படிப்படியான பொருளாதார அபிவிருத்திக்கு கைகொடுக்கும் துறைகளிலான முன்னேற்றங்கள் ஏற்பட வேண்டும். பண வீக்கம் குறைந்தபட்சம் 15 வீதத்தை விட குறைவடைய வேண்டும். அப்போதே அத்தியாவசியப் பொருட்கள், சேவைகள் துறைகளில் விலைகள் குறைவடைந்து வாழ்க்கைச் செலவு குறையும் சூழ்நிலை உருவாகும். அதேநேரம் கடந்த 2019ஆம் ஆண்டு முதல் 2022 மே மாதம் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ பதவி துறக்கும் வரையான காலப்பகுதியில் ஆட்சியில் இருந்த அமைச்சர்களில் பலர் ஊழல்களில் ஈடுபட்டு முறைகேடாக சேகரித்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட சொத்துகள் தொடர்பாக தேடிக் கண்டுபிடிக்கும் எந்தவிதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப் படவில்லை.

அவை தொடர்பாக மக்கள் சுட்டிக்காட்டவும் எதிர்ப்பை வெளிப்படுத்தவும் வீதிக்கு இறங்கும்போது அவசரகால தடைச் சட்டத்தையும் பொலிஸ் கட்டளைச் சட்டங்களையும் பயன்படுத்தி மக்கள் எதிர்ப்பை நசுக்க முற்படுவது அராஜக ஆட்சிக்கு நிகரான நடவடிக்கையாகும். தொடர்ந்தும் இந்த நாட்டில் ஆட்சியாளர்கள் ஊழல்களில் ஈடுபட்டு நாட்டை சூறையாடும் வரையில் மக்கள் மௌனிகளாக இருந்தால், எதிர்வரும் காலங்களில் இதைவிட மோசமான நிலைகள் ஏற்படலாம். ஆனாலும், மக்களில் ஒரு தரப்பினருக்கு பால்வார்த்த அதே குடும்ப ஆட்சியை மீண்டும் ஏற்படுத்துவதில் இருக்கின்ற ஆர்வமும் முயற்சியும் நாட்டைப் பாதுகாக்க வேண்டும், இந்த நாடு பொருளாதார அபிவிருத்தியின்பால் செல்ல வேண்டும், மக்களது வாழ்க்கை வளமடைய வேண்டும் என்ற எந்த எதிர்பார்ப்பும் இல்லை. முன்னைய அதே குடும்ப ஆட்சி மலருமானால் மீண்டும் நாட்டை சூறையாடலாம் என்பது அத்தகைய ஆட்சிக்கு நெருக்கமான மக்களை ஏமாற்றி கண்களைக் கட்டி ஆட்சி செய்ய நினைக்கும் அரசியல்வாதிகளது எதிர்பார்ப்பாகும்.

ஜனநாயகம் என்பது மாற்றுக் கருத்துகளை மதிப்பதும் ஏற்றுக்கொள்வதுமாகும். ஆட்சியாளர்கள் முறைகேடாக நடக்கும்போது அல்லது நாட்டிற்கு பாதகமான திட்டங்களை முன்வைத்தல், சட்டங்களை இயற்றுதல், செயற்பாடுகளில் ஈடுபடும்போது அவற்றுக்கு எதிராக குரல் எழுப்பும்போது அதிகாரிகள் விழிப்படைய வேண்டும். மக்களுக்கு ஏற்படுகின்ற அநீதிகள், கஷ்டங்களை முடிவுக்கு கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். குறிப்பாக அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட பலவிதமான வரிகள் நாட்டில் மக்களுக்கும் பல்வேறு துறை சார்ந்தவர்களுக்கும் மேலும் பளுவை சுமத்தி இருக்கின்றது. மக்கள் அனுபவிக்கின்ற பொருளாதார கஷ்டங்களை மேலும் உக்கிரமடையச் செய்வதாக உள்ளன. இந்நிலையில் இருந்து பார்க்கும்போது ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியில் அமர்ந்தாலும், ஆட்சியதிகாரத்தில் தொடர்ந்தும் கண்மூடித்தனமான ஆலோசனைகளை வழங்கி மற்றும் திட்டங்களை முன்வைத்த அதே முன்னைய அதிகாரிகள்தான் இன்னும் பதவிகளில் இருக்கின்றனர் என்ற சந்தேகம் எழுகின்றது. இவ்வாறான ஒரு நிலையில், முன்னோக்கி வரவுள்ள வரவு - செலவுத் திட்டமும் அமைந்தால் பொருளாதாரத்துறை மேலும் பாதிக்கப்படும் அபாயம் நிலவுகின்றது.

அதனால் மக்கள் எதிர்ப்பு எதனை உணர்த்துகின்றது? நாட்டு நலன் என்ற அடிப்படையில் அரசாங்கம் விதிக்கின்ற சட்டங்கள், அமுல் படுத்துகின்ற திட்டங்கள், கொள்கைகள் போன்றவற்றால் பாதகமான விளைவுகள் பிரதிபலனாக அமைவதாக தென்பட்டால், அது தொடர்பாக கவனம் செலுத்துவதை விட்டுவிட்டு போராட்டங்களை நசுக்கி ஆட்சியை தக்கவைத்துக்கொள்ள முற்படுவதால் நாட்டிற்கு பாதகமேயன்றி நல்லது நடக்காது என்பது உறுதியாகின்றது.

தற்போது விற்பனையில்

விலை ரூ.60/=

தொடர்புகளுக்கு : 076 139 3805

ஈரான் யாசகரும் இலங்கை அரசும் ஒன்றென்கிறார் டலஸ்!

உரையாடல் - நா.தினுஷா

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சி அரசாங்கத்தின்போது செயற்பட்டது போன்றே தற்போதும் நிலைமையை தனக்கு சாதகமாக்க முயற்சிக்கிறார். தேர்தலை நடத்தினால் தோல்வியடைந்துவிடுவோம், அதிகாரம் போய்விடும் என்ற காரணங்களுக்காக இந்த அரசாங்கம் தேர்தலைக் கண்டு பயங்கொள்வதாக சுதந்திர மக்கள் சபையின் உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டலஸ் அழகபெரும தெரிவித்தார்.

உலகின் அழுக்கான மனிதர் அமோ ஹாஜிக்கும் இந்த அரசாங்கத்துக்கும் வித்தியாசம் இல்லை. அவர் நீராட பயந்ததைப் போன்று, இலங்கை அரசாங்கம் தேர்தலைக் கண்டு பயங்கொண்டு, உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை முற்றாக ஒழிக்க முயற்சிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

'தமிழன்' வார இதழுக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவருடனான உரையாடலின் முழு விபரம் வருமாறு:

தற்போதுள்ள நிர்வாக முறையை மாற்றியமைக்க வேண்டும் என்று கோரியும், நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் அனைவரையும் எதிர்த்து கடந்த காலங்களில் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள். ஆனால், தற்போது எதிர்க்கட்சிகள் அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்கின்றன. இவ்விரண்டுக்கும் இடையிலான வேறுபாடு என்ன?

அமைதியான வீதி பேரணியொன்றையே அரசியல் கட்சிகள் கடந்த வாரம் முன்னெடுத்திருந்தன. ஜனநாயகத்தை மதிக்கும் அனைத்து நாடுகளிலும் சுதந்திரமாக ஆர்ப்பாட்டம் மற்றும் போராட்டங்களை முன்னெடுப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

வீடுகளுக்கு தீ வைத்து, சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்தி, மக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் அரசியல் கட்சிகளின் ஆர்ப்பாட்டம் இடம்பெறவில்லை. அமைதியான ஆர்ப்பாட்டமாகவே இது இடம்பெற்றிருந்தது.

ஒரு கிலோமீற்றர் தூரம் நடந்து சென்றே ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்களின் கைகளில் தடிகளோ, கற்களோ இருக்கவில்லை. இது மிகவும் அமைதியான, ஆயுதங்கள் தாங்காதவொரு போராட்டமாகவே இடம்பெற்றிருந்தது. எனவே, நாட்டின் நிலைமையில் மாற்றத்தை ஏற்படுத்தும் விடயத்தில் அரசியல் கட்சிகள் தலைமைத்துவத்தை வழங்கவேண்டியது அவசியமாகவுள்ளது.

எதிர்த்தரப்பில் சுயாதீனமாக இயங்கிவரும் சுதந்திர மக்கள் சபை என்றழைக்கப்படும் உங்கள் அணியும் இந்த ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவளித்திருந்ததா?

அடக்குமுறைக்கு எதிரான ஆர்ப்பாட்டம் என்பதால் நாங்களும் ஆதரவளித்திருந்தோம்.

நீங்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டீர்களா?

நான் அன்றைய தினம் கொழும்பில் இருக்காததால் என்னால் கலந்துகொள்ள முடியவில்லை. இருந்தபோதும் எங்களின் ஆதரவை வழங்கியிருந்தோம்.

இந்த ஆர்ப்பாட்டத்தையும் முடக்குவதற்கு பொலிஸார் முயற்சித்திருந்தார்கள் அல்லவா?

பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலில் இருப்பதால் ஏற்படக்கூடிய பாரதூரத்தை வெளிப்படுத்தியும், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துமே இந்த அமைதியான ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறானதொரு ஆர்ப்பாட்டத்தை அடக்குவதற்கு பொலிஸார் முயற்சிக்கிறார்கள் என்பது கவலைக்குரிய விடயமாகும்.

ஆர்ப்பாட்டங்களால் சுற்றுலாப் பயணிகளின் வரவில் வீழ்ச்சியடையும் என்று அரசாங்க தரப்பு, வாதம் செய்கிறது. பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்ற அபாயமான சட்டங்கள் அமுலிலுள்ள நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகளை அனுப்புவதற்கு முன்னேற்றமடைந்த நாடுகள் விரும்புவதில்லை. எனவே, சுற்றுலாத்துறையை அபிவிருத்திசெய்ய வேண்டும், பொருளாதார நிலைமையை சீராக்க வேண்டும் என்றால் நாட்டிலுள்ள சூழலை சீராக்கிக்கொள்ள வேண்டும்.

ஆகவே, அரசாங்கம் அதனை செய்யாமல் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டம் இருக்கிறது என்று தெரிவித்து, இருக்கும் சூழ்நிலைகளையும் பாதகமாக்கிவிடக்கூடாது.

அரசாங்கத்திலிருந்து நீங்கி வந்து எதிர்த்தரப்பில் தனியானதொரு சுயாதீன குழுவாக இயங்கி வருகிறீர்கள். இந்நிலையில், சன்ன ஜயசுமன எம்.பி, தொடர்ந்து நாமல் ராஜபக்ஷவை விமர்சிப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் உங்கள் அணியின் கௌரவத்தை பாதித்துவிடாதா?

சன்ன ஜயசுமன யாருடைய தனித்துவத்தையும் பாதிப்பதுபோல் பேசுபவர் அல்ல. தனிநபர் ஒருவர் தொடர்பில் பொய் கூறியதும் இல்லை. மற்றவர்கள் மீது சேறு பூசுபவரும் அல்ல.

அவ்வாறு அவர் மற்றவர்களுக்கு சேறு பூசும் வகையில் பேசியிருந்தால் நீங்கள் கூறுவதை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். ஆனால், அவர் அப்படியானவர் அல்ல. அவர் இளைய அரசியல்வாதியொருவர். 36 வயதில் பேராசிரியர் பதவியைப் பெற்றுக்கொண்டவர். உலக விசேட ஆய்வாளர்கள் தொடர்பில் அமெரிக்கப் பல்கலைக்கழகமொன்றினால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வில் அவருக்கும் இடமளிக்கப்பட்டுள்ளது. அரசியல் ரீதியான கேள்விகளுக்கே அவர் பதிலளிக்கிறார்.

தேர்தலை காலந்தாழ்த்தினால் உலகில் மிகவும் அழுக்கான நபருக்கு ஏற்பட்ட நிலைமையே அரசாங்கத்துக்கும் ஏற்படும் என்று அண்மையில் அறிவித்திருந்தீர்கள். எதன் அடிப்படையில் அவ்வாறு கூறுகிறீர்கள்?

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலத்திலேயே மாகாண சபைத் தேர்தலை காலந்தாழ்த்தினார்கள். தமிழ் மொழியை தாய்மொழியாகக் கொண்டுள்ள மக்களையும் முறையாக அரசியலில் இணைத்துக்கொள்வதற்காகவே மாகாண சபை தேர்தல் முறைமை கொண்டுவரப்பட்டது. தமிழ் மக்கள் அரசியலிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளார்கள், எனவே, அவர்களையும் பங்காளர்களாக்கிக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தே, 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக மாகாண சபைகளை ஸ்தாபித்தோம்.

எனினும், 2017ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தலை அவர்களுக்கு ஏற்றவாறு காலந்தாழ்த்திக்கொண்டார்கள். 2017 – 2018ஆம் ஆண்டுகளில் ஒன்பது மாகாண சபைகளினதும் தேர்தல் காலந்தாழ்த்தப்பட்டிருந்தது. நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக சில மாகாண சபைகளின் தேர்தல் காலந்தாழ்த்தப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாண சபை ஐந்து வருடங்களுக்கு முன்னரே காலந்தாழ்த்தப்பட்டுள்ளது. மாகாண சபை என்றவொன்று இல்லாத நிலைமையே நாட்டில் நிலவுகிறது. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் எவரும் இன்மையினால், தற்போது அவற்றை மாகாண சபைகளாகக் கருத முடியாது. அவற்றை நிறுவனங்களாகவே கொள்ள வேண்டும்.

தற்போது, ஜனாதிபதியாக இருந்துகொண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலையும் காலந்தாழ்த்த முயற்சிக்கிறார். சரியாக இருந்தால் இந்த வருடம் மார்ச் மாதம் 21ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தியிருக்க வேண்டும். ஆனால், எங்களின் அரசாங்கத்தால் அந்தத் தேர்தல் ஒரு வருடத்துக்கு காலந்தாழ்த்தப்பட்டது. எனவே, அடுத்த வருடம் மார்ச் மாதம் 21ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் இடம்பெற வேண்டும்.

சட்டத்தின் பிரகாரம் இந்தத் தேர்தலை நடத்துவதற்கான முன்னெடுப்புகளை ஆறு மாதத்துக்கு முன்பிருந்தே ஆரம்பித்திருக்க வேண்டும். அவ்வாறெனில், 2022ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 20ஆம் திகதியின் பின்னர் தேர்தலுக்கான காலம் ஆரம்பித்துவிட்டது. தேர்லுக்கான பெயர்ப்பட்டியலை திருத்துதல் உள்ளிட்ட சகல பணிகளையும் ஆரம்பித்திருக்க வேண்டும்.

இவ்வளவு காலமும் அமைதியாக இருந்த அரசாங்கம், செப்டெம்பர் 20ஆம் திகதிக்கு பின்னர் நித்திரையிலிருந்து எழுந்ததுபோன்று திடீரென உறுப்பினர்களின் எண்ணிக்கையை எண்ணாயிரத்திலிருந்து நான்காயிரமாக குறைக்கவேண்டும். உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகம் போன்ற கருத்துகளை முன்வைக்கிறார்கள். உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகம் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

ஆனால், அரசாங்கத்தின் உண்மையான நோக்கம் அதுவல்ல. அரசாங்கம் இவ்வாறு கூறுவதற்கு உண்மைக் காரணமும் இதுவல்ல. 2017ஆம் ஆண்டு மாகாண சபைகளுக்கான தேர்தலை காலந்தாழ்த்தியது போன்று, திருத்தங்கள் என்ற போர்வையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை காலந்தாழ்த்துவதற்குப் பதிலாக தேர்தலை முழுமையாக ஒழிக்கவே முயற்சிக்கிறார்கள்.

அமோ ஹாஜி கடந்த 54 வருடங்களாக நீராடாமலேயே இருந்துள்ளார். உடம்பில் நீர் பட்டால் தான் உயிரிழந்துவிடுவேன் என்று பயந்து வாழ்ந்துள்ளார். பலவந்தமாக அவரை நீராடச் செய்ததால் உயிரிழந்துவிட்டார். அதன் காரணமாகவே ஹாஜி நீராட பயங்கொண்டது போன்று இந்த அரசாங்கம் தேர்தலுக்கு பயங்கொள்வதாக தெரிவித்தேன். அதனை மீறி தேர்தலை நடத்தினால் தோல்வியை சந்திப்போம் என்பது அரசாங்கத்துக்கு தெரியும். எனவே, தேர்தலில் அரசாங்கத்துக்கு பாடம் கற்றுக்கொடுப்போம்.

தேர்தலை காலந்தாழ்த்துவது தொடர்பில் எதிர்த்தரப்பு அமைத்துக்கொண்ட குழுவின் செயற்பாடுகள் எந்தக் கட்டத்தில் இருக்கின்றன?

கூட்டறிக்கையொன்றிலும் அனைவரும் கைச்சாத்திட்டுள்ளோம். பேதங்களை தள்ளிவைத்துவிட்டு வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று கட்சிகள் உள்ளடங்கலாக 23 கட்சிகள் கூட்டறிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன பெரமுன, தேசிய மக்கள் முன்னணி, பிள்ளையானின் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி ஆகியனவே இதுவரையில் கைச்சாத்திடவில்லை.

அடுத்த தேர்தலில் உங்கள் அணி, தனியான அணியாகப் போட்டியிடுமா அல்லது கூட்டணி அமைக்குமா?

நாங்கள் தற்போது கட்சியாக ஒன்றிணையவில்லை. சுயாதீனக் குழுவாகவே செயற்பட்டு வருகிறோம். ஜனநாயகத்தைப் பாதுகாக்கும், அடக்கு முறைக்கு எதிரான பொருளாதாரத்தை சீராக்கக்கூடிய, அரசியல் மறுசீரமைப்பு செய்யக்கூடிய மக்களுக்கு பொறுப்புக்கூறவேண்டிய அரசாங்கமொன்றை கட்டியெழுப்ப வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாங்கள் இருக்கிறோம்.

சுதந்திர மக்கள் சபை என்ற அடிப்படையில், எங்கள் அணியின் திட்ட முன்மொழிவை எதிர்வரும் 13ஆம் திகதி வெளியிட எதிர்பார்த்துள்ளோம். தனிநபரை இலக்கு வைத்து எதிர்த்தரப்புடன் இணையவேண்டிய அவசியமில்லை. ஏதாவதொரு வேலைத்திட்டத்துடனேயே இணையவேண்டும். தனிநபரை இலக்குவைத்து ஒன்றிணைந்த சந்தர்ப்பங்கள் அனைத்தும் வரலாற்றில் தோல்வியையே சந்தித்துள்ளன.

மஹிந்த ராஜபக்ஷ சிறந்தவர் என்பதற்காகவும், ரணிலுக்காகவும் ஒன்றிணைந்த ஒவ்வொரு கூட்டணியும் தோல்வியிலேயே முடிவடைந்துள்ளன. அதனால் சிறந்த வேலைத்திட்டங்களினூடாகவே இணக்கப்பாடு குறித்து கலந்துரையாட முடியும். நாட்டை நேசிக்கும், ஜனநாயகத்தை பாதுகாக்க எண்ணும், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப விரும்பும் யாராக இருந்தாலும் எங்களுடன் இணையலாம். அதற்குத் தடையில்லை. சிறந்த நபர்கள் ஒன்றிணைய முடியவில்லை என்பது உலகின் துரதிர்ஷ்டவசமான நிலைமையாகும். தீயதை எண்ணி தீமை செய்பவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஒன்றிணைவார்கள்.

நாடு இக்கட்டான சூழ்நிலையில் இருக்கும் இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் அழுக்கற்ற - நேர்மையான அனைவரும் ஒரே நிலைப்பாட்டில் ஓரிடத்தில் ஒன்றிணையவேண்டும். தொடர்ந்தும் இனத்தையும் மதத்தையும் அடிப்படையாகக்கொண்டு செயற்பட முடியாது.

சுதந்திரத்தின் பின்னர் இடம்பெற்ற ஒவ்வொரு தேர்தல்களிலும் ஓரிரு தேர்தல்களில் தவிர, ஏனைய அனைத்துத் தேர்தல்களிலும் இனத்தையும், மதத்தையும், குலத்தையும் அடிப்படையாகக்கொண்டே அதிகாரத்தை பெற்றுக்கொண்டார்கள். அதன் காரணமாகவே பேதமற்ற புதிய பாதையில் செல்லும் அணியினரே அவசியம். சுதந்திரத்தின் பின்னர் நான்கு குடும்பங்களே எமது நாட்டை ஆட்சி செய்துள்ளன. சேனாநாயக்க, பண்டாரநாயக்க, ஜயவர்தன, ராஜபக்ஷக்கள் ஆகிய குடும்பங்களே அதிகம் ஆட்சிசெய்துள்ளன. எனவே, திறமைக்கு முதலிடம் கொடுத்து குடும்ப ஆட்சியை முழுமையாக ஒழிக்க வேண்டும். இந்த அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க வேண்டும் என்றே காலிமுகத்திடல் போராட்டக்காரர்களும் கோரியிருந்தார்கள்.

> மஹிந்தவுக்காகவும், ரணிலுக்காகவும் ஒன்றிணைந்த ஒவ்வொரு கூட்டணியும் தோல்வியிலேயே முடிவடைந்துள்ளன.
>
> ★★★★★
>
> நாட்டில் வரிசைகள் இல்லை என்பதற்காக பொருளாதார நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுவிட்டது என்று கருத முடியாது.
>
> ★★★★★
>
> வரவு-செலவுத்திட்டத்தின் வெற்றியும் தோல்வியும் அரசாங்கத்தின் கையில்.
>
> ★★★★★
>
> சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளும் அரச மொழியாக அறிவித்திருந்தால் இவ்வளவு பிரச்சினை இல்லை.

இவ்வாறான விடயங்களை அடிப்படையாகக் கொண்டே ஆறு வருடங்களுக்கு முன்னர் பொதுஜன பெரமுன என்ற முகாமை உருவாக்கினீர்கள். அப்படியானால் கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் உருவாக்கப்பட்ட அரசாங்கம் எவ்வாறு தோல்வியை சந்தித்தது?

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீது நாட்டு மக்களும் நாங்களும் வைத்திருந்த நம்பிக்கையை அவர் பாதுகாக்கவில்லை. குடும்ப அரசியலிலிருந்து வெளிவர வேண்டும் என்ற எங்களின் எதிர்பார்ப்பை கருத்திற்கொள்ளவும் இல்லை. அதற்கான தீர்மானங்களை முறையாக முன்னெடுக்கவும் இல்லை. ஒருசிலரின் கருத்துகளை மாத்திரம் கேட்டு தீர்மானங்களை முன்வைத்தார். மற்றையவர்களின் நிலைப்பாடுகளைக் கேட்டறியக்கூட தயாராக இருக்கவில்லை. அதன் இறுதி முடிவாகவே அரசாங்கம் தோல்வியைச் சந்தித்தது.

இராணுவத்தில் தீர்மானங்கள் எடுப்பது போன்றே தீர்மானங்களை எடுத்தார். இராணுவ உயர்மட்டத்தில் எடுக்கும் தீர்மானங்களுக்கமையவே அடிமட்டம் இயங்கும். கொமாண்டரின் கட்டளையின் பிரகாரம் சரியா, பிழையா என்று சிந்தித்துப் பார்க்காமல் சிப்பாய்கள் செயற்படுவார்கள். இராணுவத் தீர்மானங்களே அரச நிர்வாகத்திலும் இடம்பெற்றன.

மற்றையவர்களின் கருத்துக்கு மதிப்பளித்து செயற்படும் மனநிலையை ஆரம்பத்தில் அவரிடம் நாங்கள் பார்த்திருந்தாலும், ஜனாதிபதியானதும் அந்த பண்பு அவரிடம் இருக்கவில்லை.

பொருளாதார நெருக்கடி நிலைமை தொடர்பில் உங்களுடைய நிலைப்பாடு என்ன?

நாட்டில் வரிசைகள் இல்லை என்பதற்காக பொருளாதார நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுவிட்டது என்று கருத முடியாது. கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் அவ்வாறே இருக்கிறார்கள். மக்களின் கஷ்டங்களில் எவ்வித மாற்றமும் இல்லை.

தற்போதைய முன்னெடுப்புகள் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்குடையதா அல்லது அதிகாரத்தைப் பாதுகாக்கும் நோக்குடையதா என்பது எனக்குப் புரியவில்லை. ராஜபக்ஷக்களின் தலைமையிலான பொதுஜன பெரமுனவின் ஆட்சிக்கு எதிராக எழுந்த கடும் எதிர்ப்பினால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பவே ரணிலுக்கு பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டன.

ஆனால், ரணில் அவரது கடமைக்கப்பால் சென்று செயற்படுவதுபோன்று எங்களுக்கு தெரிகிறது. வரவேற்கக்கூடிய தீர்மானங்களையும் அவர் எடுத்திருக்கிறார். இல்லை என்று கூற முடியாது.

உங்களுடைய அணியை தமிழ், முஸ்லிம் மக்கள் இருக்கும் வடக்கு, கிழக்கு மற்றும் பெருந்தோட்டப் பிரதேசங்களிலும் விரிவுபடுத்தும் எதிர்பார்ப்பு இருக்கிறதா?

இந்த விடயத்தில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். வடக்கு பிரதேசங்களிலுள்ள குழுக்களுடன் கலந்துரையாட எதிர்பார்த்துள்ளோம். இனவாத, பிரதேசவாதத்துக்கு அப்பால் எங்களின் அணியை புதிய பரிணாமத்தில் கொண்டுசெல்ல வேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடு.

தற்போதைக்கு தமிழ்ப் பிரதிநிதிகள் எங்களுடன் இல்லை. ஆனால், அணியில் இணைவதற்காக எங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் பிரிவினர் அதிகம் இருக்கிறார்கள்.

பொதுஜன பெரமுனவுடன் தொடர்ந்து செயற்பட்ட நீங்கள், இடைக்கால ஜனாதிபதி தெரிவு நடக்கும்போது அங்கிருந்து விலகி, எதிர்க்கட்சியுடன் இணைந்த போட்டியிட்டீர்கள்?

பொதுஜன பெரமுனவில் உங்களுக்கான வாய்ப்பு முறையாக வழங்கப்படவில்லையா?

ரணில் விக்கிரமசிங்கவை பகடைக்காயாக பயன்படுத்தியே வாக்குகளைப் பெற்றுக்கொண்டார்கள். பொதுஜன பெரமுனவுக்குள் ஜனநாயகம் இருக்கவில்லை. இப்போதும் அந்தக் கட்சியில் ஜனநாயகம் இல்லை. தனிநபரொருவராகவே இந்த விடயத்திலும் தீர்மானத்தை எடுத்தார்.

வரவு-செலவுத்திட்ட வாக்கெடுப்பின்போது எவ்வாறு செயற்பட எதிர்பார்த்துள்ளீர்கள்?

பொருளாதாரப் பிரச்சினைக்கு அரசாங்கம் எடுத்துள்ள முடிவுகள், பாதிப்படைந்துள்ள அடிமட்ட மக்களுக்கான நிவாரணங்கள், அரசியல் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே எங்களின் தீர்மானங்கள் அமையும்.

இம்முறை வரவு-செலவுத்திட்டம் மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் கொண்டுவரப்படவுள்ளது. முன்வைத்ததன் பின்னரே தீர்மானங்களுக்கு வரமுடியும்.

வரவு-செலவுத்திட்டம் வெற்றி பெறுமா, தோல்வியடையுமா என்ற கேள்விக்கான பதில் அரசாங்கத்திடமே இருக்கிறது. அமைச்சுக்குள்ளேயே அமைச்சுகள் தொடர்பான பிரச்சினைகள் உருவாகியுள்ளன.

எதிர்க்கட்சியில் தற்போது 99 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். பெரும்பான்மைக்கு இன்னும் 14 உறுப்பினர்களே தேவையாகவுள்ளது. எனவே, அரசாங்கத்துக்குள் அமைச்சுகளுக்காகவும், இராஜாங்க அமைச்சுகளுக்காகவும் சண்டையிடும் பல்வேறு தரப்பினர் இருக்கிறார்கள்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் வழிகாட்டலில் புதிய அணியொன்று உருவாகி வருகிறது. அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் எதிர்பார்ப்பு இருக்கிறதா?

சந்திரிகாவுடன் இதுவரையில் எந்த கலந்துரையாடலும் இடம்பெறவில்லை. குமார வெல்கமவுடன் கலந்துரையாடியுள்ளோம். உத்தியோகபூர்வ கலந்துரையாடல்கள் இன்னும் இடம்பெறவில்லை.

எங்களின் நிலைப்பாட்டிலிருக்கும் சகல கட்சிகளையும் எங்களுடன் இணைத்துக்கொள்வதே எமது எதிர்பார்ப்பாகும். எதிர்த்தரப்பில் அமர்ந்ததன் பின்னர், தனிப்பட்ட ரீதியில் எத்தனை பிரச்சினைகள் இருந்தாலும் ஒன்றிணையக்கூடிய விடயங்களில் நாம் ஒன்றிணைய வேணடும்.

புதிய அரசியலமைப்பு தொடர்பில் என்ன நிலைப்பாட்டில் இருக்கிறீர்கள்?

புதிய அரசியலமைப்பொன்று கொண்டுவரப்பட வேண்டியது அவசியமாகும். குடும்ப தேவைப்பாடுகளுக்கு அப்பால் நிலையான அரசியலமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும். சமூகங்களுக்கிடையிலான இடைவெளியை அரசாங்கமே உருவாக்கியுள்ளது.

விருத்தியடைந்த நாட்டுக்குத் தேவையான புதிய அரசியலமைப்பொன்று உருவாக்கப்படவேண்டும். நாடு சுதந்திரம் அடைந்த சந்தர்ப்பத்தில் சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளும் அரச மொழி என்று டீ.எஸ்.சேனநாயக்க அரசியலமைப்பில் உள்ளடக்க நடவடிக்கை எடுத்திருந்தால் நாட்டில் இவ்வளவு பிரச்சினைகள் தோற்றம் பெற்றிருக்காது. இதுவே வரலாற்றில் இடம்பெற்ற மிகப்பெரிய தவறாகும்.

முஸ்லிம் அமைப்புகளின் தடை நீங்கினால்

ஏழைகளுக்கு நிறைய நன்மைகள் கிடைக்கும்

ஹரீஸ் எம்.பி.

சமூக வலைத்தளங்களிலும், ஊடகங்களிலும், பொது இடங்களிலும் ஹரீஸ் எம்.பி. மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை அவரிடம் கேள்வியாக முன்வைத்தபோது அவர் தெரிவித்த கருத்துகள் வருமாறு:-

20இற்கு ஆதரவாக வாக்களித்த நீங்கள் 22இற்கும் ஆதரவாக வாக்களித்துள்ளீர்கள். அதுபற்றி கூறுங்கள்?

22ஆம் திருத்தம் நாடாளுமன்றில் அண்மையில் நிறைவேற்றப்பட்டது. இது சம்பந்தமாக ஊடகங்களில் பல விடயங்கள் பேசப்பட்டு வந்தாலும் கூட மிக முக்கியமாக 20ஆம் திருத்தம் சம்பந்தமாக கடந்த காலங்களில் பல வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்று வந்தன. அதிலும் குறிப்பாக, 20இற்கு ஆதரவளித்த சிறுபான்மை இன நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் பல்வேறு கதையாடல்கள் சமூகத்தின் மத்தியில் பரவிக்கொண்டிருந்தன. அந்த சட்டமூலத்துக்கு ஆதரவளித்தமையினால் கொடுங்கோல் ஆட்சியாளர்களிடமிருந்து முஸ்லிம் சமூகத்தின் நிறைய பிரச்சினைகளைத் தீர்த்துள்ளோம். ஜனாஸா விடயம் முதல் முஸ்லிம்களின் உரிமைசார் விடயங்கள், உணர்புசார் விடயங்கள், பொருளாதார விடயங்கள் என நிறைய விடயங்களைச் சாதித்துள்ளோம். அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்டோர் விமர்சித்தாலும் கூட எங்களின் தூய்மையான எண்ணங்களுக்கு இறைவன் வெற்றியைத் தந்தான். எங்களை பலியிட்டு சமூகத்தின் வெற்றியை உறுதிப்படுத்தினோம். யார் என்ன சொன்னாலும் மக்கள் தெளிவாக இருக்கிறார்கள். மக்களிடம் யாரும் கதையளக்க முடியாது.

இருந்தபோதிலும் எங்களுக்குக் கிடைத்த இன்னுமொரு பெரிய வாய்ப்பான இந்த 22ஆம் திருத்தச்சட்டம் நிறைவேற நாங்களும் பங்காளர்களாக இணைந்துகொண்டோம். இந்த சட்டத்திருத்தத்தைக் கொண்டுவர புதிதாக ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்ற கையோடு ஜனாதிபதி, முக்கிய அமைச்சர்களுடன் இணைந்து நாங்களும் களம் கண்டதனால் 22ஆம் திருத்தச்சட்டம் அவசரமாக நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டது. மூன்றில் இரண்டுக்கும் அதிகமான எம்.பிக்களின் ஆதரவுடன் மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்பட்டுள்ளது. 22இற்கு ஆதரவாக வாக்களித்து இன்று நாட்டில் மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை இவ்விடத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

கல்முனை உப பிரதேச செயலகம் தொடர்பில் உயர்மட்டங்களிடம் பேசியுள்ளீர்களா?

இப்போது ஊடகங்களிலும், சமூக வலைத்தளங்களிலும் கல்முனை தொகுதியை மையப்படுத்தியதாக நிறைய விடயங்கள் பேசப்படுகின்றன. அதிலும் குறிப்பாக, கல்முனை உப பிரதேச செயலக விவகாரம் தொடர்பில் பேசப்படுகின்றது. இது இப்பிராந்தியத்தில் முக்கியமான ஒரு விடயமாக இருக்கின்றது. இது சம்பந்தமாக பலரும் பல்வேறு கருத்துகளை ஊடகங்களில் கூறி வருகின்றனர். விசேடமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மீதும், மு.கா. தலைவர் ஹக்கீம், முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள், கல்முனை முதல்வர், கல்முனை மாநகர சபை உறுப்பினர்கள் மீதும் கடுமையான குற்றச்சாட்டுகள் ஊடகங்களில் எழுந்துள்ளதை அவதானித்துள்ளோம். நிறைய கேள்விக்கணைகள் எங்கள் மீது எழுப்பப்பட்டுள்ளன.

கல்முனை விவகாரம் என்பது இன்று, நேற்று உருவான விடயமல்ல. கல்முனை வாழ் முஸ்லிம்களின் நிலைப்பாடு சம்பந்தமாகவும், பூகோள அமைவிடங்கள் சம்பந்தமாகவும் பல வருடங்களாக நான் நாடாளுமன்றத்திலும், நாட்டின் தலைமைகளிடமும், குறித்த துறைக்கான அமைச்சர்களிடமும், அரச உயர் அதிகாரிகளிடமும் தெளிவாக எடுத்துரைத்து வந்துள்ளோம்.

கல்முனை பிரச்சினைக்குத் தீர்வு என்ன?

இப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கி கடந்த 2015இல் உருவான மைத்ரி - ரணில் தலைமையிலான நல்லாட்சியில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தி தமிழ், முஸ்லிம் ஒற்றுமையையும் நல்லிணக்க வாழ்வையும் கருத்திற்கொண்டு பல முடிவுகளை எடுத்தோம். பின்நாட்களில் இனக்கப்பாடுகளின்றி அதிகாரிகளுக்கு நன்றாகத் தெரியும். முஸ்லிம் சமூகத்தின் இழப்புகளை சரிசெய்ய வேண்டியான சகல வழிகளிலுமான முயற்சிகளை செய்துவருகின்றோம். எல்லைநிர்ணய ஆணைக்குழுவின் சிபாரிசில் இந்தப் பிரச்சினைகளுக்கு ஒழுங்கான, நிரந்தரத் தீர்வு கிட்டும் என்ற நம்பிக்கையுடன் காத்துக்கொண்டிருக்கின்றோம். இப்பிரச்சினைக்குத் தீர்க்கதரிசியில் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற அழுத்தம் கூடிய காலப்பகுதியில் நாங்கள் இருக்கின்றோம். கடந்த காலங்களில் இடம்பெற்றதுபோன்று இனிவரும் காலங்களிலும் முஸ்லிம்களுக்கு அநீதி இடம்பெற யாரையும் அனுமதிக்க மாட்டோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு தொடர்பில் உங்களின் பார்வை என்ன?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிகாரப்பகிர்வு விடயத்தில் இரட்டை நிலைப்பாட்டை எடுக்கக்கூடாது. சம்பந்தன் ஐயாவிடமும், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனிடமும் ஏனைய தமிழ் எம்.பிக்களிடமும் எனது அன்பான வேண்டுகோள் என்னவெனில், சகோதர தமிழ் மக்கள் 1948இலிருந்து பேசுகின்ற முக்கிய விடயம் அதிகாரப்பகிர்வு. மத்திய அரசுடன் இணைந்து நிர்வாகம் செய்ய முடியாது என்பதற்காகத்தான் சமஷ்டி தீர்வுடனான வேறான நிர்வாகத்தை வடக்கு, கிழக்கில் உருவாக்க வேண்டும் என்ற போராட்டத்தை முன்னெடுத்தனர். அதில் நியாயமும் இருந்தது. அதற்காகத்தான் பெருந்தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப், சென்டர் மஜர் மௌலானா போன்றோர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரதானியாக இருந்த ஐயா அமிர்தலிங்கத்துடன் இணைந்து அதற்காக போராடினார்கள். இப்போதைய மு.கா. தலைவர் ஹக்கீமும் கூட தமிழ் மக்களின் அதிகாரப்பகிர்வுக்காக தமிழ் மக்களுடன் ஒன்றிணைந்து போராடுகின்ற ஒருவர். இலையெல்லாம் இப்படி இருக்கத்தக்கதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் யாழில் ஒரு கொள்கையுடனும், அம்பாறையில் இன்னுமொரு கொள்கையுடனும் இருக்கக்கூடாது என்பதே எனது விருப்பமாக இருக்கிறது. அதைத்தான் அவர்களுக்கு நான் வலியுறுத்துகிறேன்.

மத்தியிலிருந்து நிர்வாகம் செய்ய முடியாது. வாழ முடியாது என்பதற்காகத்தான் சமஷ்டி தீர்வு நிறைவேற்று அதிகாரம்கொண்ட மாகாண சபை முறைமையை கேட்கின்றார்கள். அம்பாறை மாவட்டத்தில் ஏறத்தாழ 67 வீதமான தமிழ் பேசும் தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ்கின்ற பிரதேசத்தில் கரையோர மாவட்டம் வந்துவிடக்கூடாது என்பதில் உள்ளார்ந்தமாக நிறைய அரசியல் காய்நகர்த்தல்களை செய்து வருகின்றார்கள். கல்முனையில் முஸ்லிம்களுடன் இணைந்து நிர்வாகத்தைக் கொண்டுசெல்ல முடியாது என்று கூறுகின்ற இவர்கள், அம்பாறையில் சிங்கள மொழி மூலமான நிர்வாகக் கட்டமைப்பை இணங்கி செல்கிறார்கள். இதிலேயே தமிழ்க் கூட்டமைப்பிடம் இரட்டை நிலைப்பாடு இருக்கிறது. இப்படியான விடயங்கள் கிழக்கிலுள்ள முஸ்லிம் புத்திஜீவிகளையும், இளைஞர்களையும் கடுமையாக சிந்திக்க வைத்துள்ளது.

> **தடைசெய்யப்பட்ட முஸ்லிம் அமைப்புகளிலிருந்து ஆறு அமைப்புகளை நீக்குவது தொடர்பில் நடவடிக்கை எடுக்க ஜனாதிபதியின் பணிப்புரைக்கிணங்க கடந்த ஓகஸ்ட் மாதம் 24ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் சிரேஷ்ட பாதுகாப்பு ஆலோசகரும், ஜனாதிபதி அலுவலகப் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவின் தலைமையில் இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளுடனான கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது**

அவை தோல்வியடைந்தன. இப்போது இவ்விடயம் தொடர்பில் உள்நாட்டலுவல்கள் அமைச்சு குறிப்பாக, சமல் ராஜபக்ஷ அமைச்சராக இருந்தபோது நாடுமுழுவதிலும் புதிய கிராமசேவகர் பிரிவுகளை ஆரம்பிக்கவும், பிரதேச செயலக எல்லைகளை நிர்ணயிக்கவும் குமரபுரியின் தலைமையில் புதிய எல்லை நிர்ணய ஆணைக்குழு நியமிக்கப்பட்டு அது சிறப்பாக இயங்கிக்கொண்டிருக்கிறது. இந்த ஆணைக்குழுவுக்கு பிரதேச சிலில் அமைப்புகள், பொதுமக்கள், முக்கியஸ்தர்கள் ஆகியோர் ஆவணங்களை அனுப்பியுள்ளார்கள். இதுவிடயமாக அந்த ஆணைக்குழுவினால் நிறைய சாட்சியங்கள் பெறப்பட்டுள்ளன. இறுதிக்கட்ட நடவடிக்கைகள் இடம்பெறுவதாக அறிகிறேன்.

இந்தப் பிரச்சினையிலுள்ள சவால்கள், முரண்பாடுகள், பிணக்குகள் தொடர்பில் உரிய ஆணைக்குழுவுக்குத் தெளிவுபடுத்தியுள்ளோம்.

1989இல் இந்த (உப) பிரதேச செயலகம் கல்முனையில் நிறுவப்பட்டபோது முஸ்லிம்களுக்கு சொந்தமான காணிகள், கிராமங்கள், கல்முனை பஸார், மத ஸ்தானங்கள், பொதுமக்களின் குடியிருப்புகள் என பலதும் உள்ளடக்கப்பட்ட பாரிய அநீதி இழைக்கப்பட்ட விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தியுள்ளோம். இந்த விடயத்தை கடுந்தொனியில் கையாள வேண்டும் என்று சிலர் எதிர்பார்க்கிறார்கள். அப்படி செய்ய முடியாது. இது இரு சமூகங்களின் உணர்வுடன் கூடிய விடயம்.

ஊடகங்களுக்கு தம்பட்டம்படிக்கும் விடயமல்ல இவை. இந்தப் பிரச்சினையை கையாள்வதிலுள்ள கஷ்ட நஷ்டங்களை வெளியிலிருந்து சமூக வலைத்தளங்களில் எழுதுபவர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. நேரடியாக சம்பந்தப்பட்ட நான் இந்தப் பிரச்சினையின் பல கோணங்களையும் அறிந்துள்ளேன். இந்த விடயங்களில் எங்களின் வகிபாகம் என்ன என்பது பழைய மற்றும் புதிய ஜனாதிபதிகள், பிரதமர்கள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், விவகாரத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை பற்றி விளக்கியுள்ளோம். அத்துடன், சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கின்ற மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்ற விடயத்தை எத்திவைத்து இவ்வாறு இல்லாம் பாடப்புத்தகம் வழங்கப்படாமல் இருக்கின்றமையானது முஸ்லிம் மாணவர்களுக்கு செய்யும் மிகப்பெரியதொரு அநீதியாகும் என்பதை எடுத்துரைத்துள்ளோம். கல்விப் பொதுத் தராதர பரீட்சைக்கான கேள்விகள் 10 மற்றும் 11 தர புத்தகங்களில் இருந்தே வருகின்றன. ஆனால், இஸ்லாம் பாடப்புத்தகம் மாணவர்களிடமிருந்து மீளப் பெறப்பட்டு இன்னும் வழங்கப்படவில்லை. அப்படியிருக்கையில், அடுத்த மார்ச் மாதமளவில் பரீட்சை இடம்பெற இருக்கின்றது. இதனால் இல்லாம பாட பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு அநீதி ஏற்படுகின்றது. அதனால் இந்த மாணவர்களுக்கு ஏதாவது ஏலுகைகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளோம்.

ஜனாதிபதி செயலணி ஒன்றின் அறிக்கையை மையமாகக்கொண்டு செயற்பட்டுள்ள கல்வித் திணைக்கள அதிகாரிகளைக் கண்டிப்பதுடன், இப்புத்தகத்தில் சில திருத்தங்களைச் செய்து மாணவர்களுக்கு மீள வழங்க நடவடிக்கை எடுப்பதாக கல்வியமைச்சர் எங்களுக்கு உறுதியளித்துள்ளார். அவர் செயற்திறன் கொண்ட அமைச்சராக கடந்த காலங்களில் செயற்பட்டவர். இவ்விடயத்தில் உரிய நடவடிக்கை எடுப்பார் என்ற நம்பிக்கை இருக்கிறது.

தடைசெய்யப்பட்ட முஸ்லிம் அமைப்புகளிலிருந்து ஆறு அமைப்புகளை நீக்குவது தொடர்பில் நீங்கள் நடவடிக்கை எடுத்ததாகக் கூறப்படுவதன் உண்மைத்தன்மை என்ன?

தடைசெய்யப்பட்ட முஸ்லிம் அமைப்புகளிலிருந்து ஆறு அமைப்புகளை நீக்குவது தொடர்பில் நடவடிக்கை எடுக்க ஜனாதிபதியின் பணிப்புரைக்கிணங்க கடந்த ஓகஸ்ட் மாதம் 24ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் சிரேஷ்ட பாதுகாப்பு ஆலோசகரும், ஜனாதிபதி அலுவலகப் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவின் தலைமையில் இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளுடனான கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற முதல் வாரத்தில் தடைசெய்யப்பட்ட முஸ்லிம் அமைப்புகளின் தடைகளை நீக்குவது தொடர்பில் அநுராதபுர மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இசாக் ரஹ்மான் என்னுடன் இணைந்து நாங்கள் இருவரும் ஜனாதிபதிக்கு முன்வைத்த கோரிக்கைக்கமைய ஜனாதிபதி விடுத்திருந்த பணிப்புரைக்கு இணங்கவே ஜனாதிபதி செயலகத்தில் அந்த பாதுகாப்பு அதிகாரிகளின் உயர்மட்ட கலந்துரையாடல் இடம்பெற்று இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள் மற்றும் புலனாய்வுப் பிரிவின் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டிருந்த அந்தக் கூட்டத்தில் தடைசெய்யப்பட்டுள்ள 11 முஸ்லிம் அமைப்புகளிலிருந்து 06 அமைப்புகளின் தடையை நீக்குவது தொடர்பில் பல்வேறு விடயங்களைக் கலந்துரையாடி அதற்கான மேலதிக நடவடிக்கைகளை பாதுகாப்புத்துறையினர் மேற்கொண்டு தடையை நீக்கவுள்ள ஆறு அமைப்புகளின் பிரதிநிதிகளை தனித்தனியாக சந்தித்துப் பேச நடவடிக்கை எடுக்கப்பட்டு இப்போது அந்த வேலைத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஈஸ்டர் தாக்குதலைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சின் தடைப்பட்டியலில் 11 முஸ்லிம் அமைப்புகள் தடைசெய்யப்பட்டுள்ளன. இவற்றில் 6 அமைப்புகள் எவ்வித பயங்கரவாத சம்பவங்களுடனோ பயங்கரவாத அமைப்புகளுடனோ தொடர்பைக் கொண்டிருக்கவில்லை. இதனடிப்படையில் தடைசெய்யப்பட்ட குறித்த 6 அமைப்புகளின் முக்கியஸ்தர்களுடன் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் தனித்தனியே கலந்துரையாடியுள்ளனர். மேலும், குறித்த 6 முஸ்லிம் அமைப்புகளிடமிருந்தும் பாதுகாப்பு அமைச்சினால் சில ஆவணங்கள் கோரப்பட்டுள்ளன. அந்த ஆவணங்கள் கிடைத்தவுடன் அதிகாரிகள் அதனை பரிசீலனை செய்து 6 அமைப்புகள் மீதான தடையை நீக்கவுள்ளனர் என்று நம்புகின்றேன். இதுபகத்தியுடனும் நாட்டின் நலனிலும் அக்கறைகொண்டு நீதியின் பக்கம் நின்றுள்ளோம். நாட்டின் வளர்ச்சியும், முன்னேற்றமும் இலங்கையர்களாகிய நமக்கு இன்றியமையாதது. இந்த தடை நீக்கத்தின் மூலம் பல ஏழை மக்கள் நன்மையடையவுள்ளதுடன் நாட்டுக்கும் நன்மை கிடைக்கும்.

பாடசாலை மாணவர்களின் இல்லாம் பாடப்புத்தக விநியோகம் நிறுத்தப்பட்டமை தொடர்பில் உங்கள் பார்வை என்ன?

கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்தவை சந்தித்து பாடசாலை மாணவர்கள் இப்புத்தக



செவ்வி கண்டவர் :
நூருல் ஹுதா உமர்

கிழக்கில் அரச காணிகள் துஷ்பிரயோகமா?

அமைச்சர் வியாழேந்திரனால் ஊடகவியலாளர்களுக்கு வெற்றுக்கொடுக்கப்பட்ட காணி தொடர்பான அலசல்

நிப்தி அலி

வீர்த்தக இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன், தனது அரசியல் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து 'பிராந்திய ஊடகவியலாளர்கள்' 33 பேருக்கு அரச காணியை பெற்றுக்கொடுத்துள்ளமை அம்பலமாகியுள்ளது.

கிழக்கு மாகாண காணி நிர்வாகத் திணைக்களத்தின் தரவுகளின்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் 17,510 பேர் காணியற்றவர்களாக உள்ள நிலையில், இந்த துஷ்பிரயோகம் நடந்துள்ளது.

இதற்குப் பல அரச நிறுவனங்களும், அதிகாரிகளும் உறுதுணையாக இருந்துள்ளனர். எமது புலனாய்வுத் தேடலின் மூலம் இந்த விவகாரம் தொடர்பில் மேலும் பல விடயங்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

எந்தவொரு அரச நிறுவனத்திலும் எவ்வாறாயினும், காணிக் கச்சேரியில் பங்குபற்றியதாக மேலதிக மாவட்ட செயலாளரினால் குறிப்பிடப்பட்ட 27 ஊடகவியலாளர்களின் பெயர்ப்பட்டியலை மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் சங்கமே திகதியிடப்படாமல் வழங்கியுள்ளமை எமது புலனாய்வுத் தேடலின்போது தெரியவந்தது.


அரசாங்க தகவல் தினைக்களம்
GOVERNMENT INFORMATION DEPARTMENT
Mr.S.V.JEEVANANTHAN

இவ்வாறான நிலையில், மேலும் எட்டு ஊடகவியலாளர்களை குறித்த காணி வழங்கலில் இணைத்துக்கொள்ளுமாறு மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் தகவல் அதிகாரி எஸ்.வீ.ஜீவானந்தனால் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மாவட்டப் பணிப்பாளருக்கு 11.10.2019ஆம் திகதி கடிதமொன்று எழுதப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட உதவிச் செயலாளர், மாவட்ட செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் மாவட்ட செயலகத்தின் தகவல் அதிகாரி ஆகியோரினாலேயே மேற்படி எட்டு பயனாளிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 11.10.2019ஆம் திகதி அப்போதைய மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் எம். உதயகுமாரினால் ஊடகவியலாளர்களுக்கான வீடமைப்புத் திட்டம் தொடர்பில் அப்போது வீடமைப்பு அமைச்சராக செயற்பட்ட ரஞ்சித் பிரேமதாசவிடம் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் சங்கம் விடுத்த கோரிக்கையை அமுல்படுத்த தேசிய வீடமைப்பு அதிகார சபை ஏற்கனவே செயற்படவுமில்லை.



பிராந்திய ஊடகவியலாளர், காணி இல்லாமையினால் உறவினரின் வீட்டில் வசித்து வருவதாக அடையாளப்படுத்தப்பட்டு குறித்த பயனாளிகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டு காணி வழங்கப்பட்டுள்ளது.

கோரளைப்பற்று - வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் வீடமைப்பு அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்ட 'முல்லை' வீட்டுத் திட்டத்தில் காணியுடன் வீடு பெற்றுக்கொண்ட பிராந்திய ஊடகவியலாளர், காணி இல்லாமையினால் உறவினரின் வீட்டில் வசித்து வருவதாக அடையாளப்படுத்தப்பட்டு குறித்த பயனாளிகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டு காணி வழங்கப்பட்டுள்ளது.



இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெறும் காணி மோசடிகளை மூடி மறைக்கும் நோக்கில் இம்மாவட்டத்திலுள்ள ஊடகவியலாளர்களுக்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன எனும் குற்றச்சாட்டொன்றை இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் அண்மையில் நாடாளுமன்றத்தில் முன்வைத்திருந்தார்.

இம்மாவட்டத்தில் இடம்பெறுகின்ற காணி மோசடிகள் தொடர்பில் தமிழ் ஊடகங்கள் செய்தி வெளியிடுவதில்லை. இது தொடர்பில் தேடி ஆராய்ந்தபோது காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் என்.விமல்ராஜ், மாவட்டத்திலுள்ள எல்லா ஊடகவியலாளர்களுக்கும் 10 பேர்ச் காணிகளை வழங்கி அவர்களின் வாயை மூடியுள்ளார் எனவும் அவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த மாவட்டத்தில் ஆணைக்குழுவின் கீழுள்ள காணிகள் பிழையான வகையில் மோசடி செய்யப்பட்டுள்ளன. அந்த அடிப்படையிலேயே ஊடகவியலாளர்களுக்கான காணிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு மோசடியான முறையில் வழங்கப்பட்டுள்ள காணிகள் மீளப்பெறப்பட்டு உரியவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் அவர் முன்வைத்தார்.

வியாழேந்திரனின் பதில்

இந்த விடயம் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனை தொடர்புகொண்டு வினவியபோது,

"மட்டு. மாவட்ட ஊடகவியலாளர்கள் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் உள்ளடங்குகின்றனர். அத்துடன் அரசாங்க தகவல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட இம்மாவட்டத்தினைச் சேர்ந்த நான்கு தமிழ் ஊடகவியலாளர்கள், இக்காணி வழங்கலில் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, "மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு காணி வழங்கப்பட்ட விடயம் தொடர்பில் ஊடக அமைச்சிற்கு எதுவும் தெரியாது" என அமைச்சின் மேலதிக செயலாளர் ருவான் சத்குமார தெரிவித்தார்.

இவ்வாறான நலன்புரித் திட்டங்களை முன்னெடுக்கும் அரச நிறுவனங்கள், ஊடக அமைச்சுடன் இணைந்து செயற்படுவது சிறப்பானதாகும் என அவர் குறிப்பிட்டார்.

"அரசாங்க தகவல் தினைக்களத்தின் ஊடக அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு 'ஊடகவியலாளர்' என்ற அடிப்படையில் காணி வழங்கியமை முற்றிலும் தவறானது" எனவும் ஊடக அமைச்சின் மேலதிக செயலாளர் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் சங்கச் செயலாளர் எஸ்.நிலாந்தனும் பொருளாளர் பீ.சசிகரனும் அரச காணியைப் பெற்றுக்கொண்ட நிலையில், தற்போது வெளிநாடொன்றில் வசித்து வருகின்றனர்.

இது தொடர்பில் இச்சங்கத் தலைவர் வீ.கிருஷ்ணகுமாரை தொடர்புகொண்டு வினவியபோது, "கற்கைநெறியொன்றில் கலந்துகொள்வதற்காக தற்போது வெளிநாடு சென்றுள்ள எமது சங்கத்தின் செயலாளரும், பொருளாளரும் விரைவில் நாடு திரும்புவார்கள்" என்றார்.

நாடாளுமன்றில் பேசுபொருளான விவகாரம்

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெறும் காணி மோசடிகளை மூடி மறைக்கும் நோக்கில் ஊடகவியலாளர்களுக்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன எனும் குற்றச்சாட்டை இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் அண்மையில் நாடாளுமன்றத்தில் முன்வைத்திருந்தார்.

இம்மாவட்டத்தில் இடம்பெறுகின்ற காணி மோசடிகள் தொடர்பில் தமிழ் ஊடகங்கள் செய்தி வெளியிடுவதில்லை. இது தொடர்பில் தேடி ஆராய்ந்தபோது காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் என்.விமல்ராஜ், மாவட்டத்திலுள்ள எல்லா ஊடகவியலாளர்களுக்கும் 10 பேர்ச் காணிகளை வழங்கி அவர்களின் வாயை மூடியுள்ளார் எனவும் அவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த மாவட்டத்தில் ஆணைக்குழுவின் கீழுள்ள காணிகள் பிழையான வகையில் மோசடி செய்யப்பட்டுள்ளன. அந்த அடிப்படையிலேயே ஊடகவியலாளர்களுக்கான காணிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு மோசடியான முறையில் வழங்கப்பட்டுள்ள காணிகள் மீளப்பெறப்பட்டு உரியவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் அவர் முன்வைத்தார்.

வியாழேந்திரனின் பதில்

இந்த விடயம் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனை தொடர்புகொண்டு வினவியபோது,

"மட்டு. மாவட்ட ஊடகவியலாளர்கள் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் உள்ளடங்குகின்றனர். அத்துடன் அரசாங்க தகவல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட இம்மாவட்டத்தினைச் சேர்ந்த நான்கு தமிழ் ஊடகவியலாளர்கள், இக்காணி வழங்கலில் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, "மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு காணி வழங்கப்பட்ட விடயம் தொடர்பில் ஊடக அமைச்சிற்கு எதுவும் தெரியாது" என அமைச்சின் மேலதிக செயலாளர் ருவான் சத்குமார தெரிவித்தார்.

இவ்வாறான நலன்புரித் திட்டங்களை முன்னெடுக்கும் அரச நிறுவனங்கள், ஊடக அமைச்சுடன் இணைந்து செயற்படுவது சிறப்பானதாகும் என அவர் குறிப்பிட்டார்.

"அரசாங்க தகவல் தினைக்களத்தின் ஊடக அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு 'ஊடகவியலாளர்' என்ற அடிப்படையில் காணி வழங்கியமை முற்றிலும் தவறானது" எனவும் ஊடக அமைச்சின் மேலதிக செயலாளர் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் சங்கச் செயலாளர் எஸ்.நிலாந்தனும் பொருளாளர் பீ.சசிகரனும் அரச காணியைப் பெற்றுக்கொண்ட நிலையில், தற்போது வெளிநாடொன்றில் வசித்து வருகின்றனர்.

இது தொடர்பில் இச்சங்கத் தலைவர் வீ.கிருஷ்ணகுமாரை தொடர்புகொண்டு வினவியபோது, "கற்கைநெறியொன்றில் கலந்துகொள்வதற்காக தற்போது வெளிநாடு சென்றுள்ள எமது சங்கத்தின் செயலாளரும், பொருளாளரும் விரைவில் நாடு திரும்புவார்கள்" என்றார்.

நாடாளுமன்றில் பேசுபொருளான விவகாரம்

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெறும் காணி மோசடிகளை மூடி மறைக்கும் நோக்கில் ஊடகவியலாளர்களுக்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன எனும் குற்றச்சாட்டொன்ற

உயிர்க்கொல்லி போதையை ஒழிக்க ஒன்றிணைவோம்!

சுமித்தி தங்கராசா

"எனது வாழ்க்கையே அழியும் என நான் நினைக்கவில்லை ஆரம்பத்தில் கஞ்சா பத்த நண்பர்கள் பழக்கிவிட்டனர். சிறிது நாட்களின் பின்னர் ஹெரோயின் பாவிக்க கற்றுத் தந்தார்கள். என்னுடைய எதிர்காலமே சிதைக்கப்படுகின்றது என்று நான் சிந்திக்கவில்லை" என போதைப் பொருளுக்கு அடிமையான மாணவன் கவி (பெயர் மாற்றப்பட்டுள்ளது) அழுதான்.

யாழ்ப்பாணத்தில் உயிர்க்கொல்லி போதைப்பொருளைப் பயன்படுத்தி 10 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளார்கள். 300இற்கும் மேற்பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ். மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் போதைப்பொருட்களின் பாவனை காணப்பட்டாலும், குறிப்பாக, யாழ். நகர்ப்பகுதியில் நாவாந்துறை, குருநகர், மணியம்தோட்டம், திருநெல்வேலி பாற்பண்ணை, கல்வியங்காடு, மானிப்பாய் சக்கோட்டை, திருநகர், கொட்டடி, உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்கிலும், கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட செல்வபுரம், யோகபுரம் கிராமங்கள் போதைப்பொருளின் கூடாரமாக செயற்படுவதாகவும் பொலிஸ் தரப்பினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசங்களில் ஹெரோயின், போதை மாத்திரை, ஐஸ் போன்ற போதைப் பொருட்கள் பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

கடந்த மூன்று மாதங்களில் யாழ். நீதிவான் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பொலிஸ் நிலையங்களில் 359 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இவர்களுக்கு 8 இலட்சத்து 54 ஆயிரம் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன், 3000க்கும் அதிகமானோர் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுமார் 13 வயது முதல் 28 வயது வரையான இளைஞர்கள் - யுவதிகள் போதைப்பொருள் மாபிஃயாக்களுடன் இணைந்திருகின்றார்கள். வியாபார முகவர்கள் இவர்களின் மனதை குழப்பி, போதைப்பொருளை பயன்படுத்தத் தூண்டுகின்றார்கள். ஒரு தடவை பயன்படுத்தியவர்கள் தாம் மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதற்காக, பணத்தை தேடி அலைய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுள்ளது. இதனால், யாழ்ப்பாணத்தில் வழிப்பறி, கொலை, கொள்ளை, திருட்டு, வாள்வெட்டுச் சம்பவங்கள் என்பன அதிகமாக இடம்பெறுகின்றன.

சாதாரண இளைஞர்கள் மத்தியில் விற்பனை செய்யப்படும் ஹெரோயின் மற்றும் ஐஸ் பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் ஊடுருவியுள்ளது. பிரபல பாடசாலை மாணவர்கள் குறிவைக்கப்படுகின்றார்கள். அண்மையில் மாணவர்கள் ஹெரோயின் பயன்படுத்தியதாக, பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட சம்பவங்கள் மக்கள் மத்தியில் பாரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மாணவர்களுக்கு வழங்குபவர்கள் யார் என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில், தற்போது சிறுவர் முதல் பெண்கள் வரை போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகிவிட்டனர் என்ற கருத்தும் பரவலாக காணப்படுகின்றது.

நாளொன்றிற்கு சராசரியாக 4 முதல் 5 பெண்கள் ஹெரோயின் உட்கொள்வதாகவும், பாழடைந்த வீடுகளில் பெண்கள் குழுவாக இணைந்து பயன்படுத்தியபோது பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் பயன்படுத்தியோர் போதைப்பொருளுடனும் பயன்படுத்தும் ஊசி மற்றும் தேசிக்காய்களுடனும் கைதுசெய்யப்படுகின்றார்கள். கைதுகள் மற்றும் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் பொலிஸ், சட்ட வைத்திய அதிகாரி, பிரதேசவாசிகள், பயன்டுத்தியவர்கள், உடல் உள வைத்தியர், புனர்வாழ்வு நிலையங்கள் எனப் பலதரப்புகளுடனும் போதைவஸ்து தொடர்பான புலனாய்வை மேற்கொண்ட போது அவர்கள் இவ்வாறு தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்

யாழில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துச் செல்வதால், எங்களுக்குக் கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றோம்.

போதைப்பொருள் மாபிஃயாவைக் கட்டுப்படுத்த பொலிஸாரால் மட்டும் முடியாது. அனைத்துத் தரப்பினரும் முன்வர வேண்டும். தகவல்களை வழங்க வேண்டும். இங்கு யாருமே தகவல் தர முன்வருவதில்லை. தகவல் தந்தால், தங்களுக்குப் பிரச்சினை என்று நினைத்து தகவல் தர மறுக்கின்றார்கள். உங்களுடைய தகவல்களை பெட்டிஷனாகவோ அல்லது நேரடியாகவோ என்னிடம் தெரிவிக்கலாம்.

அத்துடன், சில பாடசாலை மாணவர்களையும் கைதுசெய்கின்றோம். அவர்களை சிறுவர் நீதிமன்றத்தின் ஊடாக சிறுவர் பராமரிப்பு நிலையம் மற்றும் போதைப்பொருள் புனர்வாழ்வு நிலையங்களுக்கு குணப்படுத்தல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்துள்ளோம். பாடசாலைகளுக்கு அருகில் கடை வைத்திருப்பவர்கள் தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்தன. அவை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

பாடசாலை மாணவர்கள் தொடர்பில் பெற்றோர்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும். பிள்ளைகளின் செயற்பாடுகளை அவதானிக்க வேண்டும், பிள்ளைகளுடன் ஒரு வேளை சரி கதைத்து, தேவைகள் தொடர்பில் அறிந்துகொள்ள வேண்டும். பாடசாலைக்கோ, தனியார் வகுப்பிற்கோ சென்று நேரம் தாமதமானால் காரணங்களை அறிய வேண்டும். பிள்ளைகள் தொடர்பில் பெற்றோர் அதிக சிரத்தையுடன் கண்காணிக்க வேண்டிய பொறுப்புண்டு.

பெற்றோர் பிள்ளைகள் தொடர்பில் அதிக அக்கறை செலுத்தாது, அவர்களின் வித்தியாசமான செயற்பாடுகள் தொடர்பில் அக்கறை செலுத்தாது, பொலிஸார் போதைப்பொருள் கடத்தல்காரர்களையும் வியாபாரிகளையும் கைதுசெய்ய வேண்டும் என்று பொலிஸார் மீது முழு குற்றச் சாட்டுக்களையும் முன்வைக்க முடியாது.

போதைப்பொருள் விற்பனையாளர்கள் தமது பாதுகாப்பிற்காக சி.சி.ரி.வி பொருத்தி யார் வருகின்றார்கள் என கண்காணிப்பதால், உளவு சொல்ல நபர்களை வைத்திருப்பதால், கைதுசெய்ய செல்லும்போது பிரதான நபர்கள் தப்பிச்சென்று விடுகின்றார்கள். கைதுகள் செய்கின்றோம். பிரதான வியாபாரிகளுக்கு வலை வீசுகின்றோம். மிக விரைவில் கைதுசெய்வோம். பெற்றோர்கள் தமது பிள்ளைகள் தொடர்பில் அதிக அக்கறை கொண்டு அவர்களின் செயற்பாடுகளை அவதானிக்க வேண்டும். போதைப்பொருள் தொடர்பான தகவல்களை வழங்க முன்வர வேண்டும். பாடசாலை அதிபர்களும் ஒத்துழைப்புத் தர வேண்டும்.

சட்ட வைத்திய அதிகாரி

யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களில் ஐஸ் மற்றும் ஹெரோயின், கிஹோயின் பயன்படுத்தியவர்கள் சிகிச்சை பெறுவதற்காகவும், பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு வைத்திய பரிசோதனை அறிக்கைக் காகவும் அழைத்து வரப்படுகின்றார்கள்.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தின் தற்துணிவில், சமூக விருப்பத்துடன், பொலிஸாருக்கு உத்தரவிட்டு, ஐஸ் மற்றும் ஹெரோயின் பாவிப்பவர்களை கைதுசெய்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு உத்தரவிட்டதன் பேரில் களையெடுக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் 4 நீதிமன்றங்கள் உள்ளன. ஆனால், ஏனைய 3 நீதிமன்றங்களில் இருந்தும் எந்தவித தரவுகளும் கிடைக்கவில்லை. எங்களுக்கும் வருவதில்லை. உண்மையில், மல்லாகம் நீதிமன்றப் பகுதியில் அதிகமாக இருக்கலாம்.

யாழ்ப்பாணத்தில் மணியம்தோட்டம், குருநகர், திருநகர், கொட்டடி, நாவாந்துறை. திருநெல்வேலி பால் பண்ணை, மானிப்பாய் சாவற்காடு உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களில் அதிகரித்துள்ளது. மிகப் பிரபல பாடசாலைகளில் இருந்தும் கிழமைகளில் இருவர் அல்லது மூவர் என மருத்துவ ஆலோசனைக்கு வருகின்றார்கள். 17 வயது முதல் 26 வயதானவர்கள் வருகின்றார்கள். மிகவும் அதிகமாக 19, 20, 21 வயதானவர்கள் வருகின்றார்கள்.

பாடசாலைப் பருவத்திலேயே தான் அதிகமாக பழகியுள்ளார்கள். நிஜாம் பாக்கில் ஆரம்பிக்கப்பட்டு, மாவா பாக்கு, கஞ்சா, ஹெரோயின், கிஹோயின் என வந்து நிற்கின்றது. தனியாக ஹெரோயின் பாவிப்பவர்களின் எண்ணிக்கை மிக குறைவு. ஹெரோயின் மற்றும் கஞ்சா பாவிக்கின்றார்கள். Commination பாவிக்கின்றார்கள்.

நாவாந்துறை ஐந்து சந்திப்பகுதியில் இருந்து வருபவர்கள் ஐஸ் பாவிப்பதாக சொல்கின்றார்கள். ஐஸ் என்ற போதைப்பொருளின் விலை அதிகமானதால், அதைப் பாவிப்பவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக காணப்படுகின்றது. ஹெரோயின் மற்றும் கஞ்சாவுடன் ஒப்பிடும் போது, ஹெரோயின் மற்றும் கஞ்சா அதாவது ஒரு "முள்ளு" 1000 ரூபாவிற்கு வாங்க முடியும்.

ஐஸ் 8000 ரூபா முதல் 10000 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் ஐஸ் பாவனை குறைவு. ஐஸ் அதிகமாக மன்னார் பகுதியில் பயன்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

போதை மாத்திரைகள் அதிகமாக பாவிக்கின்றார்கள். freegap என்ற போதை மாத்திரையை அதிகமாக பயன்படுத்துகின்றார்கள். கடந்த 3 மாதங்களில் 50 பேர் வந்தார்கள. திடீரென பார்த்தால், 100 இற்கும் மேல் அதிகரித்துவிட்டது. அதற்கு காரணம், திடீரென பாவனையின் அளவும் அதிகரித்துவிட்டது.

சில பெற்றோர்கள் தற்போது முன்னெடுக்கப்படும் விழிப்புணர்வின் காரணமாக, விழிப்படைந்து, வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிப்பதுடன், பொருளாதார நெருக்கடியின் காரணமாக பொலிஸ் நிலையங்களிலும், புனர்வாழ்வு நிலையங்களிலும் தாமாகவே ஒப்படைக்கின்றார்கள்.

பாடசாலை மாணவர்கள் நிறைய இடங்களில் மறைக்கப்படுகின்றார்கள். சாவகச்சேரி பிரதேசத்திலுள்ள பாடசாலை அதிபர்கள் முன்னின்று மாணவர்களை சிகிச்சை நிலையத்திற்கு அனுப்புகின்றார்கள். சாவகச்சேரி வைத்தியசாலையில் போதைப்பொருளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு 'குறுந்தகம்' எனும் சிகிச்சை நிலையம் உண்டு. அங்கு புனர்வாழ்வு அளிக்கப்படுகின்றது. ஏனைய சில பாடசாலைகளில் மறைக்கின்ற சம்பவங்கள் அதிகமாக உள்ளன.

சில அதிபர்கள் தமது பாடசாலையின் பெயர் கெட்டுப் போய்விடும் என்ற காரணத்திற்காக பெற்றோர்களிடமோ, புனர்வாழ்வு அளிப்பதற்கோ முன்வருவதில்லை. பாடசாலையில் மாணவர்கள் மயங்கி இருந்தாலோ, நித்திரை கொண்டாலோ, மாற்றங்களை அவதானித்தால், உடனடியாக சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு தகவல் வழங்கி பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கை தொடர்பில் அக்கறை செலுத்தவேண்டிய கடப்பாடு பாடசாலை சமூகத்திற்கு உண்டு என்பதை மறந்துவிடுகின்றார்கள்.

பாடசாலையில் களவு போனால், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யும் அதிபர் மாணவன் ஒருவர் போதைப்பொருளுடன் பிடிபட்டால், பொலிஸ் நிலையத்தில் சொல்வதில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

"கௌரவம்" மற்றும் மதம் சம்பந்தப்பட்ட பாடசாலைகள், தங்களது மதத்தில் இவ்வாறான பழக்கவழக்கங்கள் ஏற்படாது என்ற கருத்துகளை முன்வைத்து கண்டும் காணாததைப் போன்று விடுகின்றார்கள். இவ்வாறான மூடநம்பிக்கைகளினால், மாணவர்களின் வாழ்க்கை சீரழிந்துகொண்டு செல்வதை அவதானிக்ககூடியதாக உள்ளது.

இன்சுலின் ஊசிகள் (Injection) மூலம் ஹெரோயினை உடம்பில் ஏற்றுகின்றார்கள். அதிகமாக மாலை 5 மணிமுதல் இரவு 7 மணி வரை அனைத்து மருந்தகங்களிலும், கூலித் தொழிலாளர்கள் உட்பட இளைஞர்கள் பலர் ஊசிகளை வாங்கிச் செல்வதை அவதானிக்க முடியும். தேசிக்காயுடன் ஹெரோயின் மூலம் உடலில் ஏற்றும் போது, அந்த இடங்களில் ஊசி ஏற்றிய அடையாளம் கறுப்பாக மாறிவிடும். குறிப்பாக முழங்கை பகுதியில் இரத்த நாளத்தில் தேசிக்காய் புளி கலந்து ஹெரோயின் ஏற்றும்போது, கறுப்பாக மாறுவதால், அந்த நபர் போதைப்பொருள் பயன்படுத்துகின்றாரா என்பதை அடையாளம் காண முடியும்.

ஊசியை திரும்பத் திரும்பப் பயன்படுத்தும் போது கிருமித் தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. ஓர் ஊசியை மாறி மாறிப் பலர் பயன்படுத்தும் போது, ஒருவருக்கு இருக்கும் தொற்று நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் உள்ளன. அதாவது எச்.ஐ.வி. போன்ற தொற்றுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் மிக அதிகமாகவே காணப்படுகின்றன.

ஆகவே, போதைப்பொருள் பயன்பாட்டின் தாக்கம் தொடர்பாக, கிராம மட்டங்களில் உள்ளவர்களுக்கு தெரியாது. அதற்கான விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. அவ்வாறு விழிப்புணர்வை ஏற்படுத்த சுகாதாரத்துறையை அதிகமாகப் பயன்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது.

கிராம மட்டங்களில் பொதுச் சுகாதார பரிசோதர்கள் ஊடாக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது.

(தொடர்ச்சி 15 ஆம் பக்கம்...)

போதைப்பொருள் சோதனைகள் பற்றிய அறிக்கை from 01.07.2022to30.09.2022

police station	Heroin					Cannabis					Ice (Methamphetamine)					மொத்த அபராதத் தொகை ரூ
	ஹெரோயின் சுற்றிவளைப்பு	கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை	அளவு கிராம்	அபராதத் தொகை	நீதிமன்றத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டவற்றின் எண்ணிக்கை	கஞ்சா சுற்றிவளைப்பு	கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை	அளவு கிராம்	அபராதத் தொகை	நீதிமன்றத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டவற்றின் எண்ணிக்கை	ஐஸ் சுற்றிவளைப்பு	கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை	அளவு கிராம்	அபராதத் தொகை	நீதிமன்றத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டவற்றின் எண்ணிக்கை	
யாழ்ப்பாணம்	157	157	52.49	96500	114	32	32	8515.18	202000	10	1	1	0.76	0	1	298500
மானிப்பாய்	30	30	8.44	70000	21	8	8	4.34	45000	0	2	2	2.912	0	21	115000
சுன்னாகம்	11	11	0.325	30000	7	14	14	49.27	55000	5	0	0	0	0	0	85000
சாவகச்சேரி	28	28	1.163	178000	20	24	24	33.105	90000	12	0	0	0	0	0	268000
கோப்பாய்	30	30	6.668	0	30	0	0	0	0	0	0	0	0	0	0	0
கொடிகாமம்	10	10	0.45	0	10	0	0	0	0	0	0	0	0	0	0	0
ஊர்காவற்றுறை	1	1	0.45	0	1	2	2	537109.1	0	2	1	1	7.1	7500	0	7500
டெல்வ்ட்	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0
வட்டுக்கோட்டை	5	5	0.202	50000	0	3	3	923	30000	0	0	0	0	0	0	80000
Total	272	272	70.189	424500	203	83	83	546633.995	422000	29	4	4	10.772	7500	22	854000

மன்னார் மீன்பிடியில் பாரிய வீழ்ச்சி ஏன்?

ஜோசப் நயன்

"எனது மகள் மற்றும் அவரது குடும்பம் அண்மையில் சட்டவிரோதமாக இந்தியா சென்றுவிட்டனர். இங்கிருந்து எங்கள் தொழிலை நடத்தமுடியாது. இப்பொதைக்கலாம் மீன் பிடிபடுவதேயில்லை. நடுக்கடலுக்குப் போய் மீன்பிடிக்கவும் எங்களுக்கு வசதியில்லை. இந்த விலைவாசி அதிகரிப்பில் மீன்பிடியில்லாமல் எம் போன்றவர்களால் வாழமுடியாது. இந்த இடத்தை விட்டுப் போகவேணும் அல்லது வேற தொழில் பாக்கவேணும்" என மீன்பிடியை மேற்கொண்டு தற்போது தச்சுத் தொழிலில் ஈடுபட்டு வரும் ரெட்னேஸ் தெரிவிக்கின்றார்.

மன்னார் மாவட்டத்தில் இவ்வாறாறு மீன்பிடியைக் கைவிட்டு வேறு தொழில்களை நாடிச்செல்லும் பல குடும்பங்கள் இருப்பதாகவும் கரைவலைத் தொழிலுக்கு சென்றால் கறிக்குக் கூட மீன் கிடைப்பது கடினமாகவுள்ளதாகவும் தாழ்வுபாடு மீனவ சங்கத்தலைவர் தெரிவிக்கின்றார்.

அண்மைக் காலமாக மன்னார் கடற்பகுதியில் மீன்பிடி மிகக் குறைவாகக் காணப்படுவதாகவும் வாழ்வாதாரத்திற்கு மிகவும் சிரமப்படுவதாகவும் மன்னார் சௌத்பார் பகுதியில் பல வருடங்களாக மீன்பிடியில் ஈடுபட்டு வரும் சூசைதாசன் தெரிவிக்கின்றார்.

மன்னார் மாவட்டமானது பெரும்பாலும் மீன்பிடியை மையமாக கொண்ட ஒரு மாவட்டமாகும். குறிப்பாக மன்னார் மாவட்டத்தின் தீவகப்பகுதி முழுவதும் மீன்பிடி மற்றும் மீன்பிடியைச் சார்ந்த பல உப தொழில்களை வாழ்வாதாரமாக கொண்ட குடும்பங்களே அதிகமாகக் காணப்படுகின்றன. அதிலும் குறிப்பாக கரையோர மீன்பிடியென்பது பெருங்கு பிரதான வாழ்வாதாரமாக உள்ளது. தற்போதுவரை மன்னார் மாவட்டத்தில் 10,886 மீனவ குடும்பங்களும் 40,530 மீன்பிடியை வாழ்வாதாரமாகக் கொண்டவர்களும் 13,509 தொழிற்பாட்டில் உள்ள மீனவர்களும் மீன்பிடியை வாழ்வாதாரத் தொழிலாக கொண்டுள்ளனர்.

ஆனால், இன்று மக்கள் இவ்வாறு கூறுவதற்கு என்ன காரணம்?

கடந்த இரண்டு ஆண்டுகளாக மன்னார் மாவட்டத்தில் மீன் உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. அந்த வீழ்ச்சியானது அசாதாரண அளவில் காணப்படுகின்றமை மீன்பிடியில் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய பாதிப்பை எடுத்துக்காட்டக் கூடியதாகவுள்ளது.

அவ்வீழ்ச்சியானது 2019ஆம் ஆண்டை விட 2020ஆம் ஆண்டில் 216,72,430 (இரண்டு கோடியே பதினாறு இலட்சத்து எழுபத்து இரண்டாயிரத்தி நானூற்று முப்பது) கிலோ குறைவாகவும் 2019ஆம் ஆண்டை விட 2021 ஆண்டு 83,56,598 (எண்பத்து மூன்று இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து ஐநூற்று தொண்ணூற்று எட்டு) கிலோ கிராமாகவும் குறைந்துள்ளது.

2019, 2020 ஆண்டு காலப்பகுதியில் கொரோனா பெருந்தொற்று என்ற அடிப்படையில் பல்வேறு முடக்கநிலை காணப்பட்ட போதிலும், 2019ஆம் ஆண்டு மீன்பிடி உற்பத்தி அளவு ஏனைய ஆண்டுகளை விட அதிகளவாக காணப்பட்டதுடன், 2020ஆம் ஆண்டு மீன்பிடி ஏனைய ஆண்டுகளை விடக் குறைவாக காணப்படுகின்றது.

2019 மற்றும் 2020ஆம் ஆண்டு ஏற்றுமதி மற்றும் போக்குவரத்துக் கட்டுப்பாடு, சுகாதாரப் பிரச்சினைகளை மையப் படுத்தி பல பிரச்சினைகள் காணப்பட்டமையினால் 2020ஆம் ஆண்டு மீன்பிடி தொடர்பான குறைவுக்கு கொரோனா தொற்றும் பொது முடக்கமும் ஓரளவு காரணமாக இருக்கலாம்.

ஆனாலும், 2021ஆம் ஆண்டு நாடு இயல்புநிலைக்கு வந்த போதிலும், 2020ஆம் ஆண்டு கொரோனா காரணமாக மீன்பிடி இம்பெறுமையினால் மன்னார் கடற்கரைப் பகுதிகளில், மீன்வளம் அதிகரித்து காணப்பட வேண்டிய நிலையில், மீன்பிடியில் எவ்வாறான அதிகரிப்பும் காணப்படவில்லை என்பதுடன், 2021இல் இந்த மீன்பிடி பாரியளவு வீழ்ச்சியடைந்துள்ளமை ஆராயப்பட வேண்டிய விடயமாக உள்ளது

இவ்வாறான பின்னணியில், மன்னார் மாவட்டத்தில் கடந்த 5 வருடங்களில் கடற்றொழில் தினைக்களத்தினால் பெறப்பட்ட மீன் உற்பத்தி தொடர்பான தகவல் ஊடாக மன்னார் மாவட்டத்தில் மீன் உற்பத்தி சடுதியாக குறைந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

அதன் அடிப்படையில் கடந்த 2018, 2019ஆம் ஆண்டுகளை விட 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் மன்னார் மாவட்டத்தில் மீன் உற்பத்தியானது பல இலட்சம் கிலோ அளவுக்கு குறைவடைந்துள்ளமை அதிர்ச்சியளித்துள்ளது.

மீன்பிடியை பிரதான வாழ்வாதாரமாக கொண்ட ஒரு மாவட்டத்தில் மீன்பிடியின் வீழ்ச்சியானது ஆயிரக்கணக்கில் குறைவடைவதென்பது சாதாரண விடயமாக கொள்ளப்பட்டாலும், பல இலட்சம் கிலோ மீன்பிடி குறைவு என்பது நிச்சயம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

குறிப்பாக மன்னார் கடற்றொழில் திணைக்களத்தின் ஊடாக பெறப்பட்ட தகவலின் பிரகாரம் மன்னார் மாவட்டதில் உள்ள 46 இடங்களில் மேற்கொள்ளப்பட்ட மீன் உற்பத்தி தொடர்பான தகவலின் அடிப்படையில்

2017ஆம் ஆண்டு 207,09,411 கிலோ மீன் உற்பத்தியும்
2018ஆம் ஆண்டு 230,48,762 கிலோ மீன் உற்பத்தியும்
2019ஆம் ஆண்டு 253,35,556 கிலோ மீன் உற்பத்தியும்
2020ஆம் ஆண்டு 183,15,630 கிலோ மீன் உற்பத்தியும்
2021ஆம் ஆண்டு 169,78,958 கிலோ மீன் உற்பத்தியும்

இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதன் அடிப்படையில் மன்னார் மாவட்டத்தில் 2017, 2018, 2019ஆம் ஆண்டுகளை விட 2020, 2021ஆம் ஆண்டுகளில் மீன்பிடி பாரியளவிற்கு குறைவடைந்துள்ளமை இத்தரவுகளின் ஊடாக தெரியவருகின்றது.

இவ்வாறான மீன் உற்பத்தியின் வீழ்ச்சிக்கு கொரோனா பாதிப்பு, மன்னார் மாவட்டத்தில் நீண்ட நாட்களாக இடம்பெற்று வருகின்ற சட்டவிரோத மீன்பிடி, அதே நேரம் கொரோனா காலப்பகுதியில் காணப்பட்ட போக்குவரத்து சிக்கலும் காரணங்களாக இருந்துள்ளன என மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், டைனமைட் வெடிபொருளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடும்போது மீன்களின் வாழ்வில் மற்றும் மீன்கள் உற்பத்தியாகும் பகுதிகள், முருகைக் கற்பாறைகள் என்பன சேதமடைவதால் அடுத்த தலைமுறைத் தோற்றத்திற்கான மீன்வளம் குன்றிப் போவதால் மீன் உற்பத்தி குறைவடைகின்றது என்று தெரிவிக்கின்றார்.

அத்துடன் கொரோனா காலப்பகுதி என்பதால் மீன் உற்பத்தியை சந்தைப்படுத்தலில் காணப்பட்ட பிரச்சினையும் போக்குவரத்துத் தடைகளும் இம்மீன் உற்பத்தி வீழ்ச்சிக்குக் காரணம் என்று அவர் தெரிவிக்கின்றார்.

இந்நிலையில், மன்னார் மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத மீன்பிடி தொடர்பான விபரங்களுடன் மீன் உற்பத்தியை ஒப்பிடுகையில், மன்னார் மாவட்டத்தில் 2018ஆம் ஆண்டு சட் விரோத மீன்பிடி என்ற அடிப்படையில் 37 வழக்குகளும் அதில் 9 டைனமைட் பயன்படுத்திய வழக்குகளும் 2019ஆம் ஆண்டு 56 வழக்குகளும் அதில் 6 டைனமைட் பயன்படுத்திய வழக்குகளும் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

அதேநேரம் 2020ஆம் ஆண்டு 111 வழக்குகளும் அதில் டைனமைட் வெடிபொருள் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட வழக்கு வெறுமனே 1 உம் ஏனையவை உரிய அனுமதி இல்லாமை, இரவு நேரங்களில் அனுமதியற்ற தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டமை, அமை பிடித்தமை போன்றவையாகும். அதேபோன்று 2021ஆம் ஆண்டு 116 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டிருந்தன. அதில் டைனமைட் வெடிபொருள் பயன்படுத்தியதாக எந்த வழக்கும் தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.

இவ்வாறான பின்னணியில் பாரியளவிலான சட்டவிரோத மீன்பிடி சம்பவங்கள் மன்னாரில் பதிவுசெய்யப்படாமை உறுதிசெய்யப்பட்டுள்ள நிலையில், 83 இலட்சம் கிலோ மீன் உற்பத்தி வீழ்ச்சிக்கு சட்டவிரோத மீன்பிடியின் தாக்கம் மிக பிரதான பங்களிப்பு என்பதை ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும் என்பதுடன், சட்டவிரோத நடவடிக்கையின் ஊடாக மீன்பிடி இடம்பெறுமாயின் ஆண்டின் மீன் உற்பத்தி அதிகரித்தே காணப்படும்.

அதே நேரம் 2017,18,19ஆம் ஆண்டுகளிலும் மன்னார் மாவட்டத்தில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் இடம்பெற்ற போதிலும் அவ்வாண்டுகளில் மீன்பிடி அதிகரித்தும் 2020, 2021ஆம் ஆண்டுகளில் குறைந்து காணப்படுகின்றமை ஒப்பீட்டளவில் சட்டவிரோத மீன்பிடியினால்தான் மீன்வளம் குறைந்துள்ளது என்பதை ஏற்புடையதாக்கவில்லை.

இதேவேளை இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய மீன்பிடி நடவடிக்கை மற்றும் அவர்களின் சட்டவிரோதமான இழுவலடி வலை பாவனையினால் அதிகளவு மீன்வளம் குன்றிப் போவதாக வடமாகான மீனவ சமாஜ ஊடகப் பேச்சாளரும் மன்னார் மீனவ சங்க உப தலைவருமான ஆலம் தெரிவிக்கின்றார். இந்திய மீனவர்களின் வருகையின் அடிப்படையில் மீன் உற்பத்தியை ஒப்பீட்டுப் பார்க்கும்போது இந்திய மீனவர்களின் கைது நடவடிக்கை மன்னார் மாவட்டத்தில் 2018ஆம் ஆண்டு 1 மீன்பிடி படகும் 2019ஆம் ஆண்டு 2 படகுகளும் கைப்பற்றப்பட்டு மீனவர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

அதேபோல் 2020ஆம் ஆண்டு 1 படகும் 2021ஆம் ஆண்டு 2 படகுகளுமே பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. எனவே, சடுதியான இந்த மீன் உற்பத்திக் குறைவுக்கும் இந்திய மீனவர்களின் வருகைக்குமான சம்பந்தம் என்பது குறைவாகவே காணப்படுகின்றது.

அதே நேரம் இந்திய மீனவர்களின் வருகை என்பது யுத்தம் நிறைவடைந்த பின்னரான காலப்பகுதியில் உச்ச நிலையில் காணப்பட்டது அதே நேரம் 2017, 2018, 2019ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் இந்திய மீனவர்களின் வருகை காணப்பட்ட போதிலும், அவர்களின் சட்டவிரோத இழுவை மடி மீன்பிடி முறை பயன்படுத்தப்பட்ட போதிலும், மீன் உற்பத்தியின் வீழ்ச்சி என்பது காணப்படவில்லை என்பதுடன், ஆண்டுதோறும் (100,000 - 300,000) ஒரு இலட்சம் தொடக்கம் மூன்று இலட்சம் கிலோகிராம் வரையான உற்பத்தி அதிகரிப்பே காணப்படுகின்றது

ஆனாலும் 2020, 2021ஆம் ஆண்டு காலப்பகுதில் இவ்வுற்பத்தித் தொகையானது சடுதியாக 83 இலட்சம் கிலோ வரை குறைந்து காணப்படுகின்றமை கரிசனையில் கொள்ளப்படவேண்டிய ஒன்றாகும்.

இவ்வாறான பாரிய அளவு உற்பத்திக் குறைவுக்கு மன்னார் மாவட்டத்தில் 2019ஆம் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட காற்றாலை மின் உற்பத்தி செயற்றிட்டமும் கரையோரப்பகுதிகளில் அமைக்கப்பட்ட காற்றாலைகளும் காரணமாக இருக்கலாம் என மன்னார் மாவட்ட பிரதேசங்கள் குழு உட்பட்ட பொது அமைப்புக்கள் தொடர்ச்சியாக சந்தேகம் எழுப்பியுள்ளதுடன், காற்றாலை செயற்றிட்டத்தின் விரிவுபடுத்தலுக்கு எதிராக மக்களை ஒன்றுதிரட்ட மன்னார் மாவட்டத்தில் பல்வேறு கட்ட போராட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறான பின்னணியில் காற்றாலை கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ள பகுதிகளில் 2017- 2021ஆம் ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் அந்த இடங்களில் மீன் உற்பத்தியின் நிலை எவ்வாறு உள்ளது என்பதுடன், அங்கு இடம்பெற்ற மீன் உற்பத்திய விசேடமாக ஆராய்ந்தோமேயானால் அப்பகுதிகளில் ஏனைய பகுதிகளை விட அதிகளவான மீன் உற்பத்திக் குறைவு ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்படுகின்றது.

அதன் அடிப்படையில்,

கிராமம்	2018	2019	2020	2021
நடுக்குடா	357122	351065	234848	96270
முருகன் கொல்லை	319017	343229	243876	119378
பேசாலை	2792846	2830213	1635264	597576
காட்டாஸ்பத்திரி	265097	307625	282008	262244
சிறுதோப்பு	550707	604063	320716	168072
வெரிய கரிசல்	720010	791548	373625	178154
சின்ன கரிசல்	472200	554748	345508	103037
புதுகுடியிருப்பு	608676	678379	505631	433387
எருக்கலம்பிட்டி	714716	811016	541758	245643

போன்ற பகுதிகளில் காற்றாலை மின் உற்பத்திக்கு முன்னர் காணப்பட்ட மீன்பிடி அதிகரிப்பும் அதேவேளை அதே பகுதிகளில் காற்றாலை அமைக்கப்பட்ட பின்னர் காணப்படுகின்ற மீன் உற்பத்தி குறைவும் தெளிவாகத் தெரியவருகின்றது.

இந்நிலையில், காற்றாலை செயற்றிட்டம் மீன் உற்பத்தியில் பாதிப்பை ஏற்படுத்துமா என்பது தொடர்பில் பெயர் குறிப்பிட விரும்பாத மீன்பிடிக் கற்கையாளர் தொடர்புபட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரை தொடர்பு கொண்டு கேட்டபோது கரையோரங்களில் மேற்கொள்ளப்படும் காற்றாலை செயற்றிட்டத்தின் ஊடாக மீன் உற்பத்தியில் பாதிப்பு ஏற்படுமா, மீன் உற்பத்தியில் பாதிப்பு ஏற்படாதா என்பது தொடர்பான எந்தவொரு விஞ்ஞான ஆய்வுகளும் இல்லை என அவர் தெரிவித்திருந்தார்.

அதேநேரம் மன்னார் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள காற்றாலை செயற்றிட்டத்தினால் புலியில் ரீதியாகவும் வானிலை ரீதியாகவும் பலதரப்பட்ட பாதிப்புகளை மன்னார் மாவட்ட எதிர்கொண்டு வருவதாக யாழ். பல்கலைகழக புவியியல் சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா உறுதிப்படுத்துகின்றார்.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் காலநிலையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் மழை நாட்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகவும் ஆனால், மழை வீழ்ச்சியின் அளவு அதிகரித்து வெள்ள பாதிப்பு ஏற்படுவதாகவும் அவர் தெரிவிக்கின்றார். மேலும், காற்றாலை அமைக்கப்பட்ட பகுதிக்கு அருகில் ஆவி உயிர்ப்பு ஆவியாக்க செயற்பாடு அதிகம் காணப்படுவதாலும் காடுகள் அழிக்கப்படுவதால் மன்னாரில் வறட்சி அதிகரித்து வருவதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

அத்துடன் கடலை அண்மித்த பகுதியில் இடம்பெறும் புதிய கட்ட நிர்மாணங்கள் மற்றும் புதிய மாற்றங்களுக்கு கல்வாழ் உயிரினங்கள் உடனடியாக ஈடுகொடுப்பதில்லை

எனவும் கல்வாழ்வமூலில் அது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தலாம் என P.ஒல்டியன் B.Sc (hons) in Marine and Freshwater Sciences (Undergraduate) தெரிவிக்கின்றார்

அவர் மேலும் தெரிவிக்கையில், கடற்பகுதியில் மேற்கொள்ளப்படும் கட்ட நிர்மாணங்களின்போது உருவாகும் சத்தம் மற்றும் அமிலங்கள் காற்றின் ஊடாக பரவி கடலில் சேரும்போது கடல் பகுதியிலுள்ள கூழல் தொகுதி நிச்சயம் பாதிப்படையும் என்று அவர் தெரிவிக்கின்றார்.

அதேவேளை காலநிலை மாற்றம் மனிதர்கள் வாழும் கூழலை மாத்திரமல்லாமல் கடல் கூழலிலும் மாற்றத்தை ஏற்படுத்தும் எனவும் கடல் கூழல் சார்ந்த பகுதியில் காலநிலையில் தொடர்சியாக மாற்றம் ஏற்படும்போது அவையும் கடல் கூழல், கடல் தாவரங்கள் மற்றும் மீன் இனப்பெருக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அவர் தெரிவிக்கின்றார்.

மேலும், கடல் கூழலை அண்டிய பகுதிகளில் ஏற்படும் சத்தம், இரவு நேரங்களில் ஏற்படும் வெளிச்சம் என்பன நள்ளிரவில் உணவு தேடும் மீன்களின் வருகையையும் குறைக்கும் வாய்ப்புகள் காணப்படுவதாக அவர் தெரிவிக்கின்றார்.

மேலும், இலங்கையில் பாதுகாக்கப்படும் அமைமினங்களில் காற்றாலைகளில் பாதுகாப்புக்கு பொருத்தப்பட்டிருக்கும் சிவப்பு நிற எச்சரிக்கை விளக்கின் வெளிச்சத்துக்கு ஈர்க்கப்பட்டு கரைகளை நோக்கி வருகை தரலாம் எனவும் உற்பத்தியை அதிகரிக்கும் அமைகளின் இனப்பெருக்க நடவடிக்கைகள் இதனால் பாதிக்கப்படுவதுடன், அமைகளின் பாதுகாப்பான இனப்பெருக்க இடங்களை தவிர்த்து வெளிச்சம் காணப்படும் இடங்களை நோக்கி நகரும் சம்பவங்களும் இடம்பெறலாம் என்று தெரிவிக்கின்றார். இவ்வாறான சம்பவங்கள் தொடர்சியாக இடம்பெறும் பட்சத்தில் மீன்கள் வேறிடங்களை நோக்கி நகரக் கூடிய வாய்ப்புக்கள் காணப்படுவதுடன், கடல் தாவரங்களின் வளர்ச்சியும் குறைவடையும் என அவர் கட்டிகாட்டியுள்ளார்.

மேலும், கடந்த மாதம் தலைமன்னார் கடற்பகுதியில் 10-15 க்கு மேற்பட்ட அமைகளின் இறந்த உடல் பாகங்கள் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் மீட்கப்பட்ட சம்பவம் ஒன்றும் பதிவாகியுள்ளமை குறிப்பிடதக்க அம்சம் ஆகும்.

அதேநேரம் அண்மையில் தமிழ்நாட்டின் கரையோரங்களில் மிதக்கும் காற்றாலை செயற்றிட்டங்களை அமைப்பதை எதிர்த்து பொதுமக்களால் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

இவ்வாறான பின்னணியில் மன்னார் மாவட்டத்தில் அதானி கீன் எனர்ஜி லிமிட்டெட் நிறுவனத்துடன் இணைந்து மன்னார் தொடக்கம் பூநகரி அதேநேரம் முள்ளிக்குளம் பகுதி வரையான இடங்களில் மின் காற்றாலைகள் அமைக்கும் பணிக்கான தற்காலிக அனுமதியை வலுசக்தி அமைச்சு வழங்கியுள்ளதாக மின்வலு சக்தி அமைச்சர் காஞ்சன விஜசேகர தனது ட்விட்டர் பக்கத்தில் ஒகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி தெரிவித்திருந்தார். அதன்படி 500 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் 520 மெகாவோட் மின் உற்பத்திகளை மேற்கொள்ளும் 90 மின் காற்றாலைகளை அமைப்பதற்கான விரிவுபடுத்தல் திட்டமும் மன்னார் மாவட்டத்தில் அமூல்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான அதிகளவான காற்றாலைகள் மன்னார் தீவக பகுதிக்குள் அமைக்கப்பட்டால் தற்போது இருக்கும் மீன்வளம் முற்றும் முழுதாக அழிவடைந்துவிடும் எனவும் தீவகப்பகுதிக்குள்ளேனே அல்லது கடற்தொழியோர்களிலோ மீன்பிடி நடவடிக்கை நடைபெறும் பகுதிகளிலோ காற்றாலை செயற்றிட்டங்களை மேற்கொள்ள வேண்டாம் என பிரதேசக் குழு மற்றும் மீனவ அமைப்புகள் கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கோரிக்கை விடுத்திருந்தனர் இருப்பினும், இந்த செயற்றிட்டத்தின் மேலதிக முன்னெடுப்புகள் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டே வருகின்றன. அதே நேரம் மன்னார் மாவட்டத்தில் தரிசாக கிடக்கும் மக்கள் பயன்படுத்தாத எத்தனையோ தரிக நிலங்கள் எத்தனையோ ஆயிரம் ஏக்கர் காணப்படுவதாகவும் அவற்றில் காற்றாலை விரிவுபடுத்தலை மேற்கொள்ளுமாறும் கடற்கரைகளிலும் மீன்பிடி நடவடிக்கைகள் இடம்பெறும் இடங்களிலும் காற்றாலைகள் வேண்டாமென வட மாகாண மீனவ இணையத்தின் ஊடகப்பேச்சாளர் ஆலம் தெரிவிக்கின்றார்.

சர்வதேச ரீதியில் ஒப்பிடுகையில் நம் நாட்டில் இளைஞர்களுக்கான வாய்ப்பு மிகக் குறைவு

மடசுசிகலா

இளைஞர் நாடாளுமன்ற வெளிவிவகார பிரதியமைச்சர் அஹ்மத் சாதிக்

சர்வதேச மாதிரி ஐக்கிய நாடுகள் சபை மாநாட்டில் சுமார் 80 நாடுகளிலிருந்து 120க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்துகொண்டனர். அதில் கலந்துகொண்ட பெரும்பாலான இளைஞர்களுக்கு அவர்களுடைய நாடுகளில்நிலவும் சலுகைகளும் புலமைப்பரிசில்களும் வழங்கப்பட்டிருந்தன. ஆனால், இலங்கையிலிருந்து முயற்சி செய்தும் அவ்வாறான சலுகைகள் கிடைக்கவில்லை என்பது கவலைக்கிடமான விடயமாகும் என்கிறார் இளைஞர் நாடாளுமன்ற வெளிவிவகார பிரதியமைச்சர் அஹ்மத் சாதிக்.

அவர் 'தமிழன்' நாளிமுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அதன் முழுவிபரம் பின்வருமாறு,

உங்களைப் பற்றிய அறிமுகம் ஒன்றை தாருங்கள்?

நான் அஹ்மத் சாதிக், பேருவளையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டுள்ளேன். அல்-பாலியத்துள் நஸ்ரியா முஸ்லிம் பாடசாலையில் ஆரம்பக் கல்வியை ஆரம்பித்து, தரம் இரண்டிலிருந்து உயர்தரம் வரையில் அல்-ஹுஸைஸ்வரா தேசிய பாடசாலையில்

கற்று, களனி பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ பீடத்தில் கணக்கியல் துறையில் உயர்கல்வியை முழுமைப் படுத்தினேன். அத்தோடு CIM கற்கை நெறியின் இறுதிநிலையில் இருக்கிறேன். தற்போது ஒரு தனியார் நிறுவனத்தின் கணக்காளராக பணிபுரிகிறேன்.

இளைஞர் நாடாளுமன்றத்தினூடாக நாட்டில் என்னென்ன வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளீர்கள்?

பிரதேசவாரியாக முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்கள், இளைஞர் கழகங்களை ஒன்று சேர்த்து இளைஞர் கழகங்களினூடாக சமூகநலன் பேணக்கூடிய செயற்

பாடுகள், விளையாட்டு, ஆன்மீகம், தலைமைத்துவம் போன்றவை தொடர்பான செயற்பாடுகள் ஆகியவற்றை பிரதேசவாரியாக முன்னெடுத்தல்.

தேசிய ரீதியிலான வேலைத்திட்டங்களாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைமையில் கல்வி, கலை, விளையாட்டு போன்ற துறைகளை மையப்படுத்திய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்கு உதாரணமாக NVQ மட்டத்தில் உள்ள கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள், 'Talent Hunt', வருடாந்த கலை நிகழ்வுகள் தேசிய ரீதியில் முன்னெடுப்பதற்கு நான் உந்துதலாக இருந்திருக்கிறேன்.

இலங்கையில் மாதிரி ஐக்கிய நாடுகள் சபையொன்றை நிறுவ தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைவருக்கு முன்மொழிவொன்றை வைத்திருந்தீர்கள். அதற்கான முன்னெடுப்பு எவ்வாறுள்ளது?

கடந்த ஜூலை மாதம் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்ற சர்வதேச மாதிரி ஐக்கிய நாடுகள் சபை ஒன்றில் கலந்துகொண்ட அனுபவத்தின் அடிப்படையில் சர்வதேச மாதிரி ஐக்கிய நாடுகள் சபை ஒன்றை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அனுசரணையுடன் நிறுவுவதற்கும் முன்மொழிவை வழங்கினேன். அதனை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் வரவேற்றதுடன், இது தொடர்பாக அமைச்சருடனும், ஜனாதிபதியுடனும் கலந்துரையாடுவதாகவும் கூறியிருந்தார். அதன் அடிப்படையில் அண்மையில் இளைஞர் விவகார அமைச்சரையும் சந்தித்தபோது சர்வதேச மாதிரி ஐக்கிய நாடுகள் சபை நிறுவுதல் தொடர்பான முன்மொழிவை கலந்துரையாடி எதிர்காலத்தில் இந்த செயற்பாடுகள் வெற்றியடைக் கூடிய நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என்று கூறியிருந்தார்.

இலங்கைக்கான ஐக்கிய அரபு தூதுவர், ஈராக் தூதுவர், பலஸ்தீனத் தூதுவர், லிபிய தூதுவர், இந்தோனேசிய உயர்ஸ்தானிகர் மற்றும் ஜோர்டான் கலாசார அதிகாரி ஆகியோரை சந்தித்து கலந்துரையாடியுள்ளீர்கள். இச் சந்திப்புகளிலிருந்து கல்வி, விளையாட்டு மற்றும் தொழில் ரீதியில் நம் நாட்டு இளைஞர்களுக்கு உதவித்திட்டங்கள் கிடைத்துள்ளனவா?

இளைஞர் நாடாளுமன்ற வெளிவிவகார பிரதியமைச்சராக 2 வருடங்களாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறேன். அதனடிப்படையில் 25 இற்கும் மேற்பட்ட தூதரகங்கள் மற்றும் உயர்ஸ்தானிகராலயங்களுடன் சந்திப்புகளை மேற்கொண்டுள்ளேன், 20இற்கும் மேற்பட்ட உயர்ஸ்தானிகர்களை சந்தித்து இளைஞர்கள் தொடர்பான விடயங்களை அவர்களிடத்தில் கலந்துரையாடியிருக்கிறேன்.

அதன் அடிப்படையில் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்துடன், இணைந்து 3 மில்லியன் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் களுத்துறை மாவட்டத்தில் உள்ள 5 பாடசாலைகளுக்கு வழங்கியது, ஐக்கிய அரபு இராச்சியத்தின் உயர்ஸ்தானிகரை சந்தித்தபோது "Youth Exchange Program" ஒன்றை செய்வதற்கு உந்துதலாக அமைந்தது. பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் விளையாட்டுத்துறைக்கு ஆதரவு வழங்குவதாகவும் கூறியுள்ளார். மேலதிகமாக இன்னும் பல துறைகங்கள் மற்றும் உயர்ஸ்தானிகராலயங்களும் மேலதிக செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக கூறியுள்ளனர்.

இலங்கை இளைஞர் நாடாளுமன்றத்தின் ஒரு உறுப்பினராக நாட்டில் தற்போது இளைஞர்களின் பிரச்சினைகளை இனங்கண்டுள்ளீர்களா? அதனை தீர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா?

இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினராக மாத்திரமல்ல, சாதாரண இலங்கை வாழ் கல்வி கற்ற இளைஞன் என்ற ரீதியிலும் பலவிதமான பிரச்சினைகளை இனங்கண்டிருக்கிறேன். இளைஞர் நாடாளுமன்ற வெளிவிவகார பிரதியமைச்சர் என்ற ரீதியில் அவ்வாறான பிரச்சினைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறேன்.

ஐக்கிய அரபு அமீரகத்தின் மாதிரி ஐ.நா. சபை மாநாட்டில் கலந்துகொண்டிருந்தீர்கள். வெளிநாட்டு இளைஞர்களோடு ஒப்பிடுகையில் இலங்கையில் இளைஞர்களுக்கான வாய்ப்புகள் எவ்வாறுள்ளன?

சர்வதேச மாதிரி ஐக்கிய நாடுகள் சபை மாநாட்டில் சுமார் 80 நாடுகளிலிருந்து 120க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்துகொண்டனர். அதில் கலந்துகொண்ட பெரும்பாலான இளைஞர்களுக்கு அவர்களுடைய நாடுகளிலிருந்து சலுகைகளும், புலமைப்பரிசில்களும் வழங்கப்பட்டிருந்தன. ஆனால், இலங்கையிலிருந்து முயற்சி செய்தும் அவ்வாறான சலுகைகள் கிடைக்கவில்லை என்பது கவலைக்கிடமான விடயமாகும்.

இளைஞர் நாடாளுமன்றத்தில் நம் நாட்டு இளைஞர்களின் பங்கு திருப்திப் படக்கூடிய வகையில் உள்ளதா?

எதிர்கால தலைவர்களை உருவாக்குவதே இளைஞர் நாடாளுமன்றத்தின் நோக்கமாகும். அதன் அடிப்படையில் இளைஞர்களுடைய பிரச்சினைகள், இளைஞர்களுக்கான வாய்ப்புகள், இளைஞர் சமூகாயத்திற்கு முன்மாதிரியாக இருத்தல் போன்றவை இளைஞர் நாடாளுமன்றத்தின் குறிக்கோளாகும். அந்தவகையில் இளைஞர் நாடாளுமன்ற அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், ஏனைய உறுப்பினர்கள் அனைவரும் சிறந்த முறையில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றனர். மேலும், ஓர் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினருக்கு எந்தவித அதிகாரங்களோ, சலுகைகளோ, சம்பள முறைமைகளோ வழங்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வளர்ந்துவரும் இளம் அரசியல்வாதி எனும் விருதை அண்மையில் பெற்றிருந்தீர்கள். அது குறித்தான உங்களது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

"வளர்ந்துவரும் இளம் அரசியல்வாதி" என்ற விருதை பெறுவதற்கு தேசிய ரீதியில் நான் தெரிவுசெய்யப்பட்டதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். ஆண்டுதோறும் இளைஞர்களை ஊக்குவிக்கும் விதமாக பல்வேறு துறைகளிலும் இவ்விருதுகள் வழங்கப்பட்டு வருவது சிறப்பான ஒன்றாகும். இளைஞர்களின் முன்னேற்றத்திற்காக இதுவரையில் நான் செயற்பட்டதைப் தாண்டி என் எதிர்கால நடவடிக்கைகளுக்கான ஊக்குவிப்பாக அல்லது உந்துசக்தியாக இந்த விருது அமையும் என நினைக்கிறேன்.

"வாழ்க வாலிபம் வளர்க மானிடம்"

உயிர்க்கொல்லி...

அதிகளவான சம்பளத்தைப் பெறும் கூலித் தொழிலாளி, அந்தக் காசை சரியான முறையில் பயன்படுத்த தெரியாமல் இவ்வாறான தவறான செயற்பாடுகளுக்குள் பணத்தை செலவிட எண்ணுகின்றார்கள். அதற்குரிய தார்ப்பரியத்தை தெளிவுபடுத்தக் கூடிய சரியான அமைப்பு ஒன்றை கிராமங்களில் உருவாக்க வேண்டிய தேவையும் உள்ளது.

இதேவேளை சிற்பங்கள் வடிப்பவர்கள், கலைத் தொழிலாளர்கள், மீன்பிடித் தொழிலாளர்கள், கூலித் தொழிலாளர்கள் ஆகியோரும் அதிகமாகப் பயன்படுத்துகின்றார்கள்.

ஹெரோயின், பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகள் ஊடாக, இவங்கையின் தென்மாகாணங்களில் இருந்து வடமாகாணத்திற்கும், ஏனைய மாகாணங்களுக்கும் விநியோகிக்கப்படுவதாகவும் பொலிஸ் தரப்புகள் தெரிவிக்கின்றன.

இங்கு விநியோகம், பொதியிடல் மற்றும் ஏனைய விடயங்களில் பல தரப்பினர் சம்பந்தப்பட்டுள்ளனர். அரசியல்வாதிகள் மற்றும் ஏனையோர் அரசாங்கத்தை குற்றம் சுமத்துவது ஏற்றுக்கொள்ள முடியாதவை.

வெளிநாட்டைப் போன்று போதைப் பொருளுடன் இனி வரும் காலங்களில் வாழப்போகின்றோம். எவ்வாறு மதுபானத்துடனும் சிகரெட்டுடனும் வாழப்பழகிக் கொண்டுள்ளோமோ, அதேபோன்று போதைப்பொருடன் வாழப்பழகிக் கொள்ள நேரிடும்போது, அதன் ஆபத்துத் தொடர்பான விழிப்புணர்வு எமது சமுதாயத்தின் மத்தியில் இல்லை. விழிப்புணர்வின் மூலம், போதைப் பொருளுக்கான கேள்வியைக் குறைக்க வேண்டும்.

வருமானம் கூடிய தொழில் என்ற வகையில், இதை நாட்டிற்குள் கொண்டு வருபவர்கள் குறித்து நாங்கள் விழிப்புணர் வடையத் தவறினால், உயிரிழப்புகளையும், இளைஞர்கள் போதைப் பொருளுக்குள் அடிமையாகி சீரழிவதையும் தவிர்க்க முடியாது.

கடந்த ஓரிரு மாதங்களில் ஐஸ் போதைப் பொருள் பயன்படுத்தி மன்னாரைச் சேர்ந்த இரு இளைஞர்கள் உயிரிழந்தார்கள். தற்போது போதை மருந்து அதிகமாக உட்கொண்டு இளைஞர்கள் அதிகமாக உயிரிழக்கின்றார்கள். சுமார் 18 வயது முதல் 25 வயதிற்குட்பட்டவர்கள் அதிகளவாக பயன்படுத்துகின்றார்கள். இதனால், இறப்பு வீதங்கள் அதிகரிக்கின்றன. சிறுவர்கள் கூட போதை மாத்திரைகளை அதிகமாகப் பயன்படுத்தி இறந்துள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த வருடம் மார்ச் மாதத்திலிருந்தே அதிகளவான இறப்புகள் சம்பவிக்கத் தொடங்கிவிட்டன. சுமார் 10இற்கும் மேற்பட்ட இறப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்த இறப்புகள் அதிகளவில் குருநகர், கோப்பாய், திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் பதிவாகியுள்ளன. பலின் சிறுநீர் மாதிரிகள் கிடைக்காத சந்தர்ப்பங்களில், இந்த இறப்புகளின் எண்ணிக்கைகளை அடையாளப்படுத்த முடியாத சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது.

ஆண்களைப் போன்றே பெண்களும் சராசரியாக பயன்படுத்தும் நிலை யாழ்ப்பாணத்தில் உள்ளது. சிறுமி ஒருவர் ஆண் நண்பரினால் ஹெரோயினைப் பயன்படுத்த ஊக்குவிக்கப்பட்டு கர்ப்பமாக்கப் பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தில் பிரதான போதைப்பொருள் வியாபாரிகளாக பெண்கள் இருக்கின்றார்கள். அந்த 3 பெண்களுமே சிறுவர் முதல் இளையோர் ஊடாக விற்பனை வட்டத்தை உருவாக்கியுள்ளார்கள்.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தின் தற்துணிவு போன்று யாழ்.மாவட்டத்தில் உள்ள ஏனைய 3 நீதிமன்றங்களும் தமது தற்துணிவுடன், போதைப்பொருள் விற்பனையாளர்கள் மற்றும் பாவனையாளர்கள் மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டால், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இட்டப்றாக்குறை ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படும்.

உளநல வைத்திய நிபுணர்

போதைப்பொருளை அதிகமாகப் பயன்படுத்தும்போது, அவை இரசாயன பதார்த்தங்கள் உடம்பில் ஏற்படுத்தும் பாதிப்புகளை விட மேலதிகமான பாதிப்புகளை ஏற்படுத்தும். போதைப்பொருளை பயன்படுத்துவதால் உண்டாகும் நடத்தை கோலங்களினாலும் பல பிரச்சினைகள் ஏற்படலாம். மூளையினால் உடலில் ஏற்படும் மாற்றத்தைவிட, இந்தப் பதார்த்தம் தரும் நடத்தைக் கோலங்கள் பாதகமான விளைவுகளைத் தரலாம்.

இதனால், பயன்படுத்துபவரின் மனநிலை மற்றும் உளநிலையை பாதிக்கச் செய்கின்றது. முதலில் பயன்படுத்தும்போது அனுபவத்தைத் தரும் அல்லது உடனடியான சில விடயங்களை அனுபவிக்கத் தருமே தவிர வேறொன்றையும் அங்கு கொடுக்காது.

இவ்வாறான சில பாதிப்புகள் சில நாட்களின் பின்னர் உடலை அடிமைப் படுத்தும் நிலைக்கு கொண்டு வரும். போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் அதை விரும்பிச் செய்கின்றார்கள் என நாங்கள் நினைக்கின்றோம். ஒரு நிலையின் பின்னர் அவர்கள் கூட்டத்துக்குள் சென்ற மாதிரியான வாழ்க்கைக்குள் தள்ளப்பட்டு விடுகின்றார்கள். போதை என்ற கூட்டிற்குள் சென்றதன் பின்னர் அவர்களினால், வெளியில் வர முடியாது. அப்படியானவர்களை கூட்டிற்கு வெளியே கொண்டு வருவதற்கான உதவிகளைச் செய்ய வேண்டும்.

இயலாமை ஏற்பட்டு சமூகம் அவர்களை விதியோசமாகப் பார்க்க ஆரம்பித்ததன் பின்னர், எங்களால் சமூகத்தில் வாழ முடியாது என்ற நிலை ஏற்பட்டு, இதிலிருந்து வர முடியாதோன கவலைப் பட்டு, மனச்சோர்வு, பதகளிப்புக்கள் ஏற்பட்டு தற்கொலை செய்வதற்கான நிலைமைகள் ஏற்படுகின்றன. இது தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருப்பதால் இவ்வாறு ஏற்படுகின்றன.

சிலர் போதைக்குள் அடிமையாவதற்கான ஏதுநிலை காணப்படுகின்றது. பரம்பரைக் காரணிகள், வீட்டு வன்முறை, பிள்ளை வளர்ப்பு சரியாக இல்லாமை இவ்வாறான காரணங்கள் மூல காரணங்களாக அமைகின்றன.

போதைப்பொருளைப் பயன்படுத்தியவர், சிலவேளைகளில் நிறுத்திவிட்டு மீண்டும் ஆரம்பிக்கும்போது, அவை அதிகமாக உட்கொள்ளும் சந்தர்ப்பங்களில், மூச்சுத்திணறல் ஏற்பட்டு, சுவாச அடைப்புகள் ஏற்பட்டு பலர் இறந்துள்ளார்கள்.

இறப்பு ஏற்படுவதுடன், உறவில் சிக்கல்கள், விபத்துகள் என அனைத்தும் ஏற்படுதற்கான சந்தர்ப்பங்கள் உண்டு. இவ்வாறு பல வழிகளிலும் பாதிப்புகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

போதைப்பொருளுக்கு அடிமையான வர்கள் போதைப்பொருளை பயன்படுத்துவதை நிறுத்திய பின்னர் தாங்கமுடியாத வேதனைகளை அனுபவிப்பார்கள். அந்த வேதனையை தாங்க முடியாத நிலை ஏற்படும்போது, தடுப்பவர்களுக்கு எதிராகவும் செயற்படுவார்கள். சில குடும்பங்களில் பல பிரச்சினைகள் ஏற்படுவதற்கு இதுவும் காரணமாக அமைகின்றது. இப்பிரச்சினையை ஆரம்பத்தில் இருந்து கையாளும் விதத்தில் சரியான வழிமுறைகளுக்கு எதிராகவும் செயற்படுவார்கள். சில பதார்த்தங்களில் பாலியல் ரீதியான விந்தியாங்கள், பிரச்சினைகள் ஏற்படும். தொடர்ந்தும் பயன்படுத்தும்போது, பாலியல் ரீதியான நாட்டமின்மை, செயற்திறன்கள் இல்லாமல் போவதற்கான வாய்ப்புகள் உண்டு. ஆரம்பத்தில் சில அசுத்தடைகளை நீக்குவதான உணர்வுகள் ஏற்படும். அப்போது அவர்களுக்கு அது சரியானதாக தோன்றலாம். எல்லாவிதமான பாதிப்புக்களையும் போதைப்பொருள் தருகின்றது.

பெண்கள் பாவிக்கும்போது, கூழற்தைப்போது தடைப்படும். மலட்டுத் தன்மை அதிகரிக்கும். கூழற்தை பிறக்கும்போது, மாற்றங்கள் ஏற்படலாம். கூழற்தைக்கும் பிரச்சினைகள் ஏற்படலாம். அதிர்ஷ்டவசமாக மிகக் குறைந்த சதவீத பெண்கள் மாத்திரமே எமது நாட்டில் போதைப்பொருளைப் பயன்படுத்துகின்றனர். பெண்களைப் பொறுத்தவரையில், தவறான வழிகளில் போனவர்கள்தான் தற்போது அதிகமாகப் பயன்படுத்துகின்றனர்.

ஊசி மூலம் நீண்டகாலமாக பயன்படுத்துவதால், இருதயத்தில் தொற்று வரக்கூடிய தாகவும், மூளையில் கிருமி தாக்கி இருதயத்தில் உள்ள வால்வுகளைத் தாக்கி, கோமா நிலைக்கு கொண்டு செல்வதுடன், வால்வுகளை தாக்கிய பின்னர் பாரிய சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டி நிலைகள் ஏற்படலாம். போகப்பொருளை பாவித்த பின்னர் சாப்பாடு இல்லாமல் இருந்தால், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து, காசநோய் போன்ற பல நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உண்டு.

சிரிஞ்ச் (syringe) மற்றும் ஊசிகளைப் பல தேவைகளுக்குப் பயன்படுத்த வேண்டிய தேவையுள்ளதால், அவற்றை வைத்தியரின் சிபாரிசுடன் வழங்க வேண்டும் என்ற நிபந்தனைகளை வழங்க முடியாத நிலை சுகாதாரப் பிரிவினருக்கு உண்டு. பாரியளவில் கட்டுப்படுத்துவதற்கான சாத்தியங்கள் இல்லை. அதிகமாக கட்டுப் படுத்தினால், ஓர் ஊசியை எல்லோரும் பாவிப்பார்கள். அதனால் எச்.ஐ.வி. போன்ற ஆபத்தான தொற்றுகள் ஏற்படும்.

எதிர்காலத்தில் சுகாதாரத் திணைக்களத் தின் அனுமதியுடன் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் ஊடாக பாடசாலைகளில் விழிப்புணர்வு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இத்திட்டங் களை முன்னெடுக்க பாரியளவில் மனித வலுக்களும் தேவையாக உள்ளன.

பாடசாலை ரீதியாக எவ்வாறு பிள்ளைகளை வளர்ப்பது, அவர்களுக்கான வழிகாட்டல்கள் தொடர்பான பொது விடயங்கள் தொடர்பில் கதைக்க ஆரம்பித்தால், பெற்றோர்கள் மத்தியில் ஆதரவு கிடைக்குமென எதிர்பார்க்கின்றோம்.

வாராந்தம் நடைபெறும் சிகிச்சைக்கு 40 முதல் 50 வரையான நபர்கள் வருகின்றார்கள். மேலும், புதிதாக 10 நபர்களும் 13 வயது முதல் 17 வயதுவரை வருகின்றார்கள். சுகாதாரத் தரப்பினால் முன்னெடுக்கப்படும் வைத்தியசாலை மட்டமன்றி, பெற்றோர்களும் பாடசாலை நிர்வாகத்தினரும் உரிய வைத்தியர்களை முன்னெடுக்க வேண்டிய கட்டாயமுள்ளது.

குறுந்தகம் புனர்வாழ்வு நிலையம்

சாவகச்சேரி குறுந்தகம் புனர்வாழ்வு நிலையத்தில் பதரப்பட்டவர்கள் சிகிச்சைக்காக வருகின்றார்கள். சிகிச்சை பெற்றவர்களே மீண்டும் போதைப் பொருட்களைப் பயன்படுத்துகின்றார்கள். தொழில் பயிற்சிகளை அளித்து அவர்களை சமூகத்துடன் இணைத்தால் மாத்திரமே மீண்டும் பயன்படுத்தாமல் தடுக்க முடியும். அதற்குரிய ஏற்பாடுகளை அந்தந்த திணைக்களங்கள் நடைமுறைப்படுத்த வேண்டும். தொழில் பயிற்சிகளின்றி ஒதுக்கும் சந்தர்ப்பங்களில் அவர்கள் மீண்டும் அந்த நிலைக்குச் செல்கின்றார்கள்.

நாட்டில் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருட்களின் பாவனை அதிகரித்த நிலையில், அரசாங்கம் பல செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அந்தவகையில், நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான ஒளடதங்கள் சட்டமூலம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்படவுள்ளது.

அரசாங்கம் பல செயற்றிட்டங்களை முன்னெடுத்தாலும், நாட்டிற்குள் கொண்டு வரப்படும் போதைப்பொருட்களை கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அரசை மட்டும் குறை சொல்லிக் கொண்டு இருக்காது, எமது சமுதாயத்தை உயிர்க்கொல்லி போதைப் பொருட்களில் இருந்து காப்பாற்ற நாங்கள் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். எமது வீட்டில் நடக்காதவரை அது அடுத்தவர்கள் பிரச்சினை என்று எண்ணி, விலகிக்கொள்ளும் நாங்கள் நாளை எமது பிள்ளைகளும் உயிர்க்கொல்லி போதைக்குள் அடிமையாகக்கூடாது என அனைவரும் விழிப்புடன் செயற்பட்டு, போதைப்பொருள் விற்பனை மாஃபியாக்களுக்கு தண்டனை வழங்கும் வகையில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அனைவரும் ஆதரவை வழங்க வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. உயிர்க்கொல்லி போதையில் இருந்து எமது சமூகத்தைக் காக்க போதைப்பொருளற்ற சமூகத்தை உருவாக்க அனைவரும் ஒன்றிணைவோம்.

மலையகத்தில் இலவச மதிய உணவு

அனைத்து தோட்டங்களிலும் சாத்தியப்படுமா?

தங்கராஜா யுவராஜ்

சொல்லொணா துயருற்று வாழும் மலையக மக்கள் ஒருவேளை உணவைக் கூட நிம்மதியாக உண்ட காலம் மலையேறிப் போய்விட்டது. இன்றைய பொருளாதார நெருக்கடியில் அந்த மக்களின் வாழ்க்கை இன்னும் மோசம்தான். இவ்வாறான கால சூழ்நிலையில், ஒருவேளை உணவு அவர்களுக்கு இலவசமாகக் கிடைக்கிறது என்றால் அது பெரிய விடயம்தான்.

ஆம், மலையகத்தின் மஸ்கெலியா பிளாண்டேஷனை ஆர்.பி.கோ. குழுமம் வாங்கி நிர்வகித்து வருகிறது. இந்த மஸ்கெலியா பிளாண்டேஷனில் மொத்தமாக 18 தோட்டங்கள் காணப்படுகின்றன. இந்த தோட்டங்களில் தேயிலை மலைக்கு தொழிலுக்குச் செல்லும் பெண் தொழிலாளர்களுக்கு இந்த பகலுணவு வழங்கப்பட்டு வருகின்றது.

இது குறித்து மஸ்கெலியா பிரவுன்ஸ்விக் பிரிவின் தோட்ட முகாமையாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

"இந்த இலவச பகலுணவுத் திட்டமானது ஆர்.பி.கோ. குழுமத்தால் மஸ்கெலியா பிளாண்டேஷனுக்குட்பட்ட தோட்ட பெண் தொழிலாளர்களுக்கு வழங்கத் திட்டமிட்டு வழங்கிவைக்கப்படுகிறது. குறித்த மக்களிடம் காணப்படும் போஷாக்கின்மையே இதற்கு பிரதான காரணமாகும். மலையகத்தைப் பொறுத்தவரை மக்கள் சத்துள்ள உணவுகளை உட்கொள்வதில்லை. அதற்கான பொருளாதார வசதிகளும் அவர்களிடத்தில் இல்லை. இதன் காரணமாகவே இந்த திட்டத்தைக் கொண்டு வந்தோம். எமது மக்கள் ஒரு வேளையாவது சத்துள்ள உணவுகளை உண்ண முடியும்.

இந்த இலவச பகலுணவு திட்டத்தை பரிசோதிப்பதற்காக முதல் கட்டமாக ஒரு மாத காலத்திற்கு உணவு வழங்கப்பட்டு வருகின்றது. இது வெற்றியளிக்கும் பட்சத்தில் தொடர்ந்து இத்திட்டத்தை முன்னெடுத்து செல்ல திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்திட்டத்தில் ஒரு நாளைக்கு ஒருவருக்கு உணவு வழங்க குறைந்தது 225 ரூபாவரை செலவாகிறது. இந்த உணவுப் பொதியில் முட்டை அல்லது சோயாவுடன் இரண்டு கறிகள் சேர்த்து வழங்கி வருகிறோம். இதனால் மக்கள் ஒரு வேளை சத்துள்ள திருப்தியான உணவை உண்ணமுடியும்.

அதுமட்டுமல்லாது, காலையில் அவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கவும் ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இந்தப் பகலுணவு திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் இவர்களுக்கு காலை உணவாக இந்த இலைக்கஞ்சியையும் வழங்க முடியும். இதனால் எமது தோட்டப்புற மக்கள் ஒருவேளை உணவையாவது நிம்மதியாக உட்கொள்ள முடியும் என்பதே எமது ஆசை" என்று தெரிவித்தார்.

இத்திட்டம் குறித்து பிரவுன்ஸ்விக் பிரிவின் லெச்சுமித் தோட்டதைச் சேர்ந்த துரைராஜ் அசோதியம்மா (வயது 50) என்ற பெண் தொழிலாளி குறிப்பிடுகையில்,

"இப்படி ஒரு விசியத்த இதுவரைக்கும் யாரும் எங்களுக்கு செஞ்சது இல்ல. இப்படி எங்களுக்கு ஒரு நேர சாப்பாடு தரும்போது எங்கள மாதிரி தாய்மார் ரொம்ப சந்தோசப்படுறோம். இதுனால நாங்க காலைல வெள்ளனா எழும்பி மலைக்கு சாப்பாடு சமைச்சி கொண்டுபோற கஷ்டம் இனி இல்ல. இப்போ இருக்குற பொருளாதார கஷ்டத்துல இப்படி ஒரு நேர சாப்பாடு தந்தா எங்களுக்கு அதவிட சந்தோசம் வேற எதும் இல்ல. அதுமட்டு இல்லாம இப்போ எங்களுக்கு இப்படி சாப்பாடு தாரது மாதிரி மத்த தோட்டங்கள்ல உள்ள எல்லாருக்கும் இப்படி சாப்பாடு குடுத்தா அவங்களும் எங்களப் போல நிம்மதியா சாப்புடுவாங்க" என்றார்.

இது குறித்து க.தங்கவேலு (வயது 42) என்ற தொழிலாளர் குறிப்பிடுகையில்,

"நான்தான் எங்க ஊர்ல சமைச்சி கொடுக்குறே. இது ஒரு ரொம்ப நல்ல திட்டமா தா நா பாக்குறேன். எங்கள போல மழைலயும், வெயில்லயும் கஷ்டப்படுறவங்களுக்கு இலவசமா உணவு கொடுக்குறது ரொம்பப் பெரிய விசியம். இத எல்லோராலயும் செய்ய முடியாது. இந்த உணவு திட்டத்த கொண்டுவந்த எல்லாருக்கும் எங்கள் மக்கள் சார்பா நன்றி தெரிவிச்சிக்கிறேன்" என்றார்.

200 வருடங்களைக் கடந்தும் இருட்டு அறைகளுக்குள் வாழ்ந்துகொண்டிருக்கும் எமது மலையக மக்களுக்கு இவ்வாறானதொரு செயற்பாடு அவர்களிடத்தில் ஓர் உந்து சக்தியை ஏற்படுத்தும். இந்தப் பொருளாதார நெருக்கடியில் வாழும் அந்த மக்களில் பெரும்பாலானோர் தற்போது வெளிநாடுகளுக்கும் நகர்ப்புறங்களுக்கும் வேலை தேடிச் செல்லும் துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு தோட்டங்களில் காணப்படும் வருமானக் குறைவே பிரதான காரணியாக காணப்படுகின்றது. ஆயிரம் ரூபா நாட்சம்பளம் வழங்கக் கோரி அவர்கள் செய்யாத போராட்டங்களுமில்லை. ஆனால், இறுதியில் அவர்களுக்கு ஏமாற்றம் மட்டுமே மிஞ்சியது. இவ்வாறானதொரு சூழ்நிலையில், அவர்களுக்கு இந்த இலவச உணவுத்திட்டம் பெரிதும் உதவியாக இருக்கும்.

இவர்களின் இந்த செயற்பாடு இத்தோடு நின்றுவிடாது எதிர்காலத்தில் இதுபோல் பல திட்டங்களை செய்ய வேண்டும் என்பதே அந்த மக்களின் மிகப் பெரிய வேண்டுகோளாக உள்ளது.

காக்கியின் கசந்த பக்கங்கள்



க.கமலநாதன்

இலங்கை பொலிஸ் திணைக்களம் 150 வருடங்களுக்கும் மேலாக நிலைத்திருந்து சட்டம் மற்றும் ஒழுங்கைப் பாதுகாக்கும் பணிகளை முன்னெடுத்து வருகின்ற ஓர் அரச நிறுவனமாகும். இருப்பினும், அதன் மீதான நம் நாட்டு மக்களின் நம்பிக்கை இன்றளவிலும் சிறியதாகவே காணப்படுகின்றமை கவலைக்குரியதாகும்.

நாட்டிலுள்ள எந்தவொரு பொலிஸ் நிலையத்திற்கு சென்றாலும் அங்கு கடமையிலிருக்கும் பொலிஸார் அப்பாவி மக்கள் மீது எரிந்து விழுவதும் வெறுப்புணர்வுடன் நடத்துவதுமே அதற்கான காரணம் எனலாம். இந்த அனுபவம் இன வேறுபாடின்றி நம் நாட்டு மக்கள் சகலருக்கும் உண்டு.

உதாரணமாக நம் வீட்டின் முன்னால் ஒரு பிரச்சினை என பொலிஸாருக்கு அழைப்பு ஏற்படுத்திச் சொன்னால் அந்த பிரச்சினை முடிந்த பின்னர் அல்லது அதற்கு மறுதினம் வருவதுதான் இலங்கை பொலிஸாரின் வழமையாகும்.

இதேவேளை காக்கிசட்டை மீதான பொலிஸ் திணைக்களத்தில் பல அதிகாரிகளின் செயற்பாடுகள் பலருக்கும் முன்னுதாரணமான நிலையில் காணப்பட்டாலும், பல சந்தர்ப்பங்களில் பொதுமக்களின் வெறுப்புணர்வைத் தூண்டும் வகையிலேயே பொலிஸாரின் செயற்பாடுகள் அமைந்திருக்கும் என்பதில் பலருக்கும் ஐயம் இருக்காது. இந்த வெறுப்புகளின் ஒருவித வெளிப்பாட்டைத்தான் கெப்பித்திகொல்லாவை பொலிஸ் அதிகாரி பொதுமக்களின் தாக்குதலுக்கு இலக்காகி உயிர்நீத்த சம்பவம் வெளிப்படுத்துகிறது.

கெப்பித்திகொல்லாவ பிரதேசவாசியான பி.குணசிங்க என்ற விவசாயி யானைத் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்திருந்த சம்பவத்தை மையப்படுத்தி கடந்த 31ஆம் திகதி இரவு வேளையில் கெப்பித்திக்கொல்லாவ – ரம்பகெப்புவெவ பகுதியில் இடம்பெற்ற அமைதியின்மையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நோக்கத்தில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியுடன் சென்ற அறுவர் அடங்கிய குழுவில் ஒருவராக சென்ற வாரியபொல பகுதியை சேர்ந்த 54 வயதான பொலிஸ் சார்ஜன் (12601) அகம்பொடிகே சுனில் என்பவர் பிரதேச மக்களின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்திருந்தார்.

குறித்த பொலிஸ் சார்ஜன் தாக்குதலுக்கு இலக்காகி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த போதும் அங்கு கூடியிருந்த பொதுமக்கள் சென்று அவரை காப்பாற்ற முன்வரவில்லை என்பது மனிதநேயத்தை கேள்விக்குறியாக்கும் விடயம் என்பதை மறுக்க முடியாது. எனினும், தமது பிரச்சினைகளை நேரில் வந்து பார்க்குமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்த போதும் பொலிஸார் நீண்ட நாட்களாக மக்கள் பிரச்சினைக்கு செவிசாய்க்காமல் அலட்சியப்போக்கில் நடந்துகொண்டிருந்தமைக்கு கோபத்தை வெளிப்படுத்தும் வகையில் குறித்த பொலிஸ் சார்ஜன் துடிதுடித்தாலும், அவர் அருகில் ஒருவரும் செல்லக்கூடாது என எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் முன்னின்று செயற்பட்ட சில பிரதேசவாசிகள் சக மக்களை தடுத்தமையையும் இந்த ஆர்ப்பாட்டத்தின்போது பதிவுசெய்யப்பட்ட காணொளிகள் ஊடாக அறிய முடிகிறது.

குறிப்பாக அங்கிருந்த ஒருவர் நமக்கு பிரச்சினை என்னும்போது வராதவர்களை நாம் ஏன் காப்பாற்ற வேண்டும் என்று ஆவேசமாகப் பேசிய காணொளிகளும் பதிவாகியிருந்தன. இவ்வாறான செயற்பாடுகள் மனிதாபிமானமற்றவை என்றாலும், பொதுமக்கள் பொலிஸார் மீது நீண்ட நாட்களாகக் கொண்டிருந்த கோபத்தின் வெளிப்பாடாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றிருப்பதாகத் தெரிகிறது.

மறுமுனையில் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மத்தியில் இரு பிள்ளைகளின் தந்தையான மேற்படி பொலிஸாரை மக்கள் காப்பாற்றியிருந்தால் அது உலகிற்கே முன்னுதாரணமான மனிதநேயக் கதையாக மாறியிருக்கும் என்பதையும் மறுக்கக் கூடாது. இவ்வாறிருக்க, பொலிஸ் நிலையம் என்பது நிதமும் பிரச்சினைகள் சூழ்ந்து கிடக்கும் ஒரு சூழல் என்பதால் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளுக்கு மத்தியில் பல்வேறு அநாவசியமான பிரச்சினைகளை தீர்க்க வேண்டிய கட்டாயம் ஏற்படுவதாலும் பொலிஸார் எந்நேரமும் வெறுப்புணர்வுடன் இருக்க நேரிடுகிறது. அதனால் பல பிரச்சினைகள் இன்று பொலிஸாரால் தீர்க்கப்படாத நிலையிலேயே காணப்படுகிறது. இதனால் இந்த பிரச்சினைகளை நியாயப்படுத்த முனைந்தாலும் பொலிஸ் நிலையங்களில் நாம் கண்ட சில மோசமான அனுபவங்கள் அதற்கு இடமளிப்பதில்லை.

குறிப்பாக இரண்டு வருடங்களுக்கு முன்னர் நான் ஒரு தேசிய பத்திரிகையின் ஊடகவியலாளராகப் பணியாற்றினேன். அப்போது ஒருநாள் மாலை நேரத்தில் பணிகளை நிறைவு செய்துவிட்டு தங்குமிடத்திற்கு செல்வதற்காக கொழும்பு அநகாரிக தர்மபால வீதியின் பஸ் தரிப்பிடம் ஒன்றில் ஏறி கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக வந்திறங்கிய சிறிது நேரத்தில் எனது பேர்ஸ் திருட்டு போய்விட்டது.

அப்போது சட்டைப்பையில் வெறும் 20 ரூபா மட்டுமே இருந்ததால், கோட்டை ரயில் நிலையம் முன்பாக இருந்து கொச்சிக்கடை - கடற்கரை பொலிஸ் நிலையம் வரையில் நடந்துசென்று முறைப்பாடு செய்தேன். நாம் பொலிஸ் நிலையத்திற்கு செல்லும் முன்பாக இரண்டு வங்கிக் கிளைகளில் எனது ஏ.டி.எம். அட்டையிலிருந்து பணம் பெறப்பட்டிருந்து.

அப்போது, அந்த இரண்டு வங்கிகளினதும் ஏ.டி.எம். கூடங்களில் உள்ள சி.சி.டி.வி. பதிவுகளை பரீட்சித்து திருடன் யார் என்று இலகுவாக அறியலாம் அல்லவா? அப்போது இந்த நெருக்கடி இன்னொருவருக்கு நேராது என பொலிஸாரிடம் முன்வைத்த கோரிக்கையை அப்போதே நிராகரித்துவிட்டனர்.

பின்னர் என்னிடம் வாக்குமூலம் பெற்றுக்கொண்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் உங்களிடம் எவ்வளவு பணம் இருக்கிறது என வினவினார். இருபது ரூபா மட்டுமே இருக்கிறது என நான் சொன்னதும் அதைக்கொண்டு போய் பொலிஸ் அறிக்கையின் பிரதி ஒன்றை எடுத்து வருமாறு கூறினார். அதனைப் பெற்றுக்கொண்ட பின்னர் அவசியமான சிந்தனைகளை விடுத்து தங்குமிடத்திற்கு செல்லுமாறு அறிவுரைத்த பொலிஸ் அதிகாரியின் பேச்சு நமது பிரச்சினைகளை தீர்ப்பதில் அவர்களுக்கு உள்ள அலட்சியப்போக்கை எனக்கு உணர்த்தியது. அதனால் பொலிஸார் மக்களிடம் வெறுப்புணர்வுடன் நடந்துகொள்வதை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது என்றே கூறுவேன்.

பொலிஸ் நிலையம் என்பது மக்கள் பிரச்சினைகளை கொட்டித் தீர்த்து தமக்கான நீதியை வேண்டி நிற்கும் இடம் என்பதாலும் பொலிஸ் சேவை என்பது வெறுமனே ஒரு தொழில் அல்ல, கடமையும் பொறுப்புகளும் நிறைந்த ஒரு சமூக சேவை என்பதை கற்றுக்கொண்டே பொலிஸார் சேவையில் இணைவதாலும் பொதுமக்கள் பணத்தில் சம்பளம் பெற்றுக் கொள்வதாலும் மக்கள் சேவைக்கு முன்னுரிமையளித்து செயற்பட வேண்டும் என்ற எண்ணம் பொலிஸாரிடத்தில் அதிகமாகும் பட்சத்தில் மாத்திரமே இவ்வாறான சிக்கல்களை தவிர்க்கலாம்.

களம் (கொழுந்து மடுவம்)

கங்காணி :
"பொம்ப
ளைங்க சிரிச்சா போச்சி
போயிலைய விரிச்சா
போச்சி"
என்னாடி அங்க
ஒரே இழிப்பு?
இப்புடியே இழிச்சி
இழிச்சி
எல்லாதயு
ஏமாத்திருவிங்கடி...

கலையரசி : ஆமா ஆமா, நாங்கதா எல்லாரையு ஏமாத்தி கோட்ட கட்டிவச்சிருக்கோ. ஏ யா சும்மா?
திருட்டு பயலுங்களா இப்போ ஒன்னா சேந்து திருட ஆரம்பிச்சிடானுங்க. கேட்டா அண்ணே தம்பி சங்கமமாமே?
இனி என்னென்ன அக்கிரமுங்களோ? ஆதலா நமகெதுக்கு,

கங்காணி : இப்போதான்டி நம்மளுக்கெல்லா புதுவருசோ. இனிமே பாரு. அண்ணன் தம்பியெல்லா ஒரு கலக்கு கலக்கப்போராங்க. நீ அன்னைக்கி பொலம்புன தீவாளி அட்டுவான்சு எல்லா இனி கைமேல வருன்டி,

கலையரசி : சரியா போச்சி. எனக்கு வயித்த கலக்குதுங்கையா. கைமேல வருமோ காலவாரி விடுமோ கங்கனோ கட்டாம ராத்தைய சரியா போடுங்கையா,

கங்காணி : ராத்த போட்ரதுக்கு அப்புடியே பொள பொளனு கொழுந்த எடுத்து குமிக்கிறீங்கதானே? ஏன்டி சும்மா?

கலையரசி : ஏ யா நாங்களா மெசின்தானே.. மனுசங்களாவே பாக்குரது இல்லதானே.. சொல்லுவிங்கையா சொல்லுவிங்க. முட்டவுட்ற கோழிக்குதா அந்த வலி தெரியுமா ஐயா...

கங்காணி : ஆமா ஆமா, இல்லாடி மட்டு? ஒனக்கு கூட்டணி சேருரது கட்சி விசயமெல்லா நல்லா வாய்கிழிய கதைக்க தெரியு. வேல செய்யசொன்னா மட்டு ஆயிரம் கத சொல்லுவடி. மொதல்ல அந்த வாய கட்டனு.

கலையரசி : கட்டுவிங்க கட்டுவிங்க... உங்க எம்.பி. மார்ங்க கட்டுன மாளிகையெல்லா அப்புடியே புயலே வந்தாலு தாங்கி நிக்குகு. எங்க உள்ள இஞ்னியர் கட்டுனாரோ தெரியல, அடிக்கிற மழையில வாங்கி இடிஞ்சி தகரோ புடுங்கி கை புள்ளைங்கள வச்சிகிட்டு பட்ற பாடு சொல்லி வேல இல்லைங்கையா...

கங்காணி : அதான்டி ஒன்னு சொல்லுவாங்க. இருகுறதுக்கு எடோ குடுத்தா படுகுறதுக்கு பாய் கேப்பானுங்களா. அதான்டி உங்க கத. இந்தகாலத்துல உங்களுக்கெல்லா காணி வாங்கி வீடு கட்டி தண்ணிலைன் எடுத்து குடுத்தா இப்டிதா சொல்லுவிங்க. உனக்கெல்லா குதிர பட்டிதான்டி சரி.

கலையரசி: பூவெள்ள மங்கையா பொன்கொடியே போன எடமெல்லா ராசாவுக்கு செருப்படியா, ஏயா கட்டுற வீட ஒழுங்கா கட்ட சேத்தி இல்ல, அதுலயு ஆள் பாத்துதா எல்லா பண்ணுறீங்க?
மீரிய பெத்த மண்னோட மண்ணா போயி எட்டு வருசமாச்சி. அங்கயு இன்னு ஒழுங்கா ஒன்னுமே நடக்கல.
ஆனா என்னமோ துப்பாக்கியா இருந்து மலையகத்தையே மாத்தப் போறாங்களாமே?

கங்காணி : ஏன்டி கலையரசி... வாய் பெருத்துப் போச்சி உங்களுக்கெல்லா. வேற எது இல்ல. மத்த எஸ்டேட்ல மாதிரி பேர வெட்டி வேலைய நிப்பாட்டுனா சரி, திங்கிறதுக்கு படுக்குறதுக்கு சிங்கி அடிகையில தெரியு.

கலையரசி : இப்பமட்டு என்னாங்கையா வாழுது? நா ஏதோ கோவத்துல சொல்லிட்டேங்கையா. அதுக்காக வேலையல்லா நிப்பாட்டிராதிங்க. ஏதோ வயிதெரிச்சல்ல சொல்லிட்டேங்கையா.

கங்காணி : ஆ... அந்த பயம் இருகுதானே? புள்ள சும்மா கண்டதயு பேசாம பொத்திகிட்டு வேலைய மட்டுபாரு. நமக்காகதா எல்லா யூனியன் எம்.பியு கஸ்டபட்ராங்க. நீ நெனச்சிகிட்டியா எல்லா லேசுனு ?

கலையரசி : ஐயா... யூனியன்னு சொன்னதுதா நெனவு வருது. ஆமா இப்ப எல்லா சாமியு ஒன்னு சேந்தா எஸ்டேட்ல உள்ள தலவர்மாரு ஒன்னா சேந்துருவாங்களா?

கங்காணி : அது எப்புடி புள்ள ஒன்னு சேர முடியு? ஆதலா தனித் தனியா இருந்தா தானே வேல நடக்கு. எங்காளுங்க வேர அவுங்காளுங்கவேர ஒன்னாகிற ஏலுமா? ஒன்னாகதா விட்ருவோமா?

கலையரசி : "கூட வந்த பெருச்சாளி கூடைய துக்கிட்டு ஆடிச்சா பாக்கவந்த பெருச்சாளி செருப்ப தூக்கிட்டு ஆடுச்சா" அதானே பாத்தே எங்கடா இந்த சாதி கத வரலனு நாய் வால நிமித்த ஏலுமாயா? கோயில் கமுட்டில இருந்து மைய வீடுவரைக்கு எது இருக்கோ இது இருக்குமே.

கங்காணி : ஏன்டி.. அதலா இல்லாம நல்லது கெட்டது நடக்கையில் கட்டாயம் பாக்கனுதானே கண்டவனுகலெளாத்தையு வீட்டுக்குள்ள படுக்கவைக்க ஏலுமா? எவே எவன எந்த இடத்துல இருக்கனுமோ அங்கதா வைச்சிருக்கோ. உங்க வீட்டுல மட்டு என்னா உங்க தலவருக்கு நல்லா ஜால்ரா போடுவிங்களே.. நீ மட்டு என்னா கமுனிசம் பேசுறியோ?

கலையரசி : கம்முனிசம்லா பேசலங்கையா. நா எல்ல வீட்லயு தேத்தனி குடிப்பே. எல்லாத்தோடயு சேந்து சாப்புடுவேங்கையா. எல்லா ரெத்தமு ஒரு கலர்தானே? இதுள என்னங்கையா எங்காளுங்க உங்காளுங்க?

கங்காணி : ஆமா ஆமா. நீ வெவரோ கெட்டவ. ச்சீ வெக்கமா இல்ல. சுரி சரி ஓ கதய நிப்பாட்டு. போய் தின்னுட்டு அந்தி நெருவக்கி சரி கொளுந்த ஒழுங்கா எடு. ராத்தையே பத்தாது. கத மட்டு அளப்ப நல்லா.

கலையரசி : வாங்கடி நாம முடிக்கிட்டே இருப்போ.

ம.அகிலேஸ்

ஆளுமைகளின் நாற்றுமேடை நூல்களே!

ஆயிரக் கணக்கில்
அறிவுச் செல்வங்களை
பெற்றுப் போட்ட
முத்துப்பேட்டை

உனை
நேசிக்கும்
வாசிப்பாளனையெல்லாம்
வரலாற்றாசிரியனாக்கும்
பேராசிரியன் நீ

ஆபிரகாம் லிங்கனை
அமெரிக்காவின்
அதிபராய்
அண்ணாந்து பார்க்க
செய்ததும்

இந்திய
இதிகாசத்தில்
அனுஞானியாக
அப்துல் கலாமுக்கு
இருக்கை அமைத்ததும்

நெல்சன் மண்டேலா
நெருப்புகளுக்குள்
நீந்திய நாட்களில்
நிம்மதி தொட்டில் கட்டியதும்
நூல்கள் தானே

ஆயுதங்களை மிஞ்சிய
ஆயுதமென்று
மார்ட்டின் லூதர் கிங்
பூக்கள் தூவியதும்

புத்தகங்களுக்குத்தானே

பன்முகங்கள் கொண்ட
நீங்கள்
பூட்டப்படாத
அறிவுப்பெட்டகம்

புரட்டப் புரட்ட
புதுமைகள் பிறக்கும்
ஒரு பூவுலகம்

பூச்சி விதைகளையும்
புஷ்பங்களாய்
பூக்கச் செய்யும் நாற்றுமேடை

இணையங்களின்

ஆக்கிரமிப்புக்குள்ளும்
நூல்களின்
இருக்கைகள்
இன்னும்
இமயம் தான்

-கவிக்கோன்-
இல்மி அஹமட் லெப்பை

தூறல்கள்

மழைக்காலம்

மேகங்கள் கறுத்திட
கார்காலம் வந்ததே
தாகங்கள் தீர்ந்திட
மழையும் தந்ததே
போகங்கள் விளைந்திட
புண்ணியம் புரிந்ததே
உழவர் மனதிலே
உத்வேகம் பிறந்ததே
காகிதக் கப்பல் விடும்
குழந்தை
கவிஞனுக்கும்
பாடுபொருளாய்
மழைமடந்தை
வெக்கை தணிந்து தட்பம்
எழுந்தது
வேனிற்காலம் மறைந்து

வெள்ளம் நிறைந்தது
காற்றின் சுழற்சியில்
மேகமும் வார்த்ததே
சாரல் மழையோ மண்ணில்
பொழிந்ததே
பயிர்களும் நெகிழ்ந்து
பதமாக விளைந்ததே
தூறலில் நனைய
துன்பங்கள் நீங்குதே
வானவில்லின் அழகில்
மனது மயங்குதே
வாசலில் மழை தோரணம்
ஆகுதே

-Dr.ஜலீலா முஸம்மில்-
ஏறாவூர்

காலம் மாறிப் போச்சு

காகிதத்தில் காதல் சொன்ன
காலம் இப்ப இல்ல

கலியுக காலம் இது
கணினி மயமானதாலே

பூக்களும் வேலியில
பூப்பதுவும் இல்ல

வண்டுகளும் காதல் சொல்ல
வேலிப்பக்கம் போறதுவும்
இல்ல

வீட்டுக்குள்ள வச்ச செடி
மொட்டமாடியில பூக்குது

கைபேசி சாதனத்தால்
காற்றலையில் தவழ்ந்து வந்து

காதல் தூதை சுவாசத்தில
சேர்க்குது
தூதுவிட்ட வண்டின்
முகம்
பூக்களுக்கும் தெரியல
பொழுது போக்காய்
பூக்களைத்தான்
நாசம் செய்ய பார்க்குது

வந்த தூதில் தூசு தும்பு
பிரித்தறிய வயசும் இன்னும்
ஆகல

பதினெட்டை கடக்கும் முன்னே
படமெடுத்து ஆடுது
பொறுமை இல்லாப்
பூக்கள்
நாசமாகிப் போகுது

-மருதூர் மௌஜுன்-
மருதமுனை

முதுமையின் அழகு!

நரைத்த முடிகளும்
விழுந்த பற்களுமே
முதுமையை
வரவேற்கும்

மூன்றாம் காலாய்
கை தாங்கிய தடியும்
அழகு பெறும்

கண்ணியம்
தேடிவரும்
இளமை ஓடிவிடும்

பாசங்கள் பெருகும்
நேசங்கள் தொடரும்

பொக்கை வாயும்
கன்னக் குழியும்

உரு மாற்றம்
பேரழகு

கேள்விக்கான
பதில்
புன்னகையாவதால்
இன்னுமழகு

பேரக்
குழந்தைகளுக்கு
கதை சொல்லுமழகு
புத்தி சொல்லி
தலை தடவுவதுமழகு

வெற்றிலை பாக்கை
அரைத்து
சுண்ணாம்பு தடவி
மெல்லுவதுமழகு

கணவன் மனைவி
பழைய
ஞாபகங்களை
மீட்டுவதுமழகு

உழைத்து தேய்ந்த
உடலழகு
சாதித்து முடித்த
சேவை பேரழகு

ஓய்வை தந்த
முதுமையழகு
ஓய்வூதியம் தந்த
வேலையழகு

நிழலில் நேரம்
பார்க்கும்
திறமையழகு

இறை பக்தியில்
திளைப்பதுமழகு
பொது அறிவு
கேட்டு
திறமை வளர்ப்பதழகு
படித்துக் கொடுத்து
கேள்வி
கேட்பதழகு

முதுமையின்
செயற்பாடு
அனைத்துமே அழகு
முதுமையை
மதித்து நடத்தலே
நமக்கழகு..!

-எம்.ரி.எம்.அன்ஸார்-
ஏரூர்

தமிழன் தர்பார்

இது எங்க ஏரியா

சமூகத்தின் சரித்திரப் பதிவுகள்...



தன் மகள் திருமணத்திற்கு பெரியாருக்கு அழைப்பு கொடுத்திருந்தார்

பொன்னியின் செல்வன் சரித்திர நாவலாசிரியர் கல்கி.

முகூர்த்த நேரத்திற்கு பெரியார் வரவில்லை.

அது கல்கியை வருத்தம் கொள்ளச் செய்தது.

அன்று மாலை 5 மணிக்கு கல்கி வீட்டின் முன் பெரியாரின் வேன் வந்து நின்றது.

வந்த பெரியாரை கைபிடித்து அழைத்துச் சென்றார் கல்கி.

"காலையில் கல்யாணத்திற்கு ஐயா வரலையே... உடம்புக்கு சரியில்லையோ..?"

"அதெல்லாம் ஒன்னுமில்லை நல்லாத்தான் இருந்தேன்.

"அப்புறம் ஏன் வரலை?"

"வேறொண்ணுமில்லை.. காலையில வந்தேன்னு வையுங்க.

என்னயக் கூட்டிட்டுப்போயி முன்னால உட்கார வெச்சிடுவீங்க. நான் கறுப்புச் சட்டையோட இருக்கறதப் பார்த்து உங்க வீட்டுப் பொண்ணுக முகம் சுளிக்கலாம். கல்யாணம் நடக்கும்போது கறுப்புச் சட்டை போட்டு வந்திருக்கறேன்னு வருத்தப்படலாம். அதான் இப்ப வந்திருக்கேன்"

என்று பெரியார் சொல்ல நெகிழ்ந்து போனார் கல்கி.

புதுமணத் தம்பதிகளுக்கு விபூதி, குங்குமம் வைத்து வாழ்த்த, பெரியாரை கல்கி கேட்டுக்கொண்டார்.

பெரியார் மறுக்காமல் செய்தார்.

இதை கல்கி போட்டோகிராபர் படமாக்கிவிட்டார்.

இந்தப் படத்தை கல்கி இதழின் அட்டைப்படத்தில் போட கல்கி இதழின் ஆசிரியர், கல்கியிடம் அனுமதி கேட்டார்.

கல்கி மறுத்துவிட்டார்.

தம் விருப்பத்தை நிறைவேற்றிய பெரியாரை விமர்சனத்திற்கு ஆளாக்க கல்கி விரும்பவில்லை

எதிரெதிர் கொள்கை.

விருப்பத்தை மதிக்கும் பண்பு.

நட்பில் விட்டுக்கொடுக்காமை.

இவர்கள்தான் சமூகத்தின் சரித்திரப் பதிவுகள்.

அவ்வளவுதாங்க வாழ்க்கை!

ஓர் ஊரில் ஒரு செல்வந்தர் இருந்தார்.

ஒரு நாள் ஏதோ வேலையாக நடந்து சென்றார்.

அப்போது, செருப்பு பிஞ்சுபோச்சு..

அருகே இருந்த வீட்டுக்குச் சென்றார்.

அந்த வீட்டுக்காரரை அழைத்து...

"ஐயா... இந்தப் பக்கம் வரும்போது என் செருப்பு பிஞ்சுபோச்சு.

புதுசெருப்பு வேற... அதனால இதை இப்படியே தூக்கியெறிய மனசு வரல. இங்க உங்க வீட்டு வாசல் ஓரமா வெச்சிட்டுப்போறேன்.

காலையில என் வீட்டு வேலைக்காரனை அனுப்பி எடுத்துக்கிறேன். அதற்குத் தாங்கள் அனுமதி தரவேண்டும்" என்றார்.

அதற்கு அந்த வீட்டுக்காரர்

அந்த செல்வந்தரைப் பார்த்து...

"ஐயா... நீங்க எவ்வளவு பெரிய செல்வந்தர்..! எங்க வீட்டு வாசலில் உங்க செருப்பு கிடப்பது கூட எங்களுக்கு கௌரவம்தான். நீங்க தாராளமாக வெச்சிட்டுப்போங்க" என்று சொன்னார்.

அதற்குப் பிறகு அவர் தன்னுடைய வேலைக்காரனை அனுப்பி செருப்பை பெற்றுக்கொண்டார்.

சில ஆண்டுகள் கடந்தன...

ஒருநாள் அந்த செல்வந்தரே இறந்து போனார்.

அவரின் இறுதி ஊர்வலம் செருப்பு வைத்தாரே, அந்த வீட்டு வழியே வந்தது.

அப்போது நல்ல மழை.

பிணத்தைத் தூக்கி வந்தவர்கள் அந்த வீட்டுக்காரரிடம் சென்று...

"ஐயா... சரியான மழையாக இருக்கிறது. தூக்கிச் செல்ல முடியவில்லை.

அந்த உடலை இங்கு மழை நிற்கும் வரை வைத்துவிட்டு பிறகு எடுத்துக்கொள்ள அனுமதி தருவீர்களா?" என்று கேட்டனர்.

அந்த வீட்டுக்காரர் அவர்களிடம் சொன்னார்...

"ஏன்பா... யார் வீட்டுப் பிணத்தை யார் வீட்டு வாசல்ல வைக்கப் பார்க்கிறீங்க? மரியாதையா எடுத்திட்டுப் போயிடுங்க" என்று.

அவ்வளவுதாங்க வாழ்க்கை...

ஒரு செருப்புக்குக் கிடைக்குற மரியாதை கூட நம்ம செத்த பின்னாடி நம்ம உடலுக்கு கிடைக்காது.

வாழ்கின்ற கொஞ்ச நாள் எல்லார் கிட்டயும் முடிஞ்ச அளவுக்கு அன்பா வாழ்ந்துட்டு போவோம்...

உயிர் உடம்புக்குள்ள இருக்கும் வரைதாங்க மனிதனுக்கு மரியாதை.

"வரதட்சணை வாங்குவது தப்புன்னு முன்னாடி சொன்னீங்க. இப்ப சரின்னு சொல்றீங்களே..! ஏன்..?"

"அப்ப என் பொண்ணுக்குக் கல்யாணம். இப்ப என் பையனுக்குக் கல்யாணம்..!"

அடப்பாவமே..!

ஒரு கணவன் மனைவிக்குள் ஏற்பட்ட சிறிய சச்சரவு, பெரிதாகி கடந்த மூன்று நாட்களாக இருவருக்கும் பேச்சு வார்த்தையில்லை. இது நீடிக்கவே மனைவி அவள் கணவன் எதிரில் வந்து,

நான் இப்போது 10 வரை எண்ணுவேன்..! அதற்குள் நீங்கள் பேசவில்லை என்றால், நான் எனது அம்மா வீட்டுக்குப் போய்விடுவேன். அவனுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. அவன் அதைத்தான் எதிர்பார்த்திருந்தான்.

அவள் எண்ணத் தொடங்கினாள்.

மனைவி - 1... 2... 3... கணவன் - (அமைதி)

மனைவி - 4... 5... கணவன் - (மௌனம்)

மனைவி - 6... 7... கணவன் - (அவன் மனதில் மகிழ்ச்சி... ஆனாலும் அமைதி) உச்சக்கட்டம் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

மனைவி - 8... 9... கணவன் - (மனதில் எல்லையற்ற மகிழ்ச்சி.)

மனைவி...(அமைதி - பயங்கர மௌனம்)

பிறகு கணவனால் மகிழ்ச்சியைத் தாங்க முடியவில்லை. உணர்ச்சிவசப்பட்டு கத்தினான்

"எண்ணு... எண்ணு... ஏன் மேற்கொண்டு எண்ணாமல் நிறுத்திவிட்டாய்?"

மனைவி - (மிகவும் அமைதியாக) "நல்ல வேளை..! நீங்க பேசிட்டீங்க..! இல்லைனா நான் போயிருப்பேன்..!"

கணவன் - இதுக்கெல்லாம் பரிகாரமே கெடையாதா..?

தன்னம்பிக்கைக் கதை

ஒரு கம்ப்யூட்டர் நிறுவனத்தில் தரை துடைக்கும் வேலைக்கு ஒருவன் விண்ணப்பித்திருந்தான். அவனிடம் தரையைத் துடைத்து காட்டச் சொன்னார்கள். நன்றாகத் துடைத்தான். அடுத்து சின்னதாக ஒரு இன்டர்வியூ இருந்தது. கடைசியில் அவனிடம் தகவல் சொல்வதற்காக ஈமெயில் முகவரி கேட்டார்கள்.

"ஈ மெயிலா? எனக்கு ஈமெயில் இன்டர்நெட் எல்லாம் தெரியாதே..." என்றான் துடைக்க வந்தவன். கம்ப்யூட்டர் நிறுவனத்தில் வேலை பார்க்க விரும்புகிறவனுக்கு ஈமெயில் முகவரி இல்லையா? ச்சே..!" என்று அவனை அனுப்பிவிட்டார்கள். வேலையில்லை என்றதும் அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கையில் 10 ரூபா இருந்தது. அதைக் கொண்டு மார்க்கெட்டில் வெங்காயம் வாங்கினான். பக்கத்துக் குடியிருப்புப் பகுதியில் கூவிக்கூவி விற்றான். 10 ரூபா இலாபம் கிடைத்தது. மீண்டும் வெங்காயம், மீண்டும் விற்பனை. இப்படியே கொஞ்சம் கொஞ்சமாக விற்று சில வருடங்களில், பெரிய வெங்காய வியாபாரி ஆகிவிட்டான். இந்தச் சூழ்நிலையில் ஒரு வங்கிக் கணக்குத் திறப்பு சம்பந்தமாக, ஒரு வங்கி ஊழியர் அவனிடம் பேச வந்திருந்தார். அவனுடைய ஈமெயில் முகவரியைக் கேட்டார்.

வியாபாரி, "ஈமெயில் முகவரி இல்லை" என்று பதிலளிக்க, "ஈமெயில் இல்லாமலே இந்தக் காலத்தில் இவ்வளவு முன்னேறி விட்டீர்களா..? உங்களுக்கு மட்டும் ஈமெயில், இன்டர்நெட் எல்லாம் தெரிந்திருந்தால்...?" என்று ஆச்சரியமாகக் கேட்டார் வங்கி ஊழியர்.

"அதெல்லாம் தெரிந்திருந்தால் ஒரு கம்ப்யூட்டர் நிறுவனத்தில் தரை துடைத்துக் கொண்டிருப்பேன்" என்றான் வெங்காய வியாபாரி..!

ஆகவே, வாய்ப்புகள் விலகும்போது கவலைப்படாதீர்கள்...

எல்லாம் நன்மைக்கே என்று எண்ணி தொடர்ந்து முயற்சி செய்தால் மிகப் பெரிய வெற்றி உங்களுக்காகக் காத்திருக்கும்..!

காரைக்கவி

சீத்துவக்கேடு 212

உப்பிடி எங்கட ஆக்கள் மாமிசம் மட்டும் கடவுளுக்குப் படைக்கேல்லை. அவங்கள் உதோட தூங்கள் குடிச்ச கள்ளும் எல்லே படைச்சவங்கள் என்ட விபரங்கள் நிறையப் பழைய பாட்டுகளிலை கிடக்கு என்டார் அப்பு.

நான் முந்திச் சொன்ன மாதிரி எங்கடை ஆக்கள் நல்லா விதம் விதமா கள்ளுக் குடிச்சவங்கள். அதில ஒருவகைக் கள்ளுத்தான் தோப்பிக்கள். உதைப்பற்றி நான் முந்தியும் உனக்கு ஒருக்கா நல்ல விளக்கமாச் சொன்னான் எல்லே என்ட அப்பு, அரிசியிலை இருந்து வடிச்சு எடுக்கிற கள்ளைத்தான் தோப்பிக்கள்ளு என்டிறது என்டார்.

அம்முவனார் என்பொருத்தர் உவரை குடவாயிற் கீரத்தனார் என்டும் சொல்லுறவை. அவர் அகநானூறிலை ஒரு பாட்டிலை மலை ஆட்டை வெட்டி படைக்கேக்கை தோப்பிக்கள்ளையும் படைச்சவங்கள் என்டு ஒருபாட்டிலை சொல்லுறார்.

"தோப்பிக் கள்ளுடன் துருவப்பலி கொடுக்கும்" (அகம்., பா.எ., 35).

உந்தச் செய்தியை பெருந்தலைச் சாத்தனார் என்டவரும் ஒருபாட்டிலை அவங்கள் நல்ல புளிச்ச றறவு என்டகள்ளைப்படைச்சவங்கள் என்டு சொல்லி இருக்கிறார் என்டார் அப்பு.

"நனைமுதிர் நறவின் வாட்பலி கொடுக்கும்" (அகம்., பா.எ., 13).

ஆலூர் மூலங்கிழார் என்டவர் பூக்களிலை செய்த கண்ணியோடு கள்ளையும் எங்கடை ஆக்கள் படைச்சவங்களாம் என்டு ஒருபாட்டிலை சொல்லுறார் கண்டியோ என்டார் அப்பு.

"கள்ளும் கண்ணியும் கையுறையாக நிலைக்கோட்டு வெள்ளை நால்செவிக் கிடாய் நிலைத்துறைக் கடவுட்கு உளப்பட ஓச்சி"(அகம்., பா.எ., 156).

சரி சரி உனக்கு ஒரு விஷயம் தெரியுமே. கள் என்ட சொல் சங்க இலக்கியங்களில அறுபத்து ஏழு இடங்களிலை வந்திருக்கு என்டு போட்டு அதுகளை ஒவ்வொன்டா அப்பு சொன்னார் .

கள் கமழ் நெய்தல் ஊதி எல் பட (திரு 74)
நீடு அமை விளைந்த தே கள் தேறல் (திரு 195)
வினையா இளம் கள் நாற மெல்குபு பெயர (சிறு 45)
இல் அடு கள் இன் தோப்பி பருகி (பெரும் 142)
கள் கமழ் புது பூ முனையின் முள் சினை (பெரும் 214)
கள் அடு மகளிர் வள்ளம் நுடக்கிய (பெரும் 339)
கள் கொண்டி குடி பாக்கத்து (மது 137)
கள் கமழும் நறு நெய்தல் (மது 250)
கள் ஆர் களமர் பெயர்க்கும் ஆர்ப்பே (மது 260)
கள் ஆர் களமர் இரும் செரு மயக்கமும் (மது 393)
கடும் கள் தேறல் மகிழ் சிறந்து திரிதர (மது 599)
களம் - தோறும் கள் அரிப்ப (மது 753)
காஞ்சி மணி குலை கள் கமழ் நெய்தல் (குறி 84)
வேய் பெயல் விளையுள் தே கள் தேறல் (மலை 171)
திருந்து அமை விளைந்த தே கள் தேறல் (மலை 522)
கள் களி செருக்கத்து அன்ன (நற் 35/11)
கள் கமழ் அலர தண் நறும் காவி (நற் 123/6)
கள் கமழ் பொறையாறு அன்ன என் (நற் 131/8)
மென் கள் செல்வம் செல்வம் என்பதுவே (நற் 210/9)

அப்பாடா இவ்வளவும் சொல்லவே தொண்டை நோகுது. கொஞ்சம் பொறு. சடயற்றை மோளின்ரை கடையில போய் கொஞ்சம் தொண்டையை நனைச்சுப்போட்டு வந்து மிச்சத்தை சொல்லுறன் என்டு போட்டு அப்பு கடைப்பக்கமா நடையைக் கட்டினார்.

(இன்னும் ஆடுவம்)

விந்வ கலாபூஷணம் ஜோதிட திலகம் சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்

இவ்வார இராசி பலன்கள்

மேஷம்

மேஷ ராசி அன்பர்களே!

பணவரவுக்குக் குறைவில்லை. தேவையற்ற செலவுகளும் இருக்காது. திருமண வயதில் உள்ள பிள்ளை அல்லது பெண்ணுக்கு வரன் தேடும் முயற்சியில் ஈடுபடலாம். நல்ல வரன் அமைவதற்கு வாய்ப்பு உள்ளது. கணவன் - மனைவிக்கிடையே சிறு அளவில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு உடனே சரியாகிவிடும். அலுவலகத்தில் இதுவரை இருந்த பணி நெருக்கடி இப்போது சற்றுக் குறையும். சக ஊழியர்கள் உங்கள் பணிகளில் உதவி செய்வார்கள். அதனால் மனதில் உற்சாகம் ஏற்படும். வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு நல்ல பதில் கிடைக்கும். வியாபாரம் எதிர்பார்த்தபடியே நடக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சியான வாரம். மற்றவர்களுடன் இணக்கமான சூழ்நிலை நிலவும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும்.

ரிஷபம்

ரிஷப ராசி அன்பர்களே!

பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருப்பதாலும், தேவையற்ற செலவுகள் இல்லை என்பதாலும் குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். ஆரோக்கியம் சிறிதளவு பாதித்தாலும் உடனே நிவாரணம் கிடைக்கும். சிலருக்கு ஆன்மிகப் பயணம் மேற்கொள்ளும் வாய்ப்பு உண்டு. அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். அதற்கேற்ற ஆதாயமும் கிடைக்கும் என்பதால் உற்சாகமாகப் பணிகளில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும். பங்குதாரர்கள் உங்கள் முயற்சிகளுக்கு உதவிக்கரமாக இருப்பார்கள். புதிய வாடிக்கையாளர்களின் அறிமுகம் மகிழ்ச்சி தருவதாக இருக்கும். கும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்குத் தேவையான பணம் கிடைக்கும் என்பதால் பிரச்சினை இருக்காது. அலுவலகத்தில் கூடுதல் பொறுப்புகளும் அதற்கேற்ற சலுகைகளும் கிடைக்கும்.

மிதுனம்

மிதுன ராசி அன்பர்களே!

வருமானம் திருப்திகரமாக இருக்கும். செலவுகளும் அவசிய செலவுகளாகவே இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த நல்ல செய்தி இந்த வாரம் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. அலுவலகத்தில் சக ஊழியர்கள் உங்கள் பணிகளில் உதவி செய்வார்கள். மற்றபடி பதவி உயர்வோ சலுகை உயர்வோ எதிர்பார்க்க முடியாது. விற்பனை இருந்தாலும்கூட அதற்கேற்ற இலாபம் கிடைக்காது. எனவே, பொறுமையை விடாமல் வியாபாரத்தில் கவனமாக இருப்பது நல்லது. பணியாளர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு போதியளவு பண வசதி கிடைப்பதால் மன நிறைவு உண்டாகும். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்கள் தங்கள் பணிகளில் எச்சரிக்கையாக இருப்பது அவசியம்.

கடகம்

கடக ராசி அன்பர்களே!

பொருளாதார வசதி சுமாராகத் தான் இருக்கும். செலவுகளும் குறைவாகவே இருக்கும். உறவினர்களுடன் வீண் மனவருத்தம் ஏற்பட வாய்ப்பு உண்டு. பிள்ளைகளால் உறவினர்களிடையே செல்வாக்கு அதிகரிக்கும். பழைய கடன்கள் தீரும். அலுவலகத்தில் நீண்டநாட்களாக எதிர்பார்த்த சலுகை இப்போது கிடைக்கும். சிலருக்கு அவர்கள் விரும்பிய இடத்துக்கு மாற்றல் கிடைக்கும். சக ஊழியர்கள் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். வியாபாரத்தில் விற்பனை நல்லபடியாக இருப்பதுடன், எதிர்பார்த்ததை விட இலாபம் கூடுதலாகக் கிடைக்கும். பணியாளர்களும் நல்படி ஒத்துழைப்பார்கள். சக வியாபாரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்குடும்ப நிர்வாகத்தில் சிறு சிரமங்கள் ஏற்படும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும்.

சிம்மம்

சிம்ம ராசி அன்பர்களே!

பண வரவுக்கு குறைவிருக்காது. குடும்பச் சூழ்நிலை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். சகோதர வகையில் இருந்துவந்த சச்சரவுகள் மறைந்து சுமுகமான உறவு உண்டாகும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். அலுவலகத்தில் உங்களுக்கு மறுக்கப்பட்டு வந்த சம்பள உயர்வு, பதவி உயர்வு போன்ற சலுகைகள் கிடைக்கும். சிலருக்கு வேறு ஊருக்கு இட மாறுதல் கிடைக்கும். அதிகாரிகள் அனுசரணையாக இருப்பார்கள். வியாபாரத்தில் விற்பனை சற்று மந்தமாகத்தான் இருக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்ப்பது நல்லது. குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்கள் சற்று பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகத்தில் சில சலுகைகள் கிடைக்கும்.

கன்னி

கன்னி ராசி அன்பர்களே!

எதிர்பார்த்ததை விட பணவரவு அதிகமாக இருக்கும். தேவையற்ற செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை. வராது என்று நினைத்த கடன் வந்து சேரும். பிள்ளைகளை அனுஸரித்துச் செல்லவும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். நீண்டநாட்களாக எதிர்பார்த்துக் காத்திருந்த பதவி உயர்வு கிடைக்கும் என்பதால் மனதில் உற்சாகம் அதிகரிக்கும். சக ஊழியர்கள் அனுசரணையாக இருப்பார்கள். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும். பற்று வரவு சுமுகமாக நடைபெறும். கடையை விரிவுபடுத்துவது போன்ற முயற்சிகளை இந்த வாரம் மேற்கொள்ளலாம். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மனதுக்கு உற்சாகம் தரும் சம்பவங்கள் நடைபெறும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகச் சூழ்நிலை மகிழ்ச்சி தரும்.

துலாம்

துலா ராசி அன்பர்களே!

பணவரவு திருப்தி தருவதாக இருக்கும். பிள்ளைகளால் மதிப்பும் மரியாதையும் கூடும். வாழ்க்கைத்துணை வழியில் மகிழ்ச்சி உண்டாகும். உடன்பிறந்தவர்களின் வருகை மனதுக்கு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். தடைப்பட்டு வந்த சுபநிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான சூழ்நிலை கனிந்து வரும். அலுவலகத்தில் தங்கள் பணிகளில் மட்டுமே கவனமாக இருக்கவும். உயர் அதிகாரிகளிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பார்த்த சலுகைகள் சற்று இழுபறிக்குப் பிறகே கிடைக்கும். வியாபாரத்தில் கடுமையாக உழைத்தால் மட்டுமே விற்பனையை அதிகரிக்க முடியும். சக வியாபாரிகளுடன் இணக்கமாக நடந்து கொள்ளவும். பங்குதாரர்களிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைப்பது இழுபறியாகும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் ஏற்படும். வேலைக்குச் செல்லும் பெண்கள் அலுவலகத்தில் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

விருச்சிகம்

விருச்சிக ராசி அன்பர்களே!

பணவரவு ஓரளவு திருப்தி தரும். வீண் செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை. விலகிச் சென்ற உறவினர்கள் உங்களைப் புரிந்துகொண்டு உறவு பாராட்டுவார்கள். கணவன் - மனைவிக் கிடையே மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பிருப்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. இரவுநேரத்தில் பயணம் மேற்கொள்வதைத் தவிர்க்கவும். அலுவலகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். சிலருக்கு விரும்பத்தகாத இடமாற்றம் ஏற்படக்கூடும். அதிகாரிகளிடம் பக்குவமாக நடந்து கொள்ளவும். சக ஊழியர்களின் சொந்த விஷயங்களில் தலையிடவேண்டாம். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் சுமாராகத்தான் இருக்கும். பற்று வரவில் பிரச்சினை எதுவும் இருக்காது. குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சியான வாரம். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகத்தில் கூடுதல் பொறுப்புகள் கிடைக்கும்.

தனுசு

தனுசு ராசி அன்பர்களே!

தேவையான அளவுக்கு பணவரவு இருந்தாலும், சேமிக்க முடியாதபடி செலவுகள் ஏற்படும். சிலருக்கு சிறிய அளவில் மருத்துவச் செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். சிலருக்கு வெளி மாநிலங்களில் அமைந்திருக்கும் பிரசித்திபெற்ற ஆலயங்களை தரிசிக்கும் சந்தர்ப்பம் ஏற்படும். அலுவலகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். சக ஊழியர்களிடம் அனுசரித்து நடந்துகொள்வது அவசியம். வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போலவே நடைபெறும். சக வியாபாரிகளுடன் பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் எச்சரிக்கையாக நடந்துகொள்ளவும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு செலவுகள் அதிகரிப்பதால் சிரமம் ஏற்படும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு பணிகளில் மிகுந்த கவனம் தேவை.

மகரம்

மகர ராசி அன்பர்களே!

பணவரவு திருப்தி தருவதாக இருக்கும். ஆனால், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும் என்பதால் சிறிது கடன் வாங்கவும் நேரிடும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிரச்சினைகள் மறைந்து மகிழ்ச்சி உண்டாகும். அலுவலகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வு மற்றும் சம்பள உயர்வு கிடைக்கும். சிலருக்கு புதிய பொறுப்புகள் வந்துசேரும். பணி நிரந்தரம் உண்டாகும். அதிகாரிகளின் ஆதரவு கிடைப்பதால் உற்சாகமாகப் பணிகளில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் விற்பனையை அதிகரிக்க சற்று கூடுதலாக உழைக்கவேண்டி இருக்கும். உழைப்புக்கேற்ற இலாபம் கிடைப்பதால் உற்சாகம் உண்டாகும். சக வியாபாரிகள் இணக்கமாக நடந்துகொள்வார்கள். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு சிரமம் எதுவும் ஏற்படுவதற்கில்லை. வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு மகிழ்ச்சியான வாரம்.

கும்பம்

கும்ப ராசி அன்பர்களே!

வருமானம் திருப்தி தருவதாக இருந்தாலும், தேவையற்ற செலவுகளால் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படக்கூடும். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வழக்குகளில் இருந்துவந்த பிற்போக்கான நிலை மாறி, சாதகமான தீர்ப்பு கிடைக்கும். அலுவலகத்தில் உங்களின் திறமை வெளிப்படும். உயர்ந்த பதவி தேடி வரும். சம்பள உயர்வும் கிடைக்கும். சக ஊழியர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவும். வேறு வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு சாதகமான பதில் கிடைக்கும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும். பணியாளர்கள் விற்பனையை அதிகரிப்பதில் ஆர்வம் காட்டுவார்கள். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு வீட்டுச் செலவுகள் அதிகரிக்கும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகத்தில் சலுகைகள் கிடைக்கும்.

மீனம்

மீன ராசி அன்பர்களே!

பண வரவுக்குக் குறைவில்லை. அதேசமயம் சில தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். அவசியத் தேவை என்றாலும்கூட இப்போது கடன் வாங்குவதைத் தவிர்த்துவிடுவது நல்லது. சிலருக்கு தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். அலுவலகத்தில் உங்கள் பணிகளில் கூடுதல் கவனம் தேவை. இப்போதைக்கு சலுகைகள் எதையும் எதிர்பார்க்க முடியாது. சிலருக்கு இட மாறுதல் கிடைப்பதற்கும் வாய்ப்பு உள்ளது. சக ஊழியர்களிடம் இணக்கமாக நடந்துகொள்ளவும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் இலாபம் கிடைக்காது. வியாபாரம் அபிவிருத்தியடைய கூடுதலான முயற்சியும் உழைப்பும் தேவை. பங்குதாரர்களிடம் போதுமான ஒத்துழைப்பை எதிர்பார்க்க முடியாது. குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு செலவுகளால் சற்று சிரமப்படவேண்டியிருக்கும். வேலைக்குச் செல்லும் பெண்கள் அலுவலகத்தில் சலுகைகள் எதையும் எதிர்பார்க்கமுடியாது.

தமிழன் சிறுகதை

மனிதாபிமானம்

நீண்ட நாட்களாகியும் என்னால் பக்கத்து ஊரிலிருக்கும் எனது உறவினர் வீட்டுக்குப் போக முடியாமல் போய்விட்டது.

இதனால் எப்படியும் இன்று அங்கு கட்டாயம் போய்வரவேண்டும் என்று என்னுடைய மனதிற்குள் உறுதியாக நினைத்துக் கொண்டேன்.

"புள்ளே... நான் இண்டைக்குப் பக்கத்து ஊருக்கு அங்கு இருக்கின்ற என்னுடைய உறவினர் வீட்டுக்கு நான் கட்டாயம் போகனும். அங்கு போய் நிறைய நாட்களாகிவிட்டது. பையனுக்கும் போலியோ வந்து கால் ஊனமாகிப் போனதாக சொல்லி மாசக்கணக்கில் போய்விட்டது"

என்று எனது மனைவியிடம் விடயத்தை சொல்லிவிட்டு அங்கு செல்வதற்காகப் புறப்பட்டேன்.

பாவம் அந்தக் குடும்பம். என்னுடைய தந்தை வழியில் அவர்கள் உறவினர்களானவர்கள். தந்தை இருக்கும்போது அடிக்கடி அங்கு போய் வருவார். அவருக்குப் பின்னர் நான் ஆரம்பத்தில் அடிக்கடி போய் வந்தாலும் எனக்கு காலப்போக்கில் வேலைகள் மற்றும் கடமைகள் என்று அதிகரித்துப் போனதால் அடிக்கடி போய்வர முடிவதில்லை. அண்மையில் எனக்குத் தெரிந்த ஒருவர் அவ்வூரிலிருந்து என்னுடைய வேலைத்தளத்திற்கு ஒரு தேவைக்காக வந்திருந்தபோது அந்தக் குடும்பத்தை பற்றி விசாரித்தேன். அப்போதுதான் அந்தப் பையன் போலியோ பாதிப்புக்குள்ளாகி கால்கள் செயலற்றுப் போன விடயம் தெரியவந்தது. எனவேதான், அன்றிலிருந்து எப்படியும் போய்ப் பார்க்க வேண்டும் என்றிருந்தேன். இன்று செல்கிறேன்.

அங்கு சென்ற நான் அந்தப் பையனையே முதலில் விசாரித்தேன். உடனே அவர்கள் அவளிருக்கும் அறைக்கு கூட்டிச் சென்றனர். அவன்மேல் நான் அதிக அன்பு வைத்திருந்தேன். அவனும் அப்படித்தான் என்மேல் பிரியமாக இருப்பான். அவனை அந்த நிலையில் பார்க்க எனக்கு மிகவும் கவலையாக இருந்தது. அவனுடைய தலையைத் தடவிவிட்டபடி

"என்னப்பா... சுகமாயிருக்கியா? உனக்கு என்னப்பா வேண்டும்?" என்றேன். அதனைக் கேட்டவன்

"எனக்கு உள்ளுக்குள் இருந்து கொண்டிருக்க ஒரே எரிச்சலாயிருக்கு மாமா... அதனால் இருந்து கொண்டு விளையாட ஏதாவது விளையாட்டுப் பொருட்கள் இருந்தால் தாருங்கள்" என்றான்.

அதனைக் கேட்க அவன்மேல் பாவமாக இருந்தது. எனவே, "சரிப்பா... நான் உனக்கு எப்படியும் விளையாட்டுப் பொருட்களை

வாங்கித் தருகிறேன்" என்றேன்.

பின்னர் வீட்டுக்கு வந்த நான் எனக்குத் தெரிந்த ஒரு பிசியோதெரபிஸ்ட் மூலம்

புத்தளம் ஸாலிஹ் அஸீம்

ஆலோசனையைப் பெற்று அந்தப் பையனுக்காக என்னால் முடிந்தளவு சற்று விலை கூடிய மூன்று பொருட்களை வாங்கினேன். ஆனாலும், அதனை எப்படி அவனிடம் கொடுப்பதென்று தெரியாமல் இருந்தபோதுதான் என்னுடன் வேலை பார்க்கும் எனது நண்பர் அவ்வூருக்கு ஒரு வேலையாகப் போவதாக சொல்லவே எனக்கு அது வாய்ப்பாகப் போக உடனே அவனிடம்

"எனக்கு ஒரு உதவி செய்வியா..?"

என்று கேட்டபடி விடயத்தை சொல்ல உடனே அவனும் தான் அப்பொருட்களைக் கொண்டு சென்று அவனிடம் கொடுப்பதாக சொல்லவே அப்பொருட்களை அவனிடம் கொடுத்தனுப்பினேன்.

அந்தப் பொருட்களை எடுத்து சென்றவன் மூன்றில் ஒன்றை தன்னுடைய பிள்ளைக்குக் கொடுத்துவிட்டு மிகுதி இரண்டை அங்கு கொண்டு சென்று கொடுத்ததும் அவள் அவ்வாறு கஷ்டப்பட்டு கொண்டு வந்து கொடுத்த உதவிக்காக கொடுத்த இரண்டில் ஒன்றை நண்பனிடம் கொடுத்து

"இதனைக் கொண்டுபோய் உங்கள் குழந்தைக்கு கொடுங்கள்"

என்று ஒன்றை அவனிடமே திருப்பிக் கொடுக்க தான் ஒன்றை எடுத்து விட்டேன் என்று சொல்லவுமில்லை. அல்லது

எனக்கு இது வேண்டாமென்று மனசாட்சிப்படி திருப்பிக் கொடுத்து விட்டும் வராமல் அதனையும் வாங்கிக்கொண்டு குறையுடையவனுக்காக தேடி வாங்கிய மூன்றில் இரண்டை எந்தக்குறையுமில்லாத தன்னுடைய பிள்ளைக்காக எடுத்துக்கொண்டான் மனிதாபிமானமே அந்த இல்லாத நண்பன். அதனை நினைக்க எனக்கு மிகவும் கவலையாகவே இருந்தது.

(0 1 -080)

சாரா ஆர்மிடேஜ் கப்பல்

ஆதிலெட்சுமி கப்பலது
கண்ணீரை
துடைக்குமுன்னே
சீலாயத்து கடல் நடுவில்
அருத்த கப்பலொன்றும்
அப்படியே கவுந்துருச்சி...

கடலம்மா கடலம்மா...
உன் மக்கள் மேல
உனக்கேதும்
கோபமா...
கோழி பலிகொடுத்தோம்
ஆட்ட நேர்த்தி வெச்சோம்...
நேர்த்தி வெச்ச சாமானத்த
நீ நேரத்தோட வாங்காம...

நேர்த்தி வெச்ச
எங்களையே
பலியெடுப்ப தென்னம்மா...
உன் உப்புத்தண்ணி
சமுத்திரத்தில்
மாமிசமாய் சமைச்சித்திங்க
எலும்புக்கூட போலிருக்கும்
நாங்களுதான் சிக்கினமோ...

பழனியப்பன் காதில் கூட
அந்த சேதி வந்துவிழ
தன்னோடு ஆதிலெட்சுமி
கப்பலிலே பயணிக்காத
மக்களது நஞ்சிமில்லா
வெகுளி முகம்
கண்ணுமுன்ன
வந்திதுது...

ஐயோ எத்தனை
காலமையா
கூப்பிடு சாகுறது
ஊசலடிச்சி போன
பருக்கை சோறாட்டம்
உசுரெல்லாம்
மெதக்குறதே...
என்னெல்லாம்
கதறிவிட்டான்...

சாரா ஆர்மியென்றும்
ஆதிலெட்சுமி என்றும்
வரலாற்றில் பதிந்த ஈந்த
கப்பல் ரெண்டு
மட்டுமில்ல...

ஈன்னும் எத்தனையோ
படகுகளில் பயணம் செய்து
பாவப்பட்ட
சனங்களெல்லாம்
படகு திசைமாறி...

பழிவாங்கி வீட்டதனை
எவருமே பதியவில்லை...

ஒவ்வொரு கடற்கரையின்
ஓரத்திலும் அப்பப்போ
பிணங்கள் வந்து
ஒதுங்கி நிக்கும்...

நாதியத்த பிணங்கள்
என்று காக்கா
குருவியெல்லாம்
கண்ணுக்காத
கொத்திவைக்கும்
உருவம் கூட தெரியாத
உருக்குலஞ்ச
பிணங்களெல்லாம்...

கடலலையால் மீண்டும்
அரிக்கப்பட்டு அழிவடைஞ்சி
கடலில் வாழும் சீவனுக்கு
உணவாகப் போமிருக்கு...

சில பிணங்கள்
அங்கிலேய காவல்கார
சிப்பாமி அதிகாரிமார்களால
பெரும் குழிமில்
தள்ளப்பட்டு
பொதைச்ச கூடம்
மறைஞ்சிருக்கு...

ஈத்தனை கொடுமைகள
மனசுல நிறைச்சிக்கிட்டு
பழனியப்பன் பயபோல
ஈன்னும் பலபேரு
உயிர்தப்பி நடமாடும்
பிணமாக...

கோப்பிக்காட்டில்
அங்கங்கே குடியேறி
அனாதை சனமாட்டம்
துக்கக்கஞ்சி குடிச்சாங்க...

கூப்படி வந்து சேர்ந்துவனில்
பழனியாண்டி
சொக்கருதுது ரெங்கம்மா
சூப்பாபென்று ராகலைக்கு
வந்தவரில் ஸவர்களும்
அடங்கினரே...

(சொல்ல மறந்த கதை
ஈன்னும் சொல்லப்படும்)

தொடரும்...
எம்.ராமதாஸ்
கறம்பொடை

தமிழன் தொடர்கதை

அகரன்

அத்தியாயம்

மணிகண்டனுக்கு எதுவும் புரியவில்லை. அவன் சற்று நேரம் அப்படியே நின்றவன் கோயிலை சுற்றிப் பார்க்க விரும்பினான். எனவே, முதலில் கோயிலினுள்ளே போவதற்கு முன்னர் எட்டியிருந்தவாறு நிதானமாகப் பார்த்தான். இரண்டு, மூன்று அடி உயரத்தில் முனிசாமி கறுப்பு உருவத்தில் பட்டாக்கத்தியை வலது கையில் உயர்த்திப் பிடித்தவாறு கண்களில் கோபவெறி தோன்ற ஆக்ரோஷமாக நின்றிருந்தார். கோயிலில் 10 பேர் வரை நிற்குமளவுக்குத்தான் இடமிருந்தது. கோயிலுக்கு வெளியே கறுப்பு நிற சுவர் ஒன்றிருந்தது. அதில் அந்தக் கோயிலைக் கட்டுவதற்கு உதவியும் ஒத்தாசையும் வழங்கியவரின் பெயர் பொறிக்கப்பட்டிருந்தது. அவர் பெயர் குலசேகரன். அவர் ஒரு கட்டடம் கட்டும் ஒப்பந்தக்காரர் என்று எழுதப்பட்டிருந்தது.

அவன் கோயிலின் பின்புறம் சென்றான். நாலைந்து மரங்கள் இருந்தன. ஒரு குறிப்பிட்ட இடத்தில் கற்கள் குவிக்கப்பட்டிருந்தன. கோயிலின் பின்புறம் ஓரளவு இடமிருந்தது. பக்கத்தில் ஓர் ஆறு ஓடிக்கொண்டிருந்தது. வலதுபுறம் வாழைமரங்கள் இருந்தன. இரண்டு வாழைமரங்கள் மட்டும் வெட்டப்பட்டுக் கீழே கிடத்தப்பட்டிருந்தன. அவை கோயில் வாசலில் கட்டுவதற்காக வைக்கப்பட்டிருக்கலாம். நாளை திருவிழாவிற்கான ஏற்பாடுகளை இப்போதே செய்யத் தொடங்கியிருக்கலாம். அவன் மறுபடியும் கோயிலின் முன்புறம் வந்தான். இந்தக் கோயிலில் ஏதோ அபாரசக்தியுடன் ஏதோ இருக்கின்றது. ஆனால், என்னவென்றுதான் தெரியவில்லை. அவன் குழப்பத்துடன் தன் வீட்டை நோக்கி நடந்தான். அவன் வீட்டை அடைந்தபோது அஞ்சனா பிள்ளைகளுக்குப் பாடம் நடத்திக் கொண்டிருந்தாள். அவனைக் கண்டவுடன் ஓடிவந்தாள்.

"இப்போ கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி மோட்டார் சைக்கிளில் டிப்பொப்பாக உடுத்திக்கிட்டு ஒருத்தர் வந்தாரு. உங்க பேரை சொல்லி விசாரிச்சாரு. கேட்டதுக்கு உங்களோட நண்பன்னு சொன்னாரு. பேர் கூட சுகுமார்னு சொன்னாரு. நீங்க வந்தவுடன் இந்த விசிட்டிங் கார்டைக் கொடுத்து உடனடியா பேச சொன்னார். ரொம்ப முக்கியமான விஷயமாம்."

அவள் மணிகண்டனிடம் அதைக் கொடுத்தாள். மணிகண்டன் அதை வாங்கிக் கொண்டான்.

"அதுசரி. நீங்க சாப்பிட்டீங்களா அஞ்சனா?"

"இல்லை. நீங்க வந்ததும் சாப்பிடலாமுன்னு இருந்தேன். பண்பரசி அடிக்கடி என்கிட்ட சொல்லுவா. நீங்க எப்பவும் தனியா சாப்பிட மாட்டீங்களாம். யாராவது பக்கத்திலேயே இருக்கணுமாம். அதான்.."

"ஐயையோ..! எதுக்காக இப்படி செய்யறீங்க..? இப்ப மணி என்னாச்சி..? நான் பண்பரசி விஷயமாக அலைஞ்சிக்கிட்டிருக்கேன். இப்பவே அடுக்கடுக்கா பிரச்சினைகள் வந்திட்டிருக்கு. நீங்க எனக்காக காத்திக்கிட்டிருந்து உடம்பைக் கெடுத்துக்காதீங்க.. இந்தாங்க.. இது உங்களுக்குத் தேவைப்படும்னு வாங்கிட்டு வந்தேன்.."

அவள் முகம் திடீரென்று மலர்ந்தது. நிமிடத்தில் சிவந்துவிட்டது. அவள் இதுவரை எந்த ஆணையும் ஏறெடுத்துப் பார்த்ததில்லை. பேசியதுமில்லை.

பாலா சங்குப்பிள்ளை

ஆனால், முதன்முறையாக ஓர் ஆண் அவளுக்காக பொருட்கள் வாங்கி வந்த விடயம் அவளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. உண்மையில் பண்பரசி கொடுத்து வைத்தவள்தான். அவள் மணிகண்டனிடமிருந்து அதை வாங்கிக் கொண்டாள்.

"அப்புறம் இன்னொரு விஷயம். என்னோட அம்மா இங்கே வந்ததுக்கப்புறம் அவங்களைத் தேடி யாராவது அடிக்கடி வருவாங்களா?"

"அம்மா இங்கே அந்த முனிச்சாமியோட கோயிலைக் கட்டுறதுல மும்முரமா இருந்தாங்க. நானும் பண்பரசியும் கூட அடிக்கடி அந்த இடத்துக்குப் போவோம். அம்மா அங்கே கோயிலைக் கட்ட யார் யார்கிட்டயோ உதவி கேட்டாங்க. யாருமே பெரிசா உதவல்ல. அப்போதுதான் ஒருத்தர் வந்தார். அவரு யார், பேர் என்னன்னுறுதெல்லாம் பண்பரசிக்கு மட்டும்தான் தெரியும். அவருதான் குலசேகரன்னுறவர் கிட்ட பேசி கோயில் கட்ட ஏற்பாடு செஞ்சாரு. இதுல ஆச்சரியம் என்னன்னா வேலையை ஒவ்வொரு நாளும் மாலை 6 மணிக்குத் தொடங்கி விடிய விடிய செய்வாங்க. உள்ளூர்ல யாரையும் வேலைக்கு எடுக்கலை. வெளியிலிருந்துதான் கொண்டு வந்தாங்க. கோயில் கட்டுற இடத்தைச் சுற்றி முள்வேலி அமைச்சி யாரும் பார்க்க முடியாதபடி மறைச்சிட்டாங்க. காவலும் போட்டுட்டாங்க. அதுனால யாரும் அந்தப்பக்கம் போக மாட்டாங்க. எப்படியாவது கோயில் கட்டினாலே போதும்னு சந்தோஷப்பட்டுக்கிட்டாங்க. சரியா 6 மாசத்துல கோயில் வேலை முடிஞ்சி திருவிழாவையும் ரொம்ப பிரமாதமா செஞ்சோம். அம்மாதான் முன்னுக்கு நின்று செஞ்சாங்க. அவங்களாலதான் இப்படியொரு கோயில் வந்திச்சின்னு அம்மா மேல எல்லோருக்கும் அன்பும் மரியாதையும் இருந்திச்சி. பண்பரசி என்னோட பாடசாலைக்கு வேலைக்கு வந்து ரொம்ப சந்தோஷமாயிருந்தா. ரெண்டு வருஷம் முடிஞ்ச நிலையிலதான் அவளைத்தேடி அவன் வந்தான். அப்புறம்தான் எல்லாமே நடந்திச்சி.."

"அதுசரி.. நல்லா யோசிச்சி சொல்லுங்க.. அம்மா எப்போவாவது எதுவாவது நினைச்சி வருத்தப்பட்டு நீங்க பார்த்திருக்கீங்களா..?"

அஞ்சனா சற்று நேரம் அமைதியாக இருந்தவள் சட்டென அவனைப் பார்த்தாள்.

"எனக்கு ஞாபகம் வருது. பண்பரசி ஒருமுறை என்கிட்ட ஒரு விஷயம் சொன்னா. ரெண்டு, மூணு முறை சொன்னா. ஆனா, நான் அதை பெரிசா நினைச்சிப் பார்க்கலை.."

(தொடரும்)

2022 ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணத்தில் பிற நாடுகளுக்காக ஆடும் வீரர்கள்

எட்டாவது ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் அவுஸ்திரேலியாவில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இன்று ஞாயிற்றுக்கிழமையுடன் சுப்பர் 12 சுற்று ஆட்டங்கள் நிறைவுக்கு வருகின்றன. இந்தாண்டு உலகக்கிண்ணத் தொடரில் ஒரு நாட்டில் பிறந்து பிற நாடுகளுக்காக ஆடும் வீரர்கள் அதிகமாக காணப்படுகின்றனர். அவர்களில் பெரும்பாலான வீரர்கள் நியூசிலாந்து அணிக்காக விளையாடுகின்ற வீரர்களாகும். எனவே, அவை தொடர்பிலான தகவல்களைப் பார்க்கலாம்.

ஷான் மசூத் (பாகிஸ்தான்)

குவைத்தில் பிறந்த ஷான் மசூத், மத்திய கிழக்கு போரின்போது குவைத் மீது ஈராக் படையெடுத்த வேளையில் பாகிஸ்தானுக்கு குடிபெயர்ந்தார். மசூதின் தந்தை பாகிஸ்தான் நாட்டவர் என்பதால் அவர்கள் போரின்போது அங்கு தஞ்சமடைந்தனர்.

ஆனால், விரைவில், மசூத் தனது பெற்றோருடன் இங்கிலாந்துக்கு குடிபெயர்ந்து அங்கு தனது உயர்கல்வியைத் தொடர்ந்தார்.

அதன்பின் மீண்டும் பாகிஸ்தானுக்குத் திரும்பிய பிறகு, விளையாட்டு அறிவியலில் மேலாண்மை பட்டப்படிப்பைப் படிக்கும்போது பாகிஸ்தானின் உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளில் ஆட ஆரம்பித்தார். சில ஆண்டுகளுக்குப் பிறகு அவர் பாகிஸ்தானின் டெஸ்ட், ஒருநாள் மற்றும் ரி20 என மூவகை கிரிக்கெட்டிலும் விளையாடுகின்ற வாய்ப்பைப் பெற்றுக் கொண்டார். டெஸ்ட் வீரராக வலம்வந்த ஷான் மசூத், 9 ஆண்டுகளுக்குப் பிறகு வெள்ளைப்பந்து அணியில் இடம்பெற்றார்.

மார்க்சாப்மன் (நியூசிலாந்து)

கடந்த 2014ஆம் ஆண்டு ஒருநாள் போட்டியில் ஹொங்கொங் அணிக்காக மார்க் சாப்மன் சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமானார். அப்போது அவருக்கு 20 வயது. அறிமுக ஒருநாள் போட்டியில் சதமடித்த உலகின் 10ஆவது வீரர் என்ற சாதனையைப் படைத்தார். எனினும், ஹொங்கொங் அணிக்காக அந்தப் போட்டியுடன் ஒரேயொரு ஒருநாள் போட்டியில் மட்டும் விளையாடிய பின்னர் 2018இல் நியூசிலாந்து அணியுடன் இணைந்துகொண்டார். அதே ஆண்டு இங்கிலாந்து அணிக்கெதிராக நியூசிலாந்து அணிக்காக அறிமுகத்தைப் பெற்று நியூசிலாந்து அணியில் விளையாடி வருகிறார்.

டெவோன் கான்வே (நியூசிலாந்து)

தென்னாபிரிக்காவின் ஜொஹனஸ்பர்க்கில் பிறந்த டெவோன் கொன்வே முதல்தரப் போட்டிகளில் மாத்திரமே நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடியுள்ளார். எவ்வாறாயினும், தென்னாபிரிக்கா தேசிய அணியில் வாய்ப்புக் கிடைக்காத காரணத்தால் 2017இல் நியூசிலாந்துக்கு குடிபெயர்ந்தார். இதனையடுத்து வெலிங்டன் கழகத்துக்காக ஆடி வந்த அவர், 2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் சிறந்த உள்ளூர் கழகமட்ட வீரராகத் தெரிவாகினார். கடந்த 2020ஆம் ஆண்டு மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான ரி20 போட்டியில் நியூசிலாந்துக்காக அறிமுகத்தைப் பெற்றுக்கொண்ட அவர், 2021 மார்ச்சில் ஒருநாள் அறிமுகத்தையும், அதே ஆண்டு ஜூனில் டெஸ்ட் அறிமுகத்தையும் பெற்றுக்கொண்டார்.

க்ளன் பிலிப்ஸ் (நியூசிலாந்து)

தென்னாபிரிக்காவில் பிறந்த க்ளென் பிலிப்ஸ் தனது 5ஆவது வயதில் தனது குடும்பத்துடன் நியூசிலாந்து சென்றார். நியூசிலாந்தின் ஒடாகோ கழகத்தில் ஆடி திறமைகளை வெளிப்படுத்திய அவர், 2016இல் ஐ.சி.சியின் 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கிண்ண நியூசிலாந்து அணியில் இடம்பிடித்தார். கடந்த 2017இல் தென்னாபிரிக்காவுக்கு எதிராக ரி20 அறிமுகத்தைப் பெற்றுக்கொண்ட அவர், 2020இல் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக டெஸ்ட் அறிமுகத்தையும், அதே ஆண்டு அயர்லாந்து அணிக்கு எதிராக ஒருநாள் அறிமுகத்தையும் பெற்றுக்கொண்டார்.

இஷ் சோதி (நியூசிலாந்து)

இஷ் சோதி என்ற பெயரில் அழைக்கப்படும் இந்தர்பீர் சிங் சோதி இந்தியாவின் பஞ்சாபிலுள்ள லூதியானாவில் பிறந்தார். 4ஆவது வயதில் பெற்றோருடன் இந்தியாவை விட்டு வெளியேறிய சோதி, 2013இல் நியூசிலாந்து அணியில் இணைந்தார். பங்களாதேஷ் அணிக்கெதிராக டெஸ்ட் அறிமுகத்தைப் பெற்றுக்கொண்ட இவர், 2014இல் ரி20 அறிமுகத்தையும், 2015இல் ஒருநாள் அறிமுகத்தையும் பெற்றுக்கொண்டார்.

கிறிஸ் ஜோர்டன் (இங்கிலாந்து)

கரீபியன் தீவுகளிலுள்ள பார்படோஸில் பிறந்த கிறிஸ் ஜோர்டன், அங்கு ஆரம்பக் கல்வியை மேற்கொண்டார். எனினும், அவரது அம்மாவின் பெற்றோர் பிரித்தானிய குடியுரிமையைப் பெறவராகளாக இருந்ததன் காரணமாக, கிறிஸ் ஜோர்டன் உயர் கல்விக்காக இங்கிலாந்துக்கு குடிபெயர்ந்த நிலையில், சர்ரே அணியில் இணைந்துகொண்டார். சுமார் 6 ஆண்டுகள் சர்ரே அணிக்காக விளையாடிய பிறகு 2012இல் மீண்டும் பார்படோஸ் திரும்பிய அவர், அங்குள்ள தேசிய கிரிக்கெட் அணிக்காக உள்ளூர்ப் போட்டிகளில் களமிறங்கினார்.

இதையடுத்து 2013ஆம் ஆண்டு சசெக்ஸ் அணியுடன் கிறிஸ் ஜோர்டன் இணைந்துகொண்டார். மேற்கிந்திய தீவுகள் அணியிலிருந்தும், இங்கிலாந்து அணியிலிருந்தும் தேசிய கிரிக்கெட் அணியில் சேர அவருக்கு அழைப்பு வந்தது. ஆனால், அவர் பிறந்த நாட்டை விட, இங்கிலாந்து அணிக்காக விளையாடத் தீர்மானித்தார். அதன்படி, 2013இல் இங்கிலாந்துக்காக ஒருநாள் சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகத்தைப் பெற்றார்.

பென் ஸ்டோக்ஸ் (இங்கிலாந்து)

இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவரான பென் ஸ்டோக்ஸ் நியூசிலாந்தைப் பிறப்பிட மாகக் கொண்டவர். பென் ஸ்டோக்ஸின் தந்தையான ஜெரார்ட் ஸ்டோக்ஸ் ஒரு புகழ்பெற்ற நியூசிலாந்து ரக்பி வீரர். இங்கிலாந்தின் மேற்குப் பகுதியிலுள்ள வொர்க்கிங்டன் டவுன் ரக்பி அணியின் பயிற்சியாளராக பணியாற்றியதன் காரணமாக அவரது குடும்பம் இங்கிலாந்துக்கு குடிபெயர்ந்தது. அப்போது பென் ஸ்டோக்ஸுக்கு 12 வயதாகும். 15ஆவது வயதில் கிரிக்கெட் விளையாட்டை ஆரம்பித்த பென் ஸ்டோக்ஸ், தனது பாடசாலை அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி வந்தார். இதன்போது வெளிப்படுத்திய திறமை காரணமாக இங்கிலாந்து 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் அணியில் அவர் உள்வாங்கப்பட்டார். அவரது தந்தையின் சேவை முடிந்ததும் பென் ஸ்டோக்ஸின் குடும்பத்தார் நியூசிலாந்து திரும்ப முடிவு செய்தாலும், அவர் இங்கிலாந்துக்காக கிரிக்கெட் விளையாட முடிவு செய்தார்.

டிம் டேவிட் (அவுஸ்திரேலியா)

சிங்கப்பூரில் பிறந்த டிம் டேவிட்டின் தந்தை ரொட் டேவிட் 1997 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் சிங்கப்பூர் அணியைப் பிரதிநிதித்துவப் படுத்திய வீரர். 1997இல் ஆசியாவில் ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக டிம் டேவிட்டின் குடும்பம் அவுஸ்திரேலியாவிற்கு குடிபெயர்ந்தது. அதன்படி, அந்நாட்டில் வளர்ந்த அவர், தனது தந்தையின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி தனது கிரிக்கெட் விளையாட்டில் தேர்ச்சி பெற்றார்.

அவருக்கு சிங்கப்பூர் 19 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் அணியில் விளையாடுவதற்கான அழைப்பு கிடைத்தது. அதன்படி, 2018ஆம் ஆண்டு ஐ.சி.சி. 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் சிங்கப்பூர் அணியைப் பிரதிநிதித்துவப் படுத்தி விளையாடிய டிம், அடுத்த ஆண்டே சிங்கப்பூர் ரி20 அணியில் விளையாடுகின்ற வாய்ப்பைப் பெற்றுக் கொண்டார்.

அவுஸ்திரேலியா குடியுரிமைக்குத் தகுதி பெற்றிருந்த அவர், சிங்கப்பூர் தேசிய அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தியதுடன், அவுஸ்திரேலியாவின் முதல்தரப் போட்டிகளிலும் பங்கேற்றார்.

அங்கு அவர் சிறப்பாக செயல்பட்டதால், 2022இல் அவுஸ்திரேலிய அணியில் வாய்ப்பைப் பெற்றுக்கொண்டார்.

ரிச்சர்ட் பெரிங்டன் (ஸ்கொட்லாந்து)

தென்னாபிரிக்காவில் பிறந்த ரிச்சர்ட் பெரிங்டன், சிறுவயதிலேயே தனது குடும்பத் தாருடன் ஸ்கொட்லாந்துக்கு குடிபெயர்ந்தார். 2006இல் ஐ.சி.சியின் 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணத்தில் ஸ்கொட்லாந்து அணிக்காக விளையாடிய அவர், 2008இல் அயர்லாந்து அணிக்கெதிரான ஒருநாள் போட்டியில் அறிமுகமானார். அதே ஆண்டு அந்த அணிக்கெதிராக ரி20 அறிமுகத்தையும் பெற்றுக்கொண்டார்.

சிமி சிங் (அயர்லாந்து)

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் பிறந்த 35 வயதான சிமி சிங், 2018இல் அயர்லாந்துக்காக கிரிக்கெட் விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்ட 19 வீரர்களில் ஒருவர். கடந்த 2017இல் நடைபெற்ற பங்களாதேஷ், நியூசிலாந்து அணிகளுடனான முத்தரப்பு ஒருநாள் தொடரில் நியூசிலாந்து அணிக்கெதிரான போட்டியில் அறிமுகத்தைப் பெற்றுக்கொண்ட சிமி சிங், 2018இல் நெதர்லாந்தில் நடைபெற்ற முத்தரப்பு ரி20 தொடரில் அறிமுகத்தைப் பெற்றுக் கொண்டார்.

கார்த்திக் மெய்யப்பன் (ஐக்கிய அரபு இராச்சியம்)

இந்தியாவின் சென்னையில் பிறந்த கார்த்திக் மெய்யப்பன் தற்போது ஐக்கிய அரபு இராச்சியம் அணிக்காக கிரிக்கெட் விளையாட வருகிறார். இலங்கைக்கு எதிரான முதல் சுற்று ஆட்டத்தில் கார்த்திக் மெய்யப்பன் ஹட்ரிக் சாதனை படைத்தார்.

இதன்மூலம் 2022 ரி20 உலகக் கிண்ணத்தில் ஹட்ரிக் சாதனை படைத்த முதல் வீரராகவும், ஒட்டுமொத்தத்தில் 5ஆவது வீரராகவும் இடம்பிடித்தார்.

இதேவேளை, கார்த்திக் மெய்யப்பனுடன் சேர்த்து பிற நாடுகளைச் சேர்ந்த இன்னும் எட்டு வீரர்கள் ஐக்கிய அரபு இராச்சிய அணிக்காக விளையாடியிருந்தனர்.

இதில் 6 பேர் இந்தியாவைச் சேர்ந்த வீரர்களாகவும், இருவர் பாகிஸ்தானைச் சேர்ந்த வீரர்களாகவும் உள்ளனர்.

நன்றி – த பபரே

பல்கலைகளுக்கு இடையிலான மகளிர் மேம்பாட்டு ரக்பி போட்டியில் ஜயவர்தனபுர பல்கலைக்கழக அணி சம்பியன்

(அஷ்ரப் ஏ.சமத்)

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மகளிர் மேம்பாட்டு ரக்பி போட்டியில் ஜயவர்தனபுர பல்கலைக்கழக மகளிர் ரக்பி அணி சம்பியனாகவும், கொத்தலாவெல பாதுகாப்பு பல்கலைக்கழக மகளிர் ரக்பி அணி இரண்டாம் இடத்தையும், சப்ரகமுவ பல்கலைக்கழக மகளிர் ரக்பி அணி மூன்றாம் இடத்தையும் பெற்றன.

அரசாங்கத்தின் சார்பாக கொழும்பு பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் இலங்கையில் மாவட்ட மட்டத்தில் ரக்பி போட்டிகளுக்கு அனுசரணை வழங்கியது. பிராந்தியத்தில் விளையாட்டுத்துறையை ஊக்குவிப்பதன் மூலம் நட்பு நாடுகளின் இளைஞர்களை ஒன்றிணைக்கும் நோக்கத்தின் கீழ் இந்த அனுசரணை வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

குறித்த ரக்பி போட்டியில் மொத்தம் எட்டு அணிகள் பங்கேற்றன. கண்டி, காலி மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் போட்டிகள் நடைபெற்றன. இதன் இறுதிப்போட்டி கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

இறுதி சுப்பர் 12 ஆட்டத்தில் இங்கிலாந்தை எதிர்கொள்ளும் இலங்கை

நடப்பு இருபதுக்கு 20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இலங்கை அணி தங்களுடைய இறுதி சுப்பர் 12 ஆட்டத்தில் எனிக்கிழமை இங்கிலாந்து அணியை எதிர்கொள்கிறது. இலங்கை அணி முன்னதாக ஆடிய நான்கு போட்டிகளில் இரண்டு வெற்றிகளையும், இரண்டு தோல்விகளையும் பெற்றதன் காரணமாக குறித்த இங்கிலாந்து அணியுடனான ஆட்டத்தில் ஆறுதல் வெற்றிபெற வேண்டிய கட்டாயத்தில் காணப்படுகிறது.

சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறும் குறித்த போட்டியானது இலங்கை நேரப்படி பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகிறது. குறித்த போட்டி இங்கிலாந்து அணிக்கும் கூட மிக முக்கியமான போட்டியாக காணப்படுகிறது. இங்கிலாந்து அணி சிறந்த நெட்ரன்ரேட் அடிப்படையில் இந்த போட்டியில் வெற்றிபெறும் பட்சத்தில் இங்கிலாந்து அணி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெறுகின்ற வாய்ப்பை பெறும்.

எனவே, இந்த ஆட்டம் விறுவிறுப்பாக அமையும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. இலங்கை - இங்கிலாந்து அணிகள் இதுவரையில் 13 இருபதுக்கு 20 சர்வதேச போட்டிகளில்

மோதியுள்ள நிலையில், இங்கிலாந்து அணி 9 போட்டிகளில் வெற்றிபெற்று ஆதிக்கம் செலுத்துகிறது.

இலங்கை அணி வெறும் 4 போட்டிகளில் மாத்திரம் வெற்றி பெற்றிருக்கிறது.

கடந்த 2016ஆம் ஆண்டிலிருந்து இரு அணிகளும் 7 போட்டிகளில் நேருக்கு நேர் மோதியுள்ள நிலையில், இதுவரையில் 6 வருடங்களாகியும் இலங்கை அணி இங்கிலாந்து அணியுடன் வெற்றி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எங்கள் சிங்கங்களை வாழ்திட நீங்களும் இணைந்துக்கொள்ளுங்கள்
QR குறியீட்டை Scan செய்து உங்கள் வாழ்த்துகளை பதிவு செய்யுங்கள்
தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog
Champion
Germ Fighting Real Soap

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7